குண்டூசி

மே....எட்டு அணா

873
2.51
378

இந்தியாவின் தலைசிறந்த
பட்டணம் பொடி

காலையில் எழுந்தவுடன் சுறுசுறுப்புடனிருக்க
ஒரு சிட்டிக்கை

உடல் சுத்தி செய்து உண்டி அருந்தி உறுதியுடன்
உழைப்பிலிறங்க ஒரு சிட்டிக்கை

பகல் போஜனத்திற்குப்பின் பரவசமடைய
ஒரு சிட்டிக்கை

மனோகரமான மாலை வேளையில் மனநிம்மதியுட
னிருக்க ஒரு சிட்டிக்கை

பெண்டு பிள்ளைகளுடன் உண்டு களித்து
உறங்கப்போகுமுன் ஒரு சிட்டிக்கை

T.A.S. ரத்தினம்
பட்டணம் பொடி

T.A.S. ரத்தினம் பிரதர்ஸ், தபால் பெட்டி 1151, வண்ணாரப் பேட்டை, மதராஸ்.

புதுமையிலும்
புதுமை!
களவாட
வந்தவனை
காதலிக்கச்
சொல்லுகிறள்
கன்னி!
ஏவி எம் புரொடக்ஷன்ஸ்
ஓர் இரவு
சென்னையில்
பாரகன் · கிரௌன்
லக்ஷ்மி · திருமகள்
மற்றும்
50 நகரங்களில்
வெற்றிகரமாக நடைபெறுகிறது
கதை வசனம்:
C.N. அண்ணாதுரை M.A.
AVM
புரொடக்ஷன்ஸ்
டைரக்ஷன்:
P. நீலகண்டன்

இலவசம்



எங்கள் கறுப்பு மயிர் தைலம் No 501 (Regd.) எல்லா வித கேசங்களுக்கும், கருகருத்த காட்சி அளிக்கும் மயிர் உதிராது. இதை உபயோகித்தால நீண்டு, பளபளப்புடன் சுருளும். ஒரு பாட்டில் ரூ. 1-12-0

மூன்று 4-0-0

இத்துடன் 18 வருஷ உத்திர வாதமுள்ள அழகான கைக் கடியாரமும், ஒரு நியூ கோல்ட் மோதிரமும் ஒரு பாட்டில் வாங்குபவர்களுக்கு அனுப்பப்படும். மூன்று பாட்டில வாங்குவோருக்கு 3 கைக்கடியாரமும், 3 மோதிரங்களும் அனுப்பப்படும்.

திருப்தியில்லாவிடில் பணம் வாபஸ செய்யப்படும்.

JAI HIND WATCH Co.

P.B. 97 SITLA TEMPLE AMRITSAR.

T.L.

ஆழ்ந்த நித்திரையை அனுபவியுங்கள்

ஸாட்ரின் ஒரு ஆச்சரியகரமான, ஸயின்டிபிக் தயாரிப்பு. இதை முகர்வதின் மூலம் நீங்கள் ஒன்று அல்லது இரண்டு மணி நேரம் ஆழ்ந்த நித்திரையில் ஆழ்ந்து விடுவீர்கள். இடையில் எழுப்பினுல்கூட நீங்கள் எழுந்திருக்க மாட்டீர்கள். விலை ரூ. 2-8-0. தபால் செலவு அணு 13 தனி. நீங்கள் ஒருமணி நேரத்திற்கு முன்பு எழுந்திருக்க விரும்பினுல் ஜாகரின் உபயோகிக்க வேண்டும். விலை ரூ. 2-8-0. தபால் செலவு அணு 13 தனி. இரண்டையும் ஒரே சமயத்தில் தருவிப்பவர்களுக்கு தபால் செலவு அணு 13 மட்டுமே. இலவச சாம்பிள்கள் கிடையாது. இந்த இரு தயாரிப்புகளும், உடம்புக்குக் கெடுதல் உண்டுபண்ணுது என்று உத்திரவாதம் அளிக்கிறேம். உங்கள் ஆர்டரை உடனே அனுப்புங்கள். கடிதங்களை ஆங்கிலத்தில் எழுதவும்.

Himalaya Aushadalaya (G. M.)

Halka No. 22. (7), Amritsar.

தளதளப்பான வாலிபமும் பிரகாசமிக்க வீரியமும் பெற

புனித மஹாத்மாவின்

பிரத்தியேக மூலிகை மருந்து

காஷ்மீர் மாத்திரைகள் :—சாதாரண பலஹீனத்திற்கு மிகச் சிறந்த மருந்து. இது தளர்ந்துபோன நரம்புகளுக்கு ஜீவனளித்து, தேகத்தில் வலிவை உண்டுபண்ணும். வாலிபம் குறைந்து போகாமல் காத்து சிறந்த இல்லற சுகத்தைப்பெற உதவும். வீரிய விருத்திக்கு நிகரற்ற மருந்து. புட்டி ஒன்றுக்கு விலை ரூ. 2—8—0.

காஷ்மீர் பூச்சு எண்ணை :—இது ஆண் குறியின் எல்லாக் கோளாறுகளையும் போக்குவதற்கான வெளிப் பூச்சுத் தைலம். வாலிபச் சேஷ்டைகளாலோ அல்லது இதர எந்தக் காரணத்தாலோ இழந்த பலத்தைத் திரும்ப அளிக்கும். கோளாறுகளைச் சரிப்படுத்தும். நரம்புகளுக்கு ஜீவனை உண்டுபண்ணும். விலை ரூ. 2—8—0.

Prof. B. S. SIDHU, HALKA No. 6 (G.M.),

Jullundur City.

மே மாதம் 17ம் தேதி முதல்

தமிழ் நாட்டில் எல்லா முக்கிய இடங்களிலும் திரையிடப்படும்



K & K ப்ரொடக்ஷன்ஸ்

ஜீவித நௌகா

தமிழ்

டிஸ்ட்ரிப்யூட்டர்கள் :

மதுரை, ராமநாதபுரம், திருநெல்வேலி, புதுக்கோட்டை, உள்பட மலேயா & ஸிலோன் : நாராயணன் & கோ, லிட்., மதராஸ்.

B.S. சரோஜா C.R. ராஜகுமாரி
திக்குறிச்சி சுகுமாரன் நாயர்
மற்றும் பலர்

வட ஆற்காடு, தென் ஆற்காடு & செங்கல்பட்டு: ஸ்வாமி பிக்சர்ஸ், வேலூர். கோயமுத்தூர் : காமதேனு பிலிம்ஸ், கோயமுத்தூர். மதராஸ்: மூர்த்தி பிக்சர்ஸ், சென்னை. கேரளம்: தி பிலிம் டிஸ்ட்ரிப்யூட்டிங் கோ., எர்ணகுளம். சேலம் : தி சேலம் சங்கர் பிலிம்ஸ், சேலம். திருச்சி & தஞ்சாவூர்: ஜம்பு பிக்சர்ஸ், திருச்சி. பம்பாய்: அல்லய்ட் ஏஜன்ஸீஸ், பம்பாய். மைசூர் சமஸ்தானம் : பிரகாஷ் பிக்சர்ஸ், பெங்களூர்.

இரவில் தனியாக இருக்கும்போது
தான் பார்த்துக் கொள்ளவேண்டும்.

KOKSHASTRA

(Private)

கொக் சாஸ்திரம்

(இரகசியமானது)

284 படங்களுடன்

விளம்பரத்தினுல் சரிவரக் கூறமுடியாத விஷயங்கள் இதில்அடங்கியுள்ளன.

படிக்கிறவர்கள் நன்ருகவும் தெளிவாகவும் விஷயங்களைப் புரிந்து கொள்வார்கள். நல்வித 284 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கொக் சாஸ்திரம்தான் வெகு நன்ருயிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

விலை ரூ. 0—8—0.

BED ROOM PHOTOS

படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்கு படுக்கை அறைக் காட்சிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்துகொள்ள விருப்பமிருந்தால் இன்றே 50 படங்கள் கொண்ட ஒரு செட்டுக்கு ரூ. 1—4—0 அனுப்பி பெற்றுக் கொள்ளுங்கள், 25 படங்கள் கொண்ட சாம்பிள் செட்டின் விலை அணு 0—12—0,

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்திலேயே (இங்கிலீஷில்) இருக்கவேண்டும்.

PARIS ART HOUSE

Durgiana (Dep. 215) Amritsar.

T No. 86135

ஸ்தாபிதம் 1904

கருர் விலை! மெத்தைக் கடை!

கல்யாண காலத்திற்கு வேண்டிய சேலைகள், வேஷ்டிகள், நவீன தினுசுகளில் நயமானதாயும், நம்பிக்கையுடனும் வாங்க சிறந்த இடம்.

P.S. கந்தசாமி சா சன்ஸ்

ஜவுளி வியாபாரம்

13, அய்யா முதலி தெரு,
சிந்தாதிரிப்பேட்டை, சென்னை.

தலைமை ஆபீஸ்:
செக்குப்பேட்டை, காஞ்சீவரம்.

தங்கம் இனும்!

எங்கள் மினர்வா தங்கத்தை பிரபலப்படுத்துவதற்காக புது வைரப் பட்டையடித்த இரு ஜதை வளையல்களும், ஒரு புது டிசைன் நெக்லஸும், ஒரு ஜோடி காதணிகளும், 2 பம்பாய் பாஷன் மோதிரங்களும் அடங்கிய ஒரு சாம்பிள் பெட்டியுடன் அதிகப்படியான 2 தோலா மினர்வா தங்கத்தை முழுவதும் இலவசமாகத் தருவது என நாங்கள் முடிவு செய்திருக்கிறோம்.

இலவச தங்கமும், சாம்பிள் பெட்டியும் பெற இன்றே எழுதுங்கள்.

முந்துங்கள்! இல்லையேல், இந்த அருமையான சந்தர்ப்பத்தை இழந்து விடுவீர்கள்.

ஆங்கில்த்தில் கடிதம் எழுதவும்]

AMERICAN CORPORATION (G.M.).

HALKA No. 22, AMRITSAR.



இனாம்! இனாம்!! இனாம்!!!

எமது நெ. 501 கருப்பு மயிர் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான மயிரும் மைக் கருப்பாக மாறி, பின்னர் எப்பொழுதுமே கருப்பாக வளரும். இது மயிர்கள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும் பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது. புட்டி ஒன்றின் விலை

ரூ. 1—15—0;

3 புட்டிகள் (பூரா முறை) ரூ. 5—0—0.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி ரிஸ்ட்வாட்சும்; மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும், உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூ கோல்டு மோதிரங்களும் இனாம். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்:

AMRIT PHARMACY (G. M.) Jullundur City.

ரூ. 1,000 சவால்

உலகத்தின் எட்டாவது அதிசயம்!

மெஸ்மரிஸ வசீகர கைக்குட்டை

(நிகரற்ற தயாரிப்பு)

இந்தக் கைக்குட்டை மெஸ்மரிஸ சக்திமூலம் தயாரிக்கப்பட்டதாகும். இதை வைத்துக் கொள்பவருக்கு அபாரமான சக்தி ஏற்படும். யாரையும் வசிகரப் படுத்தலாம். காதலில் வெற்றியும், வழக்குகளில் ஜெயமும், மற்றும் பரீக்ஷை, தொழில், வியாபாரம் இவைகளில் லாபகரமான பலன்களும் ஏற்பட்டு நீங்கள் தனவந்தர்கள் ஆகலாம்.

நீங்கள் விரும்பும் ஒருவரிடம் இந்தக் கைக்குட்டையைக் காட்டினால் போதும்; அவர் வசிகரம் ஆகிவிடுவார். உங்கள் விருப்பம் எதுவானாலும் வெற்றி பெறுவீர்கள்.

உங்கள் எதிரிகளாலும், கிரகக் கோளாறுகளாலும் ஏற்படும் ஆபத்துகளிலிருந்து உங்களைக் காப்பாற்றும். ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள். முதலிரவே அதன் அற்புத சக்தி உங்களுக்குத் தெரியும். விலை ரூ. 1—15—0.

வெளிநாடுகளுக்கு 5 ஷில்லிங் (பி. பி. ஓ.). தபாற் செலவு தனி.

தயாரிப்பவர்:

THE PROFESSOR:

NEW SCIENCE OF MESMERISM

(G. M.) JULLUNDUR CITY.

கல்யாண காலத்திற்கேற்ற கண் கவரும் உடைகள்!

அணங்குகளை அழகு செய்வது ஆடை!
அவர்கள் விரும்புவது நாகரீக உடை!
அவைகளுக்கு ஏற்ற இடம் எமது கடை!

கொள்ளேகாலம் பட்டுப் புடவைகள் தயாரிப்பதில் முதல் ஸ்தானம் பெற்ற எம்மிடம், புதிய புதிய பாஷனில் பலவித ஜவுளி தினுசுகளும் கிடைக்கும்.

ராதா ஸில்க் எம்போரியம்

(போன் : 84188)
14, சன்னதி தெரு,
மைலாப்பூர் :: மதராஸ்.

ருக்மணி ஸில்க் எம்போரியம்

பெரிய தெரு,
கும்பகோணம்.
போன் : 58

1951ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1951ற்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன் கூட்டி அறிய விரும்பினல், ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின்பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற்குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபாரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தியோகம் எப்பொழுது கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூர தேசப் பிரயாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப்பற்றிய பேச்சுகள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அதனல் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாகவும், புலப்படாத இதர வழிகளினுலும் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும், ஜோதிட முறைப் படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1—4—0 (வி. பி. மூலம் அனுப்பப் படும்). தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங்களும் அனுப்பப் படும். இதனுல் ஏற்படக்கூடிய இன்னல்களிலிருந்து இது தன்னைக் காப்பாற்றிக்கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Pt. Dev Dutt Shastri Raj Jyotishi (G.M.)
KARTARPUR, PB.

குண்டூசி

தென்னிந்தியா முழுவதிலும் நிகரற்ற
விநியோகமுள்ள மாத சினிமாப் பத்திரிகை

ஆசிரியர்-பி.ஆர்.எஸ்.கோபால்

பட்டை - 4
ஊசி - 8
பிரதி - 44
மே, 1951

நடனப் பரீக்ஷை

நம் சென்னை சர்க்கார் இருக்கிறார்களே: அவர்கள் சமீபகாலமாக சங்கீதம், நாடகம், சினிமா போன்ற கலைகள் விஷயத்தில் மிகுந்த சிரத்தை காட்டத் தொடங்கியிருப்பது நமக்கு ஆச்சரியத்துடன் கூடிய சந்தோஷத்தை ஏற்படுத்துகிறது.

சென்ற வருஷம் சர்க்கார் சினிமாப் படங்களுக்கு ஒரு பரிசுத் திட்டத்தை ஏற்படுத்தி, சினிமா உலகத்தினரை மனங் குளிரச் செய்தனர்.

சமீபத்திலோ அவர்கள் நாடகங்களுக்கு விதித்து வந்த தமாஷா வரியை ரத்து செய்து நாடக உலகினரின் புகழ் மாலைக்குள்ளாகி வருகின்றனர். அதோடு நிற்கவில்லை அவர்கள். இனி நடனக் கலை சம்பந்தப்பட்டவர்களும் தங்களைப் புகழும்படியான ஒரு நல்ல காரியத்தைச் செய்ய அவர்கள் இப்பொழுது முற்பட்டுள்ளனர்.

சங்கீதக்கலையை சர்க்கார் பாடத் திட்டத்தில் ஒன்றாய் அங்கீகரித்து பரீக்ஷை நடத்தி, அத்தாட்சிப் பத்திரங்களையும் வழங்குகின்றனர். "இதேபோல் நடனக் கலையையும் அவர்கள் பாடத் திட்டமாக அங்கீகரித்துப் பரீக்ஷை நடத்தி, அத்தாட்சிப் பத்திரங்களை வழங்கவேண்டும். இத்தகைய நல்லாதரவுடன் நடனக் கலை சீக்கிரமே முன்னேற்றமடையும்"—என்று சென்ற வருஷம் நாம் வெளியிட்ட குடியரசு மலரில் "அரசாங்கமும் கலைகளும்" என்ற கட்டுரையில் குறிப்பிடப்பட்டிருந்தது. இக் கட்டுரை வெளிவந்த சில காலத்திற்குப்பின், நடனக் கலையை பாடத் திட்டமாக ஏற்கும் விஷயத்தை ஆராய்வதற்கு ஸ்ரீ. பி. சாம்பமூர்த்தி தலைமையில் சர்க்கார் ஒரு கமிட்டியை ஏற்படுத்தினார்கள்.

இந்தக் கமிட்டி செய்த சிபாரிசுக்கிணங்க, சர்க்கார் நடனக் கலையை பாடத் திட்டமாக ஏற்று விட்டனர். முதல் நடனப் பரீக்ஷையை இவ்வருஷம் நவம்பர் மாதத்தில் நடத்தப் போகிறார்கள். இதில் தேறுபவர்களுக்கு அத்தாட்சிப் பத்திரங்களையும் வழங்குவார்கள். நடனப் பயிற்சியை 'ஆரம்பம்', 'உயர்தரம்' என்று இரு பிரிவாகப் பிரித்திருக்கிறார்கள். நடனப் பள்ளிகளை நடத்துபவர்கள் இந்தப் பரீக்ஷைக்கு மாணவ மாணவிகளைத் தயாரித்து அனுப்பி சர்க்காரின் அங்கீகாரத்தைப் பெறலாம்.

சென்ற சில வருஷங்களில் நடனக்கலை தமிழ் நாட்டில் காட்டுத் தீபோல் பரவியிருக்கின்றது. தற்காலம் ஆடத் தெரியாத (பெண்) குழந்தைகளின் எண்ணிக்கையே குறைவாயிருக்கும். இப்பொழுது சர்க்கார் நடனக் கலைக்கு ஆதரவு காட்ட முன் வந்திருப்பதால் இனி இக்கலை சரியான முறையில், திட்டமான நோக்கங்களுடன் முன்னேறுவது சாத்தியமாயிருக்கும் என்று கருதுகிறோம்.

நடனக் கலை சம்பந்தப்பட்ட அனைவரும் சர்க்காருடன் தாராளமாய் ஒத்துழைத்து, இந்த சந்தர்ப்பத்தை இக்கலை வளர்ச்சிக்கு நன்கு பயன்படுத்திக் கொள்ளுவார்கள் என்று நம்புகிறோம்.

உள்ளது உள்ளபடி

ஜடாயு

நான் இதுவரை எவ்வளவோ ஹாஸ்ய நாடகங்களையும், சினிமாப் படங்களையும் பார்த்திருக்கிறேன். ஆனால் சென்ற மாதம் நடந்த ஒரு எதிர்பாராத "நாடகத்"திற்கு அவைகளெல்லாம் உறைபோடக் காணாது. அவ்வளவு ஹாஸ்யமாக இருந்தன சம்பவங்கள்! அவ்வளவு தத்ரூபமாக நடித்தனர் அதில் கலந்து கொண்டவர்கள்!

நான் எந்த நாடகத்தைக் குறிப்பிடுகிறேன் என்பதை நீங்கள் அறிய ஆவல் கொள்ளுகிறீர்கள். சென்ற மாதம் ஓர் இரவு படத்தின் டைரெக்டர் ப. நீலகண்டனைப் பாராட்டுவதற்காக டி. எஸ். துரைராஜ் நடத்தினாரே ஒரு பாராட்டு விழா; அதைத்தான் குறிப்பிடுகிறேன். நாடகத்தைப் பற்றிச் சொல்லுவதாகக் கூறிவிட்டு பாராட்டு விழாவுக்குப் போய் விட்டேனே என்று திகைக்கிறீர்களோ? அந்தப் பாராட்டு விழாதான் உண்மையில், ஒரு நல்ல ஹாஸ்ய "நாடகமாக" இருந்தது!

ஒருவரது திறமையை ஒளிவு மறைவில்லாமல் பாராட்டுவதன் மூலம்தான் அவர் மேலும் விருத்தியடைய முடியும் என்பது உண்மை. அந்த வகையில் டைரெக்டர் ப. நீலகண்டனை எவ்வளவு வேண்டுமானாலும் பாராட்டுவதில் எனக்கு ஆட்சேபணையில்லை. ஆனால், ஒரு சிலர் இன்னொரு சிலரை, அபிமானங் காரணமாகவோ அல்லது சுயநலம் காரணமாகவோ, சந்தர்ப்பங்களிலும், அசந்தர்ப்பங்களிலும், அளவுக்கு அதிகமாகப் புகழும் தீய வியாதி எழுத்தாளர்களிடமிருந்து சினிமா உலகத்திற்குள்ளும் புகுந்துவிட்டதுதான் வருந்தத்தக்கது.

ஓர் இரவு படம் வெளி வந்ததும் வராததுமாய இந்தப் பாராட்டு விழா நடத்தப்பட்டது. இந்த விழாவில் கலந்து கொண்டு, ஸ்ரீ. நீலகண்டனைப் பாராட்டியவர்களில் (என். எஸ். கே. உள்பட) அநேகரும், பாராட்டுதலைக் கேட்க வந்திருந்த அனைவரும் இந்தப் படத்தைப் பார்க்கவில்லை. பேசியவர்களில் சிலர் படத்தைப் பார்த்தவர்களைப்போல் பாவித்தார்கள்; நன்கு நடித்தார்கள், ஆனால் உண்மை என்னவோ 'பளிச் பளிச்' என்று வெளியாகிக் கொண்டுதானிருந்தது!

இந்தப் பாராட்டு விழா மூலம் ஸ்ரீ. நீலகண்டனுக்கு அவரது அபிமானிகள் நன்மைக்குப் பதில் தீமையையே செய்திருக்கிறார்கள் என்று எனக்குத் தோன்றுகிறது. இப் படத்தைப் பொதுஜனங்கள் பாராட்டத் தொடங்கியபின் இந்த விழாவை நடத்தியிருந்தால் எவ்வளவு ரஸமாய் இருந்திருக்கும்!

தவறான பிரசாரம்!

எந்தப் பிரசாரமானாலும் அளவோடும், தகுந்த சந்தர்ப்பங்களிலும், நாஸூக்கான வகையிலும் செய்யப்படாவிட்டால் நல்ல பலனுக்குப் பதில் அதற்கு நேர் மாறான பலனே ஏற்படும் என்பதற்கு இன்னொரு உதாரணமும் கூறுகிறேன்.

சர்க்கார் சார்பில் "வைசூரி" பற்றிய துண்டுப் பிரசாரப் படமொன்று சமீபத்தில் வெளிவந்திருக்கிறது. இப்படத்தின் கதை, அமைப்பு, நோக்கம் எல்லாமே அபத்தமாயிருக்கிறது. விஷயங்கள் உண்மைக்கு மாறாகவும் காட்டப்படுகின்றன. வைசூரியினால் ஏற்படும் தீமைகளையும், அம்மை குத்திக்கொள்ள வேண்டிய அவசியத்தைப் பற்றியும் தாராளமாய்ப் பிரசாரம் செய்யட்டும். ஆனால் இதற்காக, சாதாரண ஜனங்களை முட்டாள்கள் என்று கூறி—அவர்களுக்குள்ள தெய்வ பக்தி முட்டாள்தனமானது என்று நிரூபித்து, பின்னர் தங்கள் நோக்கத்தை ஏற்றுக் கொள்ளும்படி பிரசாரம் செய்வது மிகக் கேவலமாயிருக்கிறது. மேலும், ஒருவனுக்கு முகத்தில் அம்மை வடுக்கள் ஏற்பட்டு விட்டதனால் வேலையே கிடைக்கவில்லை என்று காட்டியிருப்பது முட்டாள்தனத்தின் சிகரமாயிருக்கிறது. இத்தகைய அசட்டுத் தனமான பிரசாரப் படங்களை சர்க்கார் இனி தயாரிக்காமலிருப்பதுடன், இப்படத்தை வினியோகிக்காமல் உடனே நிறுத்திவிட வேண்டும்.

டி. ஆர். மஹாலிங்கம்

எம். எஸ். பிக்சர்ஸார் அடுத்த மாதம் வெளியிடப்போகும் மோஹன சுந்தரம் தமிழ்ப் படத்தில் கதாநாயகனாய் நடிக்கிறார்.

டி. ஆர். ரஜனி

“ரஜனி தம் அழகைப் பாதுகாப்பதற்கு எங்களுடைய............சோப்பைத்தான் உபயோகிக்கிறார்.”

“ரஜனியைப் போல் அழகிய கேசத்தைப் பெறுவதற்கு எங்களது..................கூந்தல் தைலத்தை உபயோகியுங்கள்.”

“வசீகரத்தையும், வளப்பையும் பெற எங்கள் ‘ஸ்னோ’வையே அழகி ரஜனி சிபார்சு செய்கிறார்.”

இது போன்ற பல விளம்பரங்களை நீங்கள் பார்த்து வருகிறீர்கள். சில சகோதரிகள் ரஜனியின் சிபார்சுகளை நடைமுறையிலும் பரீட்சித்திருக்கக் கூடும். ஆனால் ரஜனி சோப்பு, ஸ்னோ, கூந்தல் தைலப், முதலியவைகளைக் கண்ணால் கூடப் பார்த்ததில்லை என்று சொன்னால் ஆச்சரியம் அடைவீர்கள்! சொல்ல மறந்து விட்டேனே; இந்த நிலைமை தற்போதைய ரஜனியைக் குறிப்பவை அல்ல; ஒரு பஹாமஹா காலத்திற்கு முற்பட்ட விஷயம்!

டி. ஆர். ரஜனி

வாழ்க்கை வர்ணனை

சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன் ரஜனி பிறந்த குடும்பம் அவரது சொந்த ஊரான புதுக்கோட்டையில் பொருளாதார நெருக்கடியில் தத்தளித்துக் கொண்டிருந்தது. அவரது தகப்பனாரான டி. கிருஷ்ணசாமி நாயுடு புதுக்கோட்டை சமஸ்தான அச்சகத்தில் மேஸ்திரியாக இருந்தார் சம்பளமோ சொற்பம். அந்த வருமானத்தில் குடும்பத்தை நடத்துவதே மிகக் கஷ்டமாய் இருந்தது. இந்த நிலைமையில், “ரஜனி சோப்பு, கூந்தல் தைலம், ஸ்னோ, இவைகளின் பக்கத்தில் கூடப் போனதில்லை: சினிமா, நாடகம் என்றால் எப்படியிருக்கும் என்பதுகூட அவருக்குத் தெரியாது”—என்று கூறினால் அது ஆச்சரியப்படத்தக்க விஷயமல்லவே.

ரஜனி சிறு வயதில் பள்ளிக்கூடத்தில் சேர்க்கப்பட்டார். அவர் தன் படிப்புண்டு தானுண்டு என்று மிக சாதுவாகப் பள்ளிக்கூடம் போய் வந்து கொண்டிருந்தார். ரஜனியின் தாயாரான சுந்தரம்மாவுக்கு நன்றாகப் பாடத் தெரியுமாம். எனவே பிரத்தியேக முயற்சி

''மதனமாலா'' படத்தில் ரஜனியும், ஸ்ரீராமும்

ளதாமினி''
த்தில் எம்.
ரதா,
ர். ரஜனி.

எடுத்துக் கொள்ளாமலே ரஜனிக்கு இயற்கையாகவே பாட்டு வந்தது. பள்ளிக்கூடத்தில் நடத்தப் பட்ட நாடகங்களிலும் அவர் நடித்திருக்கிறார்.

இப்படியாக, ரஜனி புதுக்கோட்டையில் ஐந்தாவது வரையில் படித்து முடித்தார். குடும்பத்தின் கஷ்ட நிலைமை நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே வந்தது. சென்னைக்குப் போனால் கொஞ்சம் அதிகமாய் சம்பாதிக்கலாம் என்று அவரது தகப்பனாருக்குத் தோன்றியது. அதன்படி இக்குடும்பம் புதுக்கோட்டையிலிருந்து சென்னைக்கு வந்து, எழும்பூரில் குடியேறியது. ரஜனியின் தகப்பனார் லிபர்ட்டி பிரஸ்ஸில் ஒரு உத்தியோகத்தைத் தேடிக் கொண்டார்.

ரஜனி எழும்பூர் கார்பொரேஷன் பள்ளிக்கூடத்தில் ஆறுவது வகுப்பில் சேர்ந்து படிக்க ஆரம்பித்தார். ஆனால் அந்த வகுப்புடனேயே அவர் படிப்பை நிறுத்திக் கொள்ளும்படி யாகிவிட்டது. காரணம், சென்னைக்கு வந்த பிறகும் குடும்பத்தின் பொருளாதார நிலைமை விருத்தியடையாததுதான்.

மயூரா பில்ம்ஸார் ''பக்த அருணகிரி'' படத்தைத் தயாரிக்க முற்பட்ட காலம் அது அந்தக் கம்பெனியில் இருந்த ஒரு மலையாள அன்பர் ரஜனியின் தகப்பனாருக்குப் பரிச்சியமானவர். பால அருணகிரியின் சகோதரியாக நடிப்பதற்கு குட்டிகையான ஒரு சிறு பெண் அவர்களுக்குத் தேவை என்பதையும் சினிமாப் படத்தில் நடிப்பதற்கு நிறையப் பணம் கொடுப்பார்கள் என்பதையும் அந்த அன்பர் மூலம் தகப்பனார் தெரிந்து கொண்டார். ரஜனியை இந்த வேஷத்தில் நடிக்கச் செய்யும்படியும் அந்த மலையாள அன்பர் தூண்டினார். அப்போது குடும்பம் இருந்த நிலைமையில் இந்த யோசனையை வரப் பிரசாதமாக ஏற்றுக்கொண்டார் தகப்பனார். அந்த அன்பரின் உதவியின் மூலமே ரஜனி மயூரா பில்ம்ஸில் சேர்க்கப்பட்டார். ரஜனி கோலாப்பூருக்குச் சென்று, அங்கு தயாராகி வந்த ''பக்த அருணகிரி'' படத்தில் நடித்து விட்டு சென்னைக்குத் திரும்பி வந்தார்.

ரஜனி சினிமாவில் சேர்ந்தபோது அவருக்கு சினிமாவைப்பற்றி ஒன்றுமே தெரியாது. டைரெக்டர் சொல்லிக் கொடுத்

தைத அப்படியே செய்துவிட்டு வந்தார்; அவ்வளவேதான். பக்த அருணகிரி படத்தில் அவரைப் பார்த்த ரஸிகர்களும் அவரைப்பற்றி ஒன்றும் தெரிந்து கொண்டு விடவில்லை!

அருணகிரிக்குப் பின் ரஜனி சேவா ஸதனம் படத்தில் பள்ளிப் பெண்களில் ஒருத்தியாக நடித்திருக்கிறார். அதற்கடுத்தபடி தியாகபூமியில் சிறு பெண்கள் ஆடும் கும்மி டான்ஸில் பங்கெடுத்துக் கொண்டிருக்கிறார். பிறகு பி. யு. சின்னப்பா நடித்துள்ள பிருதிவி ராஜ் படத்தில் ஒரு உப பாத்திரம் ரஜனிக்குக் கிடைத்தது. இது முடிந்ததும் கிருஷ்ண குமார் படத்தில் எஸ். டி. எஸ். யோகி அவருக்கு சந்திரன்

பலநாடு யுத்தம்

என்ற ஆண் வேஷத்தைக் கொடுத்து நடிக்கச் செய்திருந்தார். ஆனால் இந்தப் படங்களிலெல்லாம் அவரது தோற்றம் கூட்டத்தோடு கோவிந்தாப் போட்டதாகவே இருந்தது.

ரஜனி படங்களில் நடிக்கத் தொடங்கிய சில காலத்திற்கெல்லாம் நடனத்தைக் கற்றுக் கொள்ள முற்பட்டார். அது முதல் அவருக்கு படங்களில் நடனம் ஆடவும் 'சான்ஸ்' கொடுக்கப்பட்டது. நாகய்யாவின் பாக்யலக்ஷ்மி தெலுங்குப் படத்தில் அவர் முதன் முதலாக நடனம் ஆடினார். அதன் மூலம் அவருக்கு பிரமாதமான புகழ் ஏற்பட்டு விடவில்லை யென்றாலும், "பரவாயில்லை" என்று சொல்லும்படியிருந்தது. அதன் விளைவாக, அவருக்கு குல்கர்ணி கோஷ்டியாருடன் செஞ்சுலக்ஷ்மி தெலுங்குப் படத்திலும் நடனம் ஆட சந்தர்ப்பம் கிடைத்தது. பின்னர் பலநாடு யுத்தம் என்ற தெலுங்குப் படத்தில் ரஜனி தனியாகவே நடனம் ஆடியிருக்கிறார். மாயா லோகம் தெலுங்குப் படத்தில் சிவ-பார்வதி நடனத்தில் பார்வதியாக ஆடியிருப்பவர் ரஜனிதான்.

இப்படியாக நான்கு படங்கள் மூலம் ரஜனி தம் நடனத் திறமையை கொஞ்சம் கொஞ்சமாக வெளியிடவே அவருக்கு நடிக்கும் சந்தர்ப்பங்களுக்குப் பதில் ஆடும் சந்தர்ப்பங்களே கிடைக்கத் தொடங்கின. தமிழ்ப் பட முதலாளிகளின் கவனமும் அவர்பால் சென்றது. விஸ்வாமித்ரா தமிழ்ப் படத்தில் ரஜனி தனி நடனம்

நாக கன்னிகா

ஆடியிருக்கிறார். இப்படத்தில் ஆடுவதற்காக கோலாப்பூருக்குச் சென்ற ரஜனிக்கு எதிர்பாராத ஒரு பாக்கியம் ஏற்பட்டது. விஸ்வாமித்ரா தயாரான அதே கோலாப்பூர் ஸ்டுடியோவில் சாந்தா ஆப்தே நடித்த வால்மீகி ஹிந்திப் படமும் தயாராகி வந்தது. ரஜனி அழகாக நடனம் ஆடியதைப் பார்த்த வால்மீகி பட முதலாளிகள் ரஜனியை ஆடச்செய்து அந்த நடனத்தை தங்கள் படத்தில் சேர்த்துவிட்டார்கள். இதில் இன்னொரு விசேஷமும் உண்டு. ரஜனியுடன் துணைக்காக வந்திருந்த அவரது கணவரான ராமச்சந்திரனையும் டைரெக்டர் பால் ஜி. பெந்தார்

கார் வற்புறுத்தி, முதன் முதலாக வால்மீகியில் ரஜனியுடன் நடனம் ஆடும்படிச் செய்திருக்கிறார்.

வால்மீகி படத்தில் நடித்துவிட்டு சென்னைக்குத் திரும்பியது முதல் ரஜனிக்கு அதிர்ஷ்ட காலம் ஆரம்பமாகிவிட்டது என்று தோன்றுகிறது. திரும்பி வந்ததும் வராததுமாய் ஸ்ரீ ராமானந்தா பிக்சர்ஸார் அவரை தைரியமாய் தங்கள் மதனமாலா தமிழ்ப் படத்தில் கதாநாயகியாக நடிப்பதற்கு ஒப்பந்தம் செய்து கொண்டனர்.

ராமானந்தா பிக்சர்ஸார் ஏமாற்றம் அடைய வேண்டியிருக்கவில்லை. அவர்கள் புதிதாய் தேர்ந்தெடுத்த கதாநாயகி (ரஜனி) கூடியவரையில் நன்ருகவே நடித்திருந்தார்; அழகாகவும் ஆடியிருந்தார். அவரிடம் கதாநாயகியாக நடிப்பதற்கான சகல குணம்சங்களும், நல்ல முக அழகும் பொருந்தியிருந்தமையால் இப் படத்தைப் பார்த்த ரஸிகர்கள் அவரைப் பாராட்டி வரவேற்றனர். ஆனால் இப்படம் வேறு சில காரணங்களால் மிக வெற்றி

[தொடர்ச்சி 62ம் பக்கத்தில்]

எதிரும் புதிரும்

கு.ப.சேது அம்மாள் ....

[சென்ற மாதத் தொடர்ச்சி]

நிழலும், நிலவும் குதித்து விளையாடும் ஒரு மரத்தடியில் உட்கார்ந்து, அழுது கொண்டிருந்தாள் கலா.

அவளைத் தேடிக் கொண்டு வந்த கமலம் "கலா, எங்கெல்லாம் உன்னைத் தேடறது! இருட்டிலே இங்கே என்ன பண்ணிக்கிட்டிருக்கே! எழுந்திரு, அம்மா கூப்பிட்டாங்க" என்றாள்.

அழுகையை நிறுத்திக்கொண்டு சத்தமின்றி மூக்கைச் சிந்திவிட்டு கம்மென்று இருந்தாள் கலா.

"எழுந்திரேன். சாப்பிடக் காத்திருக்காங்க உனக்காகவா" என்று கையைப் பிடித்து எழுப்ப முயன்றாள் கமலம்.

"எல்லாம் வரேன் போ. விடு கையை. அம்மாவைச் சாப்பிடச் சொல்லு......"

"உன்னைப் பட்டினியா வச்சிட்டு அம்மா சாப்பிட மாட்டாங்களே......"

"அதெல்லாம் உன்னை யார் கேட்டது? 'போ'ன்னால் போ. அவ்வளவுதான்" என்று வெடுக்கென்று சொன்னாள் கலா.

கமலம் அங்கிருந்து சென்ற சிறிது நேரத்திற்குப் பிறகு விடுவிடென்று அங்கு வந்த ஷண்முகவடிவு, வாய் பேசாமல் மகளுடைய கையைப் பற்றி எழுப்பினாள்.

"அம்மா, என்னை ஏனிப்படி வதைக்கிறாய்! மனதார அழக்கூட எனக்குச் சற்று சுதந்திரம் தரக் கூடாதா?........" என்று அழுகையும் ஆத்திரமுமாகக் கேட்டாள் கலா.

"பொழுதுக்கும் புத்தி போதிக்கிறேனே, ஏறல்லியாடீ உன் மூளையில்? இந்தப் பாழும் பித்தலாட்டமும் துக்கமும் நிறைந்த ஆணின் கூட்டுறவில்லாது நீ சுதந்தரமாய் வாழ வேண்டும் என்றுதான் நான் பாடுபடுகிறேன்..."

கலா இரண்டு காதுகளையும் பொத்திக் கொண்டு "போதும்! இந்த ஆண்கள் பற்றிய நிந்தனையைக் கேட்டுக் கேட்டு என் காது புளித்துப் போய்விட்டது...... ஆமாம், ரொம்ப நாளைய நினைவு; இன்று கேட்கிறேன், ...ஆண்கள் வஞ்சகப் புழுக்கள்; நம்பிக்கைத் துரோகிகள். அவர்கள் வாடையே கூடாது என்கிறாய். அவர்களை ஏன் உள்ளே அழைத்து உட்கார வைத்து உபசாரம் செய்கிறாய்? குலாவுகிறாய்; பணத்தைப் பறிக்கிறாய்—அவர்கள் வாடையே கூடாது—அவர்கள் தரும் பணம் மட்டும் இனிப்பாக இருக்கிறது... அந்த வாடை நமக்கு வேண்டியிருக்கிறது......இல்லையா, அம்மா?"

"கற்ற வித்தையைப் பெற்ற தாயிடமே காட்டுகிறாயே! உள்ளே வந்து ராத்திரி முழுக்கப் பேசு, இங்கே வெளியே நின்னு பேசக் கூடாது" என்று கலாவின் கையைப் பிடித்துத் தரதரவென்று உள்ளே அழைத்துச் சென்று ஒரு சோபாவில் உட்கார்த்திவிட்டு, தானும் பக்கத்தில் உட்கார்ந்து "உன் ஆத்திரம் தீர தோணறதையெல்லாம் பேசு. கடைசியாக பதில் சொல்றேன் உனக்கு" என்றாள் ஷண்முகவடிவு.

"பேசத்தான் போகிறேன். இன்னிக்கு வரைக்கும் நம்ப வீட்டைத் தேடி வந்து ஆயிர ஆயிரமாய் பணத்தை உன் காலடி

யிலே கொட்டி மாசக் கணக்கிலே தவம் கிடந்த ஆண் பிள்ளைகள் எத்தனை பேர்! அம்மா, உனக்கு பகவான் நெஞ்சிலே ஈரமே வைக்கவில்லையா! அவர்கள் கொடுத்த பணத்திற்கு, என்னை அவர்கள் கண்ணிலாவது காட்டி இருப்பாயா! எவ்வளவு பேருடைய சாபம், உன் தலையிலும், என் வாழ்விலும் சுமந்திருக்கிறது! தாசியாகப் பிறந்தால்தான் என்ன? இப்படியா பாபத்தை மூட்டை கட்ட வேண்டும்!......"

"இவ்வளவுதானா! இன்னுமிருக்கா!"

"நெஞ்சு கொதிக்கிற போது நையாண்டியா பண்ணுகிறாய்? உன் மகளுக்கு இப்பத்தான் அஞ்சாம் பிராயமோ! என் வயதிலே நீ இப்படித்தான் மக்கிக் கிடந்தாயோ?"

"என் தங்கமே, அப்படிக் கேளு! இந்த மாதிரி என் தாய் என்னை அடக்கி ஆண்டிருந்தால் ,நான் எடுத்த ஜன்மம் ஈடேறி இருக்குமேடீ? அது இல்லாமல், ஆண் உறவு கொண்டாடி, பகவானிருக்க வேண்டிய இந்த நெஞ்சிலே, அவனை உட்கார வச்சு, உடம்பு, உயிர், பணம், பண்டம், சொத்து முழுதும் தோற்று......"

"இந்தக் கதை இருக்கட்டும். இந்த உலகத்திலே பிறந்ததற்கு இப்படியே தான் நான் இருக்கவேண்டுமா? புருஷன், குடும்பம், குழந்தை என்று ஒன்றும் நான் பெறக் கூடாதா? இப்படிக் கூட ஒரு தாய் உலகத்தில் இருப்பாளா?" என்று உருகி அழுதாள் கலா.

ஷண்முக வடிவின் நெஞ்சில் ஒருபுறம் எரிச்சலும், ஒரு புறம் பச்சாத்தாபமும் ஒரே நினைவில் உருவெடுத்தன.

"கலா, உன் தாய் உலகத் தாய்களைப் போல் அல்ல. உலகத்துத் தாய்கள் அறிந்தோ, அறியாமலோ துயர மடுவில் தள்ளி விடுகிறார்கள்! அம்மாதிரி என் மகளை நான் தள்ள மாட்டேன். அதோடு இந்த உயிர் உள்ளவரையில் ஆண்களை வஞ்சம் தீர்ப்பேன்......என் மகளை......" என்று நெஞ்சில் அறைந்தபடி பேசிக் கொண்டிருக்கும் போதே தடாலென்று மல்லாந்து விழுந்தாள் ஷண்முகவடிவு.

"அம்மா, அம்மா, அம்மா!" என்று தட்டித் தட்டி, உலுப்பி உலுப்பி எழுப்ப முயன்றாள் கலா.

வாசலிலிருந்த தர்வான் டாக்டரை அழைக்க ஓடினான்.

ஷண்முக வடிவின் உயிர் நீங்கி அரை மணி நேரம் ஆனபின் டாக்டர் வந்து பார்த்து விட்டு, "உயிர் பிரிந்து அரை மணி ஆகி விட்டதே," என்று அவர் சர்வ சாதாரணமாகச் சொல்லிவிட்டு வெளியே சென்றார்.

"அம்மா! 'அந்திய காலத்திலே சொல்றேன்; ஆணை ஏன் நம்பக்கூடாது'ன்னு என்று சொல்லிவிட்டு, இப்படி என்னை அநாதையாக்கி விட்டாயே அம்மா!

என் இஷ்டங்களைக்கூட ஒதுக்கி விட்டு, உனக்கு அஞ்சி அடங்கி நான் இருக்கவில்லையா? அம்மா! பேசமாட்டியா? இனிமேல் உன்னை எதிர்த்துப் பேசவே மாட்டேன்...அம்மா!..." என்று அலறினாள் கலா.

அம்மாவின் ஜீவன் எங்கோ மாயமாகி விட்டபோது எங்கிருந்து பதில் வரும்!

கமலம் ஒரு பக்கத்தில் அழுது ஓய்ந்து, கலாவைச் சமாதானம் செய்து விட்டு,

ஷண்முகவடிவின் கட்டளைப்படியே மிக பத்திரமாய் பதுக்கி வைத்திருந்த ஒரு கவரைக் கொண்டுவந்து கலாவின் கையில் கொடுத்து, "கலா, இது உங்கம் மாவின் கதை. இதைத் தனது பிராணன் போன பிறகு—ஆனல் பிரேதம் இருக்கும் போது—உன்னிடம் கொடுக்கச் சொல்லி எனக்கு உத்தரவு. தனக்குப் பிறகு உனக்குத் தாயாக என்னை இருக்கும்படி எனக்குக் கட்டளை. என்னை அந்தக்

கௌரவத்தோடு வச்சு நடந்து கொள் ளும்படி உனக்கு அம்மா உத்தரவு செய்திருப்பதாகச சொல்லிச்சு...முதலில் படி, கடிதாசை. அப்புறம் எல்லாம் பேசுவோம்......" என்ருள்.

தாயாருடைய கையெழுத்தில் அவளுடைய சோக சித்திரமான வாழ்க் கை சுருக்கமாக எழுதப்பட்டிருந்தது.

தான் கணவனெனக் கருதிய ஓர் ஆட வனின் அடாத செயலால், தான் அஷ்ட ஐஸ்வர்யங்களையும் இழந்து, வயிறும் பிள்ளையுமாகப் பிச்சையெடுக்கும் கதிக்கு ஆளானதும், பிறகு—கூலிவேலை செய்து, பாட்டு வாத்தியாரம்மாவாகி, பிறகு...... சினிமாவில் பின் பாட்டுப் பாடி, படாத பாடுகள் பட்டு, இழந்த சொத்தை மீண்டும் சேர்த்து......அதற்குப் பிறகு தன்னை நிர்க்கதியாக நிற்கவிட்டு ஓடிய அந்த ஆண் வர்க்கத்தைப் பழி வாங்கவே தன் பெண்ணுடைய அழகை அவர்கள் கண்முன் வைத்து, 'வா, வா' என்று அழைத்து, கிடைத்ததை வரப்பெற்றுக் கொண்டு, மகளை ஆணின் கைபடாமல் காவந்து செய்து, தனது க்ஷாத்திரத்தைத் தீர்த்துக் கொண்டதாகவும் அவ்விதம் சேர்த்துள்ள நிதியைத் தர்ம காரியங் களுக்கு விநியோக உரிமை செய்து வைத்திருப்பதாகவும், தான் பாடுபட்டுச் சம்பாதித்த சொத்து தனிப்பட கவர்ன் மென்ட் பிராமிஸரி நோட்டுகளாக இருப் பதாகவும், வீட்டிலும் பாங்கிலும் இருக் கும் கையிருப்பும் கச்சிதமாகக் குறிக்கப் பட்டிருந்தது. கடிதத்தின் கடைசியில், கலாவுக்கு விவாகம் அவசியமென்று தோன்றினல் செய்து கொள்ளலாம் என் றும் அதில் ஒரு வரி இருந்தது.

வீட்டில் ஒரே நிசப்தம் குடி கொண்டி ருந்தது! விளக்குகள் யாவும் பிரகாசமாய் எரிந்தன. கலா, தாயின் அருகில் உட் கார்ந்துகொண்டு தாயைப் பார்த்து அழுவதும், கடிதத்தைப் படிப்பதுமாக இருந்தாள்.

கலாவின் தாய் நகரிலேயே சிறந்த அழகி—இறந்த செய்தி ஊர் முழுவதும் பரவி 'கலாநிவாஸ்'த்தின் வாயிலில் ஏகப் பட்ட கூட்டம்! பணத்தை வாரிக் கொடு த்துவிட்டு வருஷக் கணக்காக, கலாவின் கடாக்ஷத்திற்காகக் காத்துக் கிடந்த செல்வச் சீமான்கள் அனைவரும் ஒன்று கூடி விட்டார்கள் — ஷண்முகவடிவினு டைய மரண ஊர்வலத்திற்காக, வாத்ய கோஷம் திசைகளை அதிரச் செய்து கொண்டிருந்தது!

* * *

அயர்ந்த நித்திரையி லிருந்த அருண சலம் இந்தக் களேபரத்தில் விழித்துக் கொண்டான். கதவைத் திறந்துகொண்டு வெளியே வந்ததும், எதிர்த்த வீட்டு வா யிலில் அமர்க்களப் பட்டுக்கொண்டிருந்த தைக் கண்டான்.

அறையைச் சுத்தம் செய்ய வந்த பைய

னிடம், "எதிர்த்த வீட்டிலே என்னடா?" என்று கேட்டான் அருணாசலம்.

பையன் வெறித்துப் போய் நின்றான். ஒருநாளும் ஒன்றுமே பேசாத ஆசாமி இன்று பேசியது அவனுக்கு அதிசயமாக இருந்தது. பிறகு சமாளித்துக்கொண்டு, "அதுங்களா, எதிர்த்த வீட்டிலே இருக்கிற நாட்டியக்காரியோட ஆயா இருந்தாளில்லே, அவ செத்துட்டாளாம்."

"சாயந்திர நேரத்திலே மாடி வராந்தாவிலே உலாவுவாளே...?"

"ஆமாங்க. பாவம், ஆயி, மவ, இரண்டே பேரு... இனிமேல் அந்தப் பொண்ணுக்கு யாரு நாதி!"

"வீட்டிலே வேறேயாருமே யில்லையா?"

"சமையக்காரம்மா ஒருத்தி இருக்கா! அடுத்த ரூமை சுத்தம் பண்ணிட்டு வந்திடறேன் ஸார்" என்று ஓடிவிட்டான் பையன்.

அன்று அஸ்தமித்த பின்னர் வாத்திய கோஷ்டிகள், மத்தாப்பூ, தீவட்டி, வாண வேடிக்கை முதலிய சன்னாஹங்களுடன் ஷண்முகவடிவினுடைய பிரேத ஊர்வலப் பல்லக்கு மயானத்திற்குப் புறப்பட்டது.

சட்டென்று ஒரு யுக்தி தோன்றிற்று அவனுக்கு. எழுந்து கதவைச் சாத்திக்கொண்டு பக்கத்து அறைக்குள் நுழைந்தான். அங்கே அரட்டையடித்துக்கொண்டு உட்கார்ந்திருந்த இரண்டு மூன்று பேர்களும், "உம்மணா மூஞ்சி ஆசாமி இங்கெங்கே வந்தான்!" என்பது போன்ற கேள்விக் குறியுடன் அருணாசலத்தைப் பார்த்தார்கள்.

பிறகு அந்த அறையைச் சார்ந்தவன், "வாங்க ஸார், உக்காருங்க..." என்று கொஞ்சம் நகர்ந்துகொண்டு பெஞ்சியில் இடம் விட்டான்.

அருணாசலம் உட்கார்ந்துகொண்டு, "கொஞ்சம் சுண்ணாம்பு வேணும்...... அதற்குத்தான் வந்தேன்..." என்றான்.

வெற்றிலை பாக்குப் பொட்டலத்தை எடுத்து வைத்து, "வெற்றிலை போடுங்க, ஸார்" என்றான் அந்த அறையின் நபர்.

வேண்டா வெறுப்பாக வெற்றிலை போட்டுக்கொண்டான் அருணாசலம்.

அரட்டைகளின் பேச்சு மெல்லத் தலையெடுத்தது: "ஆமய்யா; ஒத்தனா, இரண்டு பேரா? நூத்துக் கணக்கான ஆசாமிகளுக்கில்லியா அந்தக் குட்டி பதில் சொல்லியாகணும்!" என்று ஆரம்பித்தான் ஒருவன்.

அருணாசலம் தன் பக்கத்தில் அமர்ந்திருந்த கண்ணாயிரத்தைப் பார்த்து, "எதிர்த்த வீட்டிலே என்ன விசேஷம், தடபுடல் படுகிறதே!" என்று கேட்டான்.

"அதைப்பத்தித்தான் இப்போ நாங்க பேசிக்கொண்டிருக்கிறோம். அதோ அந்த வராந்தாவிலே, விளக்கு வைக்கிற நேரத்திலே, தினம் ஒரு குட்டி உலாத்திக்கிட்டிருப்பாளே, பார்த்திருக்கிறீர்களா?" என்று கேட்டான் கண்ணாயிரம்.

"ஆமாம்."

"அது ஒரு தேவடியாக்குட்டி. அவளோட ஆயா செத்து விட்டாளாம்..."

"ஆயா...என்றால் வளர்ப்புத் தாயா...?"

"இல்லை, இல்லை, பெத்த தாய்தான். இப்படிப்பட்ட ஒரு ஜகஜ்ஜால வித்தைக்காரியை எப்படியோ எமன் பிடிச்சுட்டானே என்று தான் எங்களுக்கு அதிசயமா இருக்கு, ஸார்!"

[தொடர்ச்சி 51-ம் பக்கத்தில்]

காப்பியில் மிகச் சிறந்தது!

என்னுடைய ரஸிகர்கள் இருக்கிறார்களே அவர்களைப்பற்றி நினைத்தாலே எனக்கு நடுக்கமாகத்தான் இருக்கிறது. அவர்கள்தான் எனக்கு எப்படியெல்லாம் கட்டளை போடுகிறார்கள்; உத்தரவு பிறப்பிக்கிறார்கள்! ஆனால் உரிமையோடுதான், அன்போடுதான் அப்படிச் செய்கிறார்கள். எதைக் குறிப்பிடுகிறேன் என்று உங்களுக்குப் புரிந்திருக்குமே! பம்பாயிலே சென்ற பிப்ரவரி மாதத்திலே பிரபல நக்ஷத்திரங்கள் கோஷ்டி சேர்ந்து ஒரு 'கிரிக்கெட் மாட்ச்' ஆடினாலும் ஆடினார்கள்; என்பாடு திண்டாட்டமாகிவிட்டது. ரஸிகர்களிடமிருந்து கணக்கற்ற கடிதங்கள் வந்து குவிய ஆரம்பித்துவிட்டன. "தமிழ் நாட்டிலும் ஏன் இப்படி ஒரு 'திருவிழா'வை நடத்தக் கூடாது? அதற்கு நீங்கள் முயற்சி எடுத்துக் கொண்டால்தான் நடக்கும்."—இதுதான் அக்கடிதங்களின் சாராம்சம்.

• • •

பலர் பலவிதமான யோசனைகளைத் தெரிவித்திருக்கின்றனர். 'கிரிக்கெட்' ஆட்டமே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று ஒரு சாராரும், வேறு சிலர் 'புட்பால்' (கால் பந்து) ஆட்டம் வைக்கலாமென்றும் எழுதியிருக்கின்றனர். அதோடு நில்லாமல் நமது நக்ஷத்திரங்களை எல்லாம் 'உத்தி' பிரித்து—கட்சி பிரித்து—ஒவ்வொரு கட்சியிலும் யார் யார் ஆடுவது, அவர்களுக்குத் தலைவன் இன்னார், மத்தியஸ்தர் யார், என்பது போன்ற விஷயங்களையும் 'பிளான்' போட்டு அனுப்பி இருக்கிறார்கள். அவர்களுடைய விசித்திரமான யோசனைகள் சொல்லச் சொல்ல நீண்டுகொண்டே போகும் ஆகையால் இதோடு நிறுத்திக்கொண்டு மேலே போகிறேன்.

• • •

நக்ஷத்திரங்கள் பங்கெடுத்துக்கொண்டு, தர்ம கைங்கரியங்களுக்கு உதவ முன்வருகிறார்கள் என்ற பெருமை வடநாட்டுக்குத்தான் உரியது என்பதைக் குறிப்பிடாமல் இருக்க முடியாது. இதற்கு முன்பும் பல முறைகள் அங்கு, நக்ஷத்திரங்கள் பலர் ஒன்றுகூடி கதம்ப நிகழ்ச்சிகளை நடத்தி பல தர்ம ஸ்தாபனங்களுக்கு நிதி சேர்த்துக் கொடுத்திருக்கிறார்கள். நம் தமிழ் நாட்டிலும் தர்ம சிந்தனையுள்ள ஒன்றிரண்டு ஆத்மாக்கள் இல்லாமற் போகவில்லை. சமீப காலமாக பல கல்வி ஸ்தாபனங்களுக்கு "கிந்தனார்" காலக்ஷேபத்தின் மூலம் உதவி யிருக்கிறார் என். எஸ். கிருஷ்ணன். நவாப் ராஜமாணிக்கமும், டி. கே. எஸ். சகோதரர்களும் பல உதவி நாடகங்களை நடித்துக் கொடுத்திருக்கின்றனர். ஆனால், வடநாட்டுடன் ஒப்பிடும்போது, இப்படிப்பட்ட நல்ல நோக்கம் உடையவர்கள் தமிழ்நாட்டில் மிகமிகக் குறைவு என்பதை யாரும் மறுக்க முடியாது.

• • •

இப்படியாக, குறிப்பிடத்தக்க ஒரு சில நபர்களுக்குத்தான் இங்கு தர்ம சிந்தனை சிறிதேனும் இருக்கிறது. மற்றும் பல நக்ஷத்திரங்கள் இருக்கிறார்கள்: "தர்மம்" என்று போனால், "ஏதாவது கொடுக்கிறீர்களா?" என்றுதான் கேட்பார்கள்; அப்படிப்பட்ட 'கர்மப் பிரபுக்கள்'! ஆகவே. பல நக்ஷத்திரங்கள் சேர்ந்து ஒரு நிகழ்ச்சி நடத்தி, ஒரு நல்ல காரியத்திற்கு உதவினார்கள் என்பது இங்கு லேசாக நடக்கக்கூடிய ஒரு காரியமல்ல. ஒரு நக்ஷத்திரம் நடித்த படத்தைக்கூட மற்றொரு நக்ஷத்திரம் பார்க்க விரும்பாத—ஒரு நக்ஷத்திரத்தைப்பற்றி ஒரு பத்திரிகை புகழ்ந்து எழுதுவதை இன்னொருவர் சகிக்காத—நக்ஷத்திரங்கள் பல நிறைந்த நாடு நம் தமிழ் நாடு என்று சொல்ல நாணுகிறேன்.

• • •

ஆனால், அப்படிப்பட்ட நக்ஷத்திரங்களே பங்கெடுத்துக்கொண்ட அபூர்வ நிகழ்ச்சிகளும் சென்னையில் நடைபெற்

பிரபல ஜே. ஆர். ரங்கராஜுவின் பிரசித்தி பெற்ற நாவலான ''ராஜாம்பாள்'' பல வருஷங்களுக்குப் பிறகு மீண்டும் திரைப்படமாக வரப்போகிறது. அதில் கே. சாரங்கபாணி துப்பறியும் கோவிந்தனாகவும், எம். வி. மணி வக்கீல் துரைசாமி ஐயங்காராகவும் நடிக்கின்றனர்.

றிருக்கின்றன. மூன்று வருஷங்களுக்கு முன் கார்பொரேஷன் 'ஸ்டேடிய'த்தில் ஒரு 'ஸ்டார் பெரேட்' நடைபெற்றது. அந்தக் கூத்தைக் காண ஏகமாகக் கூட்டம் கூடிற்று; நல்ல வசூலும் கிடைத்தது. கே. பி. சுந்தராம்பாள், எம். கே. தியாகராஜ பாகவதர், கிருஷ்ணன்—மதுரம், ஜெமினி நாட்டிய கோஷ்டியினர் ஆகிய எல்லோரும் அதில் பங்கெடுத்துக் கொண்டு சிறப்பித்தனர்.

மற்றொன்று கடந்த ஜனவரி மாதம் 26ம் தேதி நடந்தது. அன்று பாபநாசம் சிவனின் சஷ்டி அப்த பூர்த்தி விழாவைக் கொண்டாடினார்கள். அவருக்கு ஒரு நிதி திரட்டி அளிப்பதற்காக, 'சங்கீத மாலா' ஒன்றை ஏற்பாடு செய்திருந்தார்கள். அதில் பல சங்கீத—சினிமா நக்ஷத்திரங்கள் மேடைமீது தோன்றி சிவனின் கீர்த்தனைகளைப் பாடும்படி ஏற்பாடு செய்திருந்தார்கள். அன்று வசூலான தொகையைக் கணக்குப் பார்த்தபொழுது அந்த முயற்சி ஒரு 'மாபெரும் தோல்வி' என்பது அதை ஏற்பாடு செய்திருந்தவர்களுக்கே தெரிந்திருக்கும்.

• • •

ரஸிகர்கள் விருப்பப்படியே ஏற்பாடு செய்வதாக வைத்துக் கொள்வோம். நக்ஷத்திரங்களை ஒன்று சேர்ப்பதற்குள், 'கங்கையையே சென்னைக்கு வரவழைத்து விடலாம்!' அப்படி அந்த பகீரதப் பிரயத்தனத்திலும் வெற்றி கிடைத்துவிட்டால் அதன் பிறகும் பல பிரச்னைகள் இருக்கின்றன. ரஞ்சன், ஸ்ரீராமன் போன்ற ஒரு சில நடிகர்களுக்கு மட்டுமே 'கிரிக்கெட்' ஆடத் தெரியும். மற்றுமுள்ள பலர், ''கிரிக்கெட் என்றால் என்ன! கண்ணில் வெடிக்கும் கிரிக்கட்டியா?'' என்று கேட்கும் பேர்வழிகள் தான். தவிர, 'கிரிக்கெட்' மட்டையையும் பந்தையும் தூக்கக்கூட பல நக்ஷத்திரங்களுக்கு இங்கு 'திராணி' கிடையாது. 'புட்பால்' ஆட்டத்தைப் பற்றி நினைக்கும்போதே, புகழையே விரட்டிக் கொண்டு ஓடும் நம் நக்ஷத்திரங்கள்

பந்தை விரட்டுவதில் எங்கே சிரத்தை காட்டப் போகிறார்கள் என்றுதான் எனக்குத் தோன்றுகிறது. ஆகவே 'புட் பால்', 'கிரிக்கெட்' இந்த ஆட்டங்களை விட்டு விட்டு, ஒரு கதம்ப நிகழ்ச்சி ஏற் பாடு செய்தால், நம் நக்ஷத்திரங்கள் அதில் எந்தெந்த விதமாக பங்கெடுத்துக் கொண்டால், ரஸிகர்களை மகிழ்விக்கலாம் என்று பார்ப்போம்.

* * *

ஒரு பெரிய மைதானம் அமைக்க வேண்டும். சுற்றிலும் ஜனங்கள் உட்கார்ந்து வேடிக்கை பார்க்கவும், நடுவில் ஒரு மேடையுமாய் அது அமையவேண்டும். நிகழ்ச்சியைத் தமாஷாகவே ஆரம்பிக்க லாம். கிருஷ்ணன்—மதுரம் பொய்க்கால் குதிரை ஆட்டம் ஆடுவதைவிட ஆரம் பத்திற்கு ஏற்ற தமாஷ் வேறு எதுவாக இருக்க முடியும்! இவர்களுடன் 'பீப் பாய் பூத பொம்மை'யை போட்டுக் கொண்டு புளிமூட்டையும் அவர்களுடன் சேர்ந்து கொண்டுவிட்டால் ஒரே சலாட் டாதான்!

* * *

சென்னை நகரிலும், சுற்றுப் புறங்களி லும் குத்துச் சண்டை ரஸிகர்கள் அனந்தம். ஆகவே குத்துச் சண்டைப் போட்டியை நிகழ்ச்சியின் இரண்டாவது 'ஐட்ட'மாக வைத்துக் கொள்ளலாம். இந்த வித்தையில் தேர்ந்தவர் நடிகர் பி. யு. சின்னப்பா. அவருடன் கூட பாட் லிங் மணியை மோதவிட்டால் 'ரோஷ மான குத்துச் சண்டை'யாக ஆகிவிடுமே! இது ஒரு 'ரவுண்டு' முடிந்ததும், சின் னப்பா தோளைத் தட்டிக்கொண்டு மல் யுத்தத்திற்கும், சிலம்பம் சுற்றுவதற்கும் சக நக்ஷத்திரங்களிடை சவால் விட்டு, முன் வருகிறவர்களிடம் தம் திறமை யைக் காட்டலாம். "மங்கையர்க்கரசி", மற்றும் சின்னப்பா நடித்த ஒன்றிரண்டு படங்களில் அவருடைய இம்மாதிரி வேலைகளைப் பார்த்த ரஸிகர்கள், அவை களை நேரில் பார்க்கும்போது அளவிலா ஆனந்தம் அடையக்கூடு மல்லவா?

* * *

அடுத்தபடியாக, 'ஆரோக்கியத்திற்குப் பிறகு தான் எனக்கு ஆபாசமெல் லாம்''—என்று கூறும் தவமணி தேவி, தன் 'நிர்வாண உடை'யில் பல தேகாப்பி யாசங்களைச் செய்து காட்ட துணிபுடன்

மூன்வரக்கூடும். ஆனல் 'மானத்திற்கு மிஞ்சித்தான் எதவும்' என்று நினைக்கும் தமிழ் நாட்டவர் அதை ரஸிப்பார்களா என்பது சந்தேகம்தான். ஆகவே, அவர்கள் கலாட்டா செய்து விரட்டுவதற்கு இடமே வைத்துக்கொள்ளாமல், தவமணி தேவி வேறு வேலை எடுத்துக் கொள்வது நலம். இந்த நிகழ்ச்சிகள் சம்பந்தமாக ஒரு புஸ்தகம் தயாரிப்பதாக இருந்தால், அதற்கு விளம்பரம் சேகரிக்கும் வேலையை அவரிடமும், அந்தப் புஸ்தகங்களின் விற்பனை விஷயமான பொறுப்பை பேபி ஸரோஜாவிடமும் தைரியமாக ஒப்படைத்து விடலாம். ஏனெனில், காங்கிரஸ் கண்காட்சியில்—சங்கீத, நாடக, நடன நிகழ்ச்சிகளுக்காக—அவர்கள் பிரசுரித்த புஸ்தகங்களை விற்கும் பொறுப்புகளை ஏற்று அவ்விருவரும் வெற்றி கண்டவர்கள்.

* * *

பல படங்களின், வாள் போருக்கும் நக்ஷத்திரங்களைப் பழக்கிய 'ஸ்டன்ட்' சோமு வாளை வீசிக்கொண்டு மைதானத்தில் குதித்தால், அவரிடம் சிக்ஷைபெற்ற ரஞ்சன், ராதா, எம். ஜி. ராமச்சந்திரன் போன்றவர்கள் குருவை எதிர்க்கும் சிஷ்யர்களாக 'கோதா'வில் இறங்கக் கூடும்! அதே நிகழ்ச்சியில், வாள் போர் கற்ற வி என். ஜானகி மாதுரி தேவி, டி. வி. குமுதினி போன்ற நடிகைகளும் கூட தங்கள் அறை குறைத் திறமையை காட்டத் துணியக்கூடும்.

* * *

"மாலினி" டைரெக்டர் என். சீதாராமனும், இசையரசு தண்டபாணி தேசிகரும் தண்டால், பஸ்கி போடும் காட்சிகள்தான் ரசிகர்களின் பாராட்டு தலைப் பெறுமல் போகுமா! அல்லது தேகாப்பியாசத்தின் பலன்களைப் பற்றி ஒரு பாட்டுப் பாடிக்கொண்டே மதுரமும், சூர்யப் பிரபாவும் அந்த வேலைகளைச் செய்து காட்டினுல்தான் ரசிகர்கள் கண்களை மூடிக்கொண்டு விடுவார்களா!

* * *

இம்மாதிரி ஒரு நிகழ்ச்சி நடக்கப் போவதை விளம்பரப்படுத்த வேண்டாமா! பழைய கால சம்பிரதாயப்படி தமுக்குப் போட்டோ, அல்லது பறை அடித்தோ தெரிவிக்கலாம் என்ருல், அதற்கு அந்தக் கலையில் தேர்ச்சி பெற்ற காளி என். ரத்தினம் இல்லை. ஆகவே, பத்திரிகாசிரியர் அனுபவம் பெற்றுள்ள "விசித்ர வனிதா" கதாநாயகர் எஸ். கிருஷ்ணசாமியிடம் இந்த வேலையைக் கொடுத்து விடுவதுதான் சரி.

சென்னை வாசிகளின் மனதைக் கவர்ந்துள்ள "கிரபராதி" தமிழ்ப் படத்தில் முக்காமாலாவும், அஞ்சலி தேவியும் பிரமாதமாய் நடித்துள்ளனர்.

அடுத்து வரும் ஒவ்வொரு நிகழ்ச்சியையும் பற்றி ரசிகர்களுக்கு முன்கூட்டி அறிவிப்பதற்கும் இந்த எஸ். கிருஷ்ணஸாமியே தகுதியான ஆசாமி. ஏனெனில், டில்லி அகில இந்திய ரேடியோவில் அனுபவம் பெற்றவர் என்பதோடு மட்டும் அல்லாமல், ஏற்கெனவே இம்மாதிரி நிகழ்ச்சிகளுக்கு 'அனௌன்ஸ'ராக இருந்து அந்த வேலையைத் திறம்படச் செய்திருக்கிருர்.

இவ்வளவு நிகழ்ச்சிகளையும் பார்த்துக் கொண்டிருக்கும் ரசிகர்களுக்கு பசி எடுக்காமல் இருந்து விடுமா என்ன! அவர்கள் வயிற்றுப் பாட்டையும் நக்ஷத்திரங்கள் தான் கவனிக்க வேண்டும்.

[61 ம் பக்கம் பார்க்க]

டைரெக்டர் ஆர். பத்மநாபன் தயாரித்து வரும் "ராஜேஸ்வரி" (தெலுங்கு), குமாரி (தமிழ்) ஆகிய படங்களில் இந்தப் புது நடிகை ஸ்ரீ ரஞ்சனியை சந்திக்கலாம்.



குட்டி கமலாவை ஒரு ஆட்டுக் குட்
டியைச் சுமந்துகொண்டு நடிக்கும்
படிச் செய்திருக்கிருர் டைரெக்டர்
ஜி. ஆர். லக்ஷ்மணன் "லாவண்யா"
தமிழ்ப் படத்தில்.

ஈஸ்டர்ன் ஆர்ட் பிக்சர்ஸார்
சீக்கிரமே வெளியிடப் போகும்
“லாவண்யா” தமிழ்ப் படத்தில்
சூர்ய பிரபாவும், டி. ஈ. வரதனும்
தோன்றும் ஒரு காட்சி.

பிரபல ஆந்திர நடிகை ஜி. வரலக்ஷ்மி
யம், சிவராமும் உணர்ச்சியுடன் நடிக்
கும் இக் காட்சியை "தீக்ஷா" தெலுங்
குப் படத்தில் காணலாம்.

உண்டியைக் கேளுங்கள்

இந்த ஊசியில் வெளிவந்துள்ள கேள்விகள் 'காந்திஜி ஸ்தூபி நிதி' காணிக்கையுடன் கேட்கப்பட்ட கேள்விகளல்ல. இனி நேயர்கள் யாவரும் இலவசமாகவே பதில் பெறலாம். — ஆசிரியர்.

எஸ். ரவீத் அஹமது (தென்காசி)

மேனாட்டிலிருந்து டெக்னிகலர் படங்கள் வருகின்றனவே, தமிழ்நாட்டில் இவ்விதப் படங்களைப் பிடிக்க முடியுமா?

தற்போதைக்கு சாத்தியமில்லை. மேனாட்டிலேயே டெக்னிகலர் படங்களைத் தயாரிக்கும் முதலாளிகள் எல்லாருமே ஒரே ஸ்டுடியோவில்தான் தம் படங்களைத் தயாரிக்கின்றனர்.

கே. வி. ஜான்மாள் (திருநெல்வேலி)

சினிமாவில் நடிப்பவர்கள் ஏன் நக்ஷத்திரங்கள் என்று அழைக்கப்படுகிறார்கள்?

அது ஒரு தமாஷான விஷயம்! ஹாலிவுட்டில் முதன் முதலில் படம் தயாரிக்கத் தொடங்கிய அந்தக் காலத்தில், நடிக நடிகைகளின் திறமையை அளவிட்டுக் கூறுவதற்காக அவர்களுடைய பெயர்களுடன் ஒன்று, இரண்டு, மூன்று, என்று நக்ஷத்திரக் குறிகளைச் சேர்த்து, மேல் நாட்டுப் பத்திரிகைகள் வெளியிடலாயின. பிறகு நக்ஷத்திர மதிப்புப் பெற்றவர்களையே நக்ஷத்திரம் என்று அழைக்கலாயின. நக்ஷத்திரம் என்ற பதம் இந்தியாவுக்கு வந்ததும், அதை 'எக்ஸ்ட்ரா' முதல் கதா நாயகர்-நாயகிகள் வரை எல்லோரும் ஆக்ரமித்துக் கொண்டு விட்டனர்!

கே. எல். ராஜா (பரந்தன், இலங்கை)

அநேக படங்களில் ஆனந்த நடனம் ஆடி ஆடவர்களின் உள்ளங்களை அபகரித்துள்ள லலிதா - பத்மினியை எங்கே காணலாம்?

'அபகரிக்கும்' குற்றத்தை மற்றவர்கள் செய்தால் அவர்களை நாம் ஜெயிலில் தான் காணவேண்டியிருக்கும்! ஆனால் சினிமாவில் நடிப்பவர்கள் (ரஸிகர்களின் உள்ளங்களை) அபகரிப்பதில் பாண்டித்யம் பெறும்போது அவர்களை நாம் நக்ஷத்திரப் பதவியில் காணலாம்.

எஸ். ஆர். பீச்சைரத்தினம் (திருச்சி)

வைஜயந்திமாலா தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்?

வைஜயந்தி இப்பொழுது ஏவி. எம். தயாரித்து வரும் "பஹார்" ஹிந்திப் படத்தில் நடித்து வருகிறார். ஏவி. எம். அடுத்தாற்போல் தயாரிக்கப் போகும் "பெண்" தமிழ்-ஹிந்திப் படங்களிலும் அவர் நடிப்பார்.

எல். அழகர்சாமி (புது டில்லி)

நான் விமானப் படையைச் சேர்ந்தவன். 'ஆனந்த விகடன்' தீபாவளி மலரில் சில நடன மணிகளின் பொழுது போக்கு விஷயங்களைப் பற்றி வெளியிட்டிருந்ததைப் பார்த்தேன். நான் வைஜயந்திமாலாவுடன் டேபிள் டென்னிஸும், லலிதா-பத்மினியுடன் 'கேரம்'ம் ஆட விரும்புகிறேன். இது சாத்தியமா?

விமானப் படையில் சேருபவர்களுக்கு ஆகாயத்திலிருந்தபடி கோட்டைகளைத் தகர்ப்பதற்கு மட்டும்தான் சொல்லிக்

கொடுப்பதாக நான் இதுவரையில் நினைத்திருந்தேன். ஆனால், நீர் கூறுவதிலிருந்து, ஆகாயத்திலிருந்தபடியே கோட்டைகளைக் கட்டவும் சொல்லித் தருகிறார்கள் என்று எண்ணவேண்டியிருக்கிறது!

அ. மு. சுப்பையா (மஸ்கேலியா, இலங்கை)

சக்ரதாரி, ஏழை படும் பாடு ஆகிய படங்களில் நடிக்கும் வி. நாகய்யாவுக்கு நடிப்பு விஷயத்தில் எந்த ஸ்தானத்தை அளிக்கலாம்?

ஸ்தானம் அளிக்க வேண்டிய நிலைமையை யெல்லாம் அவர் கடந்து விட்டார். "நாகய்யாவே நடிப்பு; நடிப்பே நாகய்யா" என்று நாம் கூறுவதே பொருத்தமாகும்.

எஸ். பி. கிருஷ்ணன் (கல்கத்தா)

வேலைக்காரி படத்தில் "உலகம் பலவிதம்—இவர் அதிலே ஒருவிதம்" என்றபாட்டைப் பாடியிருப்பது யார்? எம். வி. ராஜம்மாவா அல்லது எம். எஸ். எஸ். பாக்கியமா?

இந்தப் பாட்டை நீர் எம். வி. ராஜம்மாவின் வாய்மூலம் கேட்கும்படி செய்திருக்கிறார்கள். பாடியிருப்பவர் ஏ. பி. கோமளா.

பி. அ. கோபாலகிருஷ்ணன் (நல்லேப்பள்ளி)

தற்போது தயாராகும் ஒரு படத்தில் கூட எஸ். டி. சுப்புலக்ஷ்மி நடிக்காத காரண மென்ன?

தம் 'பேரன்' 'பேத்தி'களெல்லாம் படங்களில் வெளுத்து வாங்கிக்கொண்டிருப்பதைப் பார்த்தே அவர் திருப்தியடைந்து விடுகிறார் போலிருக்கிறது!

வயிரவசுந்தரம் (ராமச்சந்திரபுரம்)

சுகுமாரின் மோஹன சுந்தரம் எப்பொழுது வெளிவரும்?

ஜூன் மாதத்தில் இப்படம் வெளிவரக்கூடும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஸ்தாபிதம் 1920

உலகமெங்கும் புகழ் பெற்றது. பல எக்ஸிபிஷன்களில் மெடல்கள் பரிசு பெற்றது.

P. V. RAJAN'S SUPERIOR MADRAS SNUFF

தந்தி: நஸ்யம் மதராஸ்

நெ. 1 எக்ஸ்ட்ரா ஸ்பெஷல் பட்டணம் பொடி ஒரு தோலா டின்களிலும் கிடைக்கும்.

பி. வி. ராஜன் & கம்பெனி

உயர்ந்த பட்டணம் பொடி

& R. S. சுகந்த மூக்குத்தூள் பாக்டரி

அரக்கோணம் & மதராஸ்.

(மற்ற பொடி தினுசுகளுக்கும், விவரங்களுக்கும் எழுதவும்.)

"ஓர் இரவு" படத்தின் டைரெக்டர் ப. நீலகண்டனைப் பாராட்டுவதற்காக சமீபத்தில் டி. எஸ். துரைராஜ் ஒரு தேநீர் விருந்தை நடத்தினர். மேலே உள்ள படத்தில் நாகேஸ்வரராவ், லலிதா-பத்மினி, ப. நீலகண்டன், துரைராஜ் ஆகியோரைக் காணலாம்.

கே. சஞ்சீவி (கோந்தாளி)

ஏழை படும் பாடு படத்தில் இன்ஸ்பெக்டர் ஜாவராக நடிக்கும் என். சீதாராமன் இதற்கு முன் ஏதாவது படத்தில் நடித்திருக்கிறாரா?

"மிஸ் மாலினி"யில் நாடக டைரெக்டர் வேஷத்தில் மிக மிடுக்காக நடித்திருப்பவரும் இவரே.

எஸ். ஒ. அப்துல் காதர் (கொழும்பு)

எஸ். வரலக்ஷ்மி கர்ப்பவதியாக இருப்பதாகப் பத்திரிகைகளில் படித்தேன். அவருக்கு எப்பொழுது கல்யாணம் ஆயிற்று? கணவர் யார்?

வரலக்ஷ்மியைப் பற்றி என்னைவிட டி. ஆர். மஹாலிங்கத்திற்கு நிறையத் தெரியும். ஆதலால் இந்த சந்தேகத்திற்கு அவரால்தான் சரியான பதில் கூறமுடியும்!

டி. வி. பி. நாடார் (தாராபுரம்)

நான் ஒரு கதை எழுத உத்தேசித்திருக்கிறேன். அக்கதை சினிமாப் படமாகத் தயாரிக்கப்பட வேண்டும் என்பது என் ஆவல்; தாங்கள் இவ்விஷயத்தில் எனக்கு உதவி செய்வதாயிருந்தால் நான் கதையை எழுத ஆரம்பிக்கலாமென்றிருக்கிறேன்.

கதையை எழுதிக் கையில் வைத்துக் கொண்டிருக்கும் அநேகரின் ஆவலே பூர்த்தியாகாமல் இருக்கும் போது கதையை எழுதுவதற்கு முன்பே நீர் 'அச்சாரம்' கேட்பது விசித்திரமாக இருக்கிறது!

அ. சாமுவேல் (மாங்குழி)

நாடக மேடை அநுபவமில்லாமல் சினிமாவில் நடிக்க வந்துள்ள நடிக நடிகைகள் எவரேனும் உண்டா?

இல்லாமலென்ன! ரஞ்சன், சரோஜா, பானுமதி, வரலக்ஷ்மி, இன்னும் அநேகர்.

எம். கருப்பையா (அப்கட், இலங்கை)

இதய கீதம் படத்தில் வீரப்பா அவ்வளவு படைகளை வென்று மகிழ்ச்சி அடைகிறாரே அவர் ரஞ்சனை விட கத்திச் சண்டையில் தேர்ந்தவரா?

இருவரும் மோதிக் கொள்ளாத வரையில் நான் எப்படிச் சொல்ல முடியும்?

நாராயணசாமி (பங்களூர்)

ஜூபிடர் ஸ்டுடியோவை நடத்துபவர்கள் யார்? அந்த ஸ்டுடியோவின் விலாஸம் என்ன?

ஜூபிடர் ஸ்டுடியோ என்ற ஸ்டுடியோ ஏதும் இல்லை. ஸெண்டிரல் ஸ்டுடியோவைத்தான் ஜூபிடர் பிக்சர்ஸார் நிர்வகித்து வருகிறார்கள். இந்தக் கம்பெனியின் முக்கிய பாகஸ்தர்கள் எஸ். கே. மொஹிதீனும், எம் சோமசுந்தரமும் ஆவர்.

ஏ. டி. வி. ரோன்ஸார் (புதுவை)

பிரபல நடிகை பி. கே. சரஸ்வதி சில காலமாக திரையில் தோன்றாமல் இருப்பதேன்?

அவருக்கு முன்பே பிரபலமாக உள்ள நடிகைகள் ஓய்வு எடுத்துக் கொண்ட பின் திரைக்கு வரலாம் என்ற எண்ணம் காரணமாயிருக்காது. தற்போது அவர் "ராஜாம்பாள்" "குமாரி" படங்களில் நடித்துக் கொண்டிருக்கிறார்.

ஜே. தாஸன் (ருவான்வெல்ல, இலங்கை)

என் நண்பரொருவர் சினிமா ஆபரேட்டர் வேலையைக் கற்றுக்கொள்ள விரும்புகிறார். அவர் எங்கே பயிற்சி பெறலாம்?

இலங்கையிலேயே ஏதேனும் ஒரு சினிமாத் தியேட்டரில் சேர்ந்து பயிற்சி பெறுவதுதான் சிறந்த வழி.

கு. கணேசன் (இருநூறேக்கர், இலங்கை)

நான் வாழ்க்கை படத்தைப் பார்த்தது முதல் வைஜயந்தியின் நாட்டியம் என் மனதை விட்டகலவில்லை. இரவு பகல் இதே எண்ணத்தினால் எனக்குத் தூக்கமே வருவதில்லை. இதற்கு என்ன செய்யலாம்?

"திலோத்தமா" என்ற தெலுங்குப் படத்திலும், "மாயமாலை" என்ற தமிழ்ப் படத்திலும் காணக்கூடிய காதல் காட்சி இது. நடிப்பவர்கள் நாகேஸ்வர ராவும், சூர்ய பிரபாவும்.

ஒன்றும் செய்ய வேண்டாம். பேசாமல் ஏதாவது ஒரு இடத்தில் இரவுக் காவல்காரன் வேலையை ஒப்புக் கொண்டு விடும்!

கே. ஜி. ராமநாதன் (அவிசாவெல்ல)

ஜெமினியின் அபூர்வ சகோதரர்கள் படத்தில் விஜயனை அவ்வளவு கடுமையாய் சவுக்கால் அடிக்கிறார்களே அந்த வேஷத்தில் தோன்றிய நடிகர் உயிருடன் இருக்கிறாரா?

இருக்கிறார்; மேலும் அதிகப் புகழ் பெறுவதற்கு!

ப. ராமச்சந்திரன் (பம்பாய்)

பி. யு. சின்னப்பாவை நாடகங்களில் நடிக்க அழைத்தால் வருவாரா?

வருவார்; சொந்தத்தில் ஒரு நாடகக் கம்பெனியைக் கூட ஆரம்பித்திருக்கிறார்.

ஏ. நடராஜன் (கோவில்பட்டி)

எஸ். ஏ. நடராஜன் எங்கு இருக்கிறார்? அவருடைய விலாஸத்தைத் தெரிவிக்கவும்.

ஸ்ரீ. நடராஜன் கோவை வாசியாக விளங்குகிறார். விலாஸம்: C/o ஜூபிடர் பிக்சர்ஸ், திருச்சி ரோடு, கோயமுத்தூர்.

கே. எம், பாலசுப்ரமண்யம் (கீரமங்கலம்)

குமாரி கமலாவுக்கு விவாஹம் ஆகிவிட்டதா?

அவருடைய கழுத்தில் மாங்கல்யத்தை அணிவிக்கும் பாக்கியத்தை இன்னும் யாரும் பெறவில்லை.

எம். கே. கமலா (கொழும்பு)

லலிதா, பத்மினி, இவர்களுக்கு சகோதரர்கள் எத்தனை பேர்?

சந்திரன் என்ற ஒரே ஒரு தம்பி மட்டும் இருக்கிறான்.

எஸ். ஆர். பி. ரத்தினம் (திருச்சி)

யூ. ஆர். ஜீவரத்தினம் தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்? எந்தப் படத்தில் நடிக்கிறார்.

ஜீவரத்தினம் தம் குடும்ப விஷயங்கள் காரணமாக கொஞ்ச காலமாய் படங்

குழந்தைகள் விரும்புவது....

குமரன் மிட்டாய்

KUMARAN CONFECTIONERY WORKS
MADRAS. 21

லைஸ்மன் கோ

ஸ்டெயின்லெஸ் ஸ்டீல்
கெடியாரப் பட்டைகள்

சீதோஷ்ண நிலைமையினாலோ, உங்கள் தேக உஷ்ணத்தினாலோ, அல்லது வேறு எவ்வித காரணத்தாலோ துளிக்கூட நிறம் மங்காதவை. பாசி படியச் செய்யாதவை.

உங்கள் கை அளவுக்குத் தகுந்தபடி மாற்றி அமைத்துக் கொள்ளலாம். ஆடவரும், பெண்மணிகளும் விரும்பக்கூடிய பல நவநாகரீக ரகங்களில் உள்ளன. உடனே எழுதுங்கள்.

ஜில்லா வினியோக ஏஜண்டுகள் தேவை குறைந்தது ரூ. 500-க்கு ஸ்டாக் செய்யக் கூடியவர்கள் மட்டும் விண்ணப்பித்துக் கொள்ளவும்.

விவரங்களுக்கு:

CHANDRIKA Co.,
Ville Parle West, Bombay-24

சென்னையில் நான்கு தியேட்டர்களில் இந்த மாதம் ஆரம்பமாகி யிருக்கும் ஏவி. எம். மின் "ஓர் இரவு" படத்தில் டி. கே. ஷண்முகமும், பி. எஸ். சரோஜாவும் தோன்றும் ஒரு காட்சி.

களில் நடிக்காமலிருந்துவிட்டு மறுபடி யும் படங்களில் நடிக்க முன் வந்திருக்கிறார். இந்த இடைக்காலத்தில் அவர் சாஸ்திரோக்தமான சங்கீதத்தைக் கற்று சங்கீத கச்சேரிகளுக்குப் போய் வருகிறார்!

பீ. என். கிருஷ்ணன் (மதுரை)

ஆர்யமாலா, மனோன்மணி இவ்விரு படங்களுள் முதலில் தயாரான படம் எது?

"ஆர்யமாலா" தான்.

ஆர். கே. ராஜன் (புதுடில்லி)

மந்திரி குமாரியில் மாதுரி தேவியை கொலை செய்வதற்காக எஸ். ஏ. நட ராஜன் அவரை மலைமேல் அழைத்துச் செல்லுகிறாரே. பெண்களைக் கொல்லுவதற்கு அதுதானா தகுந்த இடம்?

எஸ். ஏ. நடராஜன் இந்த விஷயத்தில் அநுபவமில்லாதவர் என்று தான் எண்ணவேண்டி யிருக்கிறது. ஒரு பெண்ணைக் கொல்லுவதற்காக அவர் இவ்வளவு சிரமம் எடுத்துக் கொண்டிருக்க வேண்டியதேயில்லை. ஒரு பெண்ணிடம் இன்னொரு பெண்ணின் அழகு, குணாதிசயங்கள் இவைகளை வர்ணித்தாலே போதுமே; அவள் பொறாமையினால் தானாகவே செத்துப் போவாளே!

ஆர். எஸ். லக்ஷ்மணன் (ஸ்ரீவைகுண்டம்)

சந்திரலேகா, அபூர்வ சகோதரர்கள், ஆகிய படங்களில் எம். கே. ராதா பாடுகிறாரே; அது அவருடைய குரல் தானா?

ராதாவுக்கு சாதாரணமாகப் பாட வரும். ஆனால் மேற்படி படங்களில் அவர் பாடவில்லை.

ஒ. டி. ரஹிமான் (விஜயநகரம)

யோகம், மங்களம் தற்போது எந்தப் படத்தில் நடிக்கிறார்கள்?

சினிமா உலகில் இவர்களுடைய அத்தியாயம் அநேகமாக முடிந்து விட்டது

போல் காண்கிறது. யோகம் படங்களில் நடித்துப் பல வருஷங்களாகி விட்டன. மங்களம் கடைசியாக நடித்திருக்கும் ராயல் டாக்கீஸாரின் "சுதர்சன்" படம் இன்னும் வெளிவரவில்லை.

ஏ. சுப்பையா (மருதளம்)

வஸுந்தரா தேவி தற்போது என்ன செய்து கொண்டிருக்கிறார்?

'பெறுவதற்கிருந்த சுதந்திரம் வளர்ப்பதற்கு இல்லையே' என்று வருந்திக் கொண்டிருக்கிறார்!

எம். கே. பாலசுப்ரமண்யம்
(கோலாலம்பூர்)

முதன் முதலாக ஆரம்பிக்கப்பட்ட தமிழ் சினிமாப் பத்திரிகை எது?

"சினிமா டாக்கீஸ்" என்ற பத்திரிகை தான் முதன் முதலில் ஆரம்பிக்கப் பட்டது. அடுத்தபடியாக ஆரம்பிக்கப்பட்ட "ஆடல் பாடல்" பத்திரிகை தான் பிரபலமடைந்தது. ஆனால் இவையிரண்டும் மறைந்து பல வருஷங்களாகின்றன.

எம். கே. சாமி (இடைப்பாடி)

தாஸி அபரஞ்சி படத்தில் புஷ்பவல்லியே பாடியிருக்கிறாரா? அல்லது வேறு யாராவது குரல் இரவல் கொடுத்திருக்கிறாரா?

குமாரி ரத்னத்தின் குரல் புஷ்பவல்லியின் 'ஸௌண்ட் பாக்ஸ்' மூலம் ஒலிக்கிறது!

என். எஸ். பதி (மதுராந்தகம்)

சில பத்திரிகைகள் சினிமா நடிகைகளைப் பற்றி வரையறையின்றி கேவலமாய் எழுதுகின்றனவே; அவர்கள் நோக்கம் என்ன?

பிழைப்பதற்கான பல வழிகளில் இதுவும் ஒன்று!

எஸ். சுப்பையா (விக்ரமசிங்கபுரம்)

ஜெமினியின் ஔவை படம் எப்பொழுது வெளிவரும்?

அந்தப் பாட்டியின் விஷயத்தில் மட்டும் என் 'ஜோஸியம்' பலிக்காது!

சுந்தரம் (நடார்)

வஸுந்தரிக்குப் பிறகு பி. யு. சின்னப்பா எந்தப் படத்தில் நடிக்கிறார்?

தம் சொந்தப் படமான "வான விளக்"கில்.

(MADRAS) LTD.
பிராஞ்சுகள்:
286, சைனுபஸார், சென்னை-1.
71, பாண்டிபஸார், தி. நகர், சென்னை-17.

10 வருஷ உத்தரவாதமுள்ள
வெஸ்டெண்ட் மாடல்கள்

நாகரீகமானவை, சிறியவை.

எவர்பிரைட் கேஸ்	ரூ.	19/-
பக்கா ரோல்ட்கோல்டு	ரூ.	23/-
சென்டர் ஸெகண்டு - ரேடியம் டயல்	ரூ.	27/-
நாகரிக ரெக்டாங்குலர்	ரூ.	29/-

... லேடீஸ் ...
... வாட்சுகள் ...

5 ஜுவல்

நாகரிகமானவை	ரூ.	32/-
தங்க முலாம்	ரூ.	39/-

சொற்ப கெடியாரங்களே கைவசமுள்ளன. தேவைக்கு உடனே எழுதுங்கள்.

UNITED WATCH CO., (G. D. M.)
Post Box No. 6715 CALCUTTA—7.

1 2 3 4 5 6 7 8 9 10 11 12 13 14 15 16

நக்ஷத்திரம்

கச்ச தேவயானி படம் பத்து வருஷங்களுக்கு முன் வெளி வந்ததும் ரஸிகர்களின் உள்ளங்களில் கிளர்ச்சியும், முகங்களில் மலர்ச்சியும், சினிமா உலகில் புரட்சியும் ஏற்பட்டன. அன்று முதல் இன்று வரை பட ரஸிகர்களின் 'சொப்பன சுந்தரி'யாக விளங்கி வரும் டி. ஆர். ராஜகுமாரிக்கு இந்த மாதத்தில் முப்பதாவது வயது பிறக்கிறது.

5 மே, 1922

★

ஸ்ரீ ராம பால கான சபையாரின் நாடகங்கள் மூலம் சென்னை ரஸிகர்களின் கவனத்தைக் கவர்ந்த எம்.எஸ். சிவபாக்கியம், பிறகு ஜூபிடரின் பல படங்களில் நடித்து, "டூப்ளிகேட் மதுரம்" என்று புகழ்பெற்றிருக்கிறார். இவருடன் ஒரு "டூப்ளிகேட் கிருஷ்ணனு"ம் ஜோடி சேர்ந்து விட்டால் ரஸிகர்கள் மிக மிக குதூகலிப்பார்கள். பாக்கியம் பிறக்கும் 'பாக்கிய'த்தைப் பெற்றிருக்கிறது இந்த மாதம்.

12 மே, 1926

★

பெயருக்கேற்றவாறு சாந்தமான முகத்தையும். குணத்தையும் உடைய சாந்தகுமாரியின் பிறந்த நாளும் இம்மாதத்தில்தான் வருகிறது. அபாரமாக நடிக்கும் திறமையையும், அதி இனிமையாய் பாடும் வல்லமையையும் ஒருங்கே பெற்றுள்ளதே போல் பி. சாந்தகுமாரி ஒரு நடிகையாகவும், பட முதலாளியாகவும் விளங்கி வருகிறார்.

17 மே, 1920

மே,

பிறந்த நாள்

மே, 1922

15 மே, 1912

21 மே, 1919

ராஜகுமாரி பிறந்த அதே தினத்தன்று பிறந்தவரான பி. ஏ. ராஜாமணியின் பெயரிலும் "ராஜ" என்ற பதம் இடம் பெற்றிருப்பது கவனிக்கத் தக்கது. பி. ஏ. பெரியநாயகியின் தமக்கையான ராஜாமணி முதலில் பூகைலாஸ் படத்திலும் பின்னர் மாடர்ன் தியேட்டர்ஸார் வெளியிட்ட படங்கள் சிலவற்றிலும் நடித்திருக்கிருர்.

★

பெயருடன் 'ராமஸ்வாமி ஐயர்' என்று சேர்த்துச் சொல்லவேண்டிய அவசியமேயில்லை; "புளி மூட்டை" என்பதே பூர்த்தியான விலாஸம் தான்! ஹாஸ்ய பாகங்களிலும், குணச்சித்திர பாத்திரங்களிலும் நடித்துப் புகழ் பெற்று, என். எஸ். கே.யுக்குப் "பக்கபலமாக" இருந்து வரும் புளிமூட்டையின் பிறந்த நாளே இம்மாதத்தில் "பெரிய பிறந்த நாள்" என்று சொல்வது பொருத்த மல்லவா!

★

நான் இருக்க பயமேன்— என்று நாடக மேடையில் முழக்கம் செய்துவந்த எம். என். நம்பியாரை "நாம் இருக்க பயமேன்" என்று ஜூபிடர் பிக்சர்ஸார் ஒப்பந்தம் செய்துகொண்டு படங்களில் நடிக்கச் செய்தனர். ஹாஸ்ய பாகம் முதல் கதாநாயகன் வரை பல பாத்திரங்களில் பல படங்களில் தோன்றி பிரபலமடைந்துள்ளார் நம்பியார்.

17
18
19
20
21
22
23
24
25
26
27
28
29
30
31

★

1951

புதுத் தமிழ்ப் படங்கள்

ஜெமினி ஸ்டுடியோஸார் ஏற்கெனவே ஹிந்தியில் படமாக வெளிவந்துள்ள "டோலி" என்ற கதையை சில மாறுதல்களுடன் தமிழ்ப் படமாகத் தயாரிக்கத் திட்ட மிட்டிருக்கிறார்களாம். ஜெமினி நக்ஷத்திரங்கள் பலர் இப் படத்தில் நடிப்பார்களென்றும், கே. ஜே. மஹாதேவன் இப்படத்தை டைரெக்ட் செய்யக் கூடுமென்றும் தெரிகிறது.

நடிகர் முக்கமாலா தமது சொந்தத்தில் "மஹிதல தல்லி" என்ற படத்தைத் தயாரிக்க பூஜை போட்டு விட்டார். சென்ற மாதம் இப் படத்தின் ஆரம்ப பூஜா விழா நெப்டியூன் ஸ்டுடியோவில் நடந்தது. டைரெக்டர் எச். எம். ரெட்டி காமிராவை முடுக்கி விட்டு, ஆசி கூறினர். டி. சூர்ய குமாரி இப் படத்தில் நடிப்பதுடன், சங்கீத டைரெக்டராகவும் பொறுப்பு ஏற்றிருக்கிறாராம்.

ஏவி. எம். மின் அடுத்த படமான "பெண்"ணின் படப் பிடிப்பு இம்மாதம் ஆரம்பமாகும் என்று தெரிகிறது. ரா. வெங்கடாஜலம் எழுதியுள்ள சமூகக் கதை இது. தமிழில் "பெண்"ணாகவும், ஹிந்தியில் "லடுகி" என்ற பெயரிலும் தயாரிக்கப்பட விருக்கிறது. தமிழ்ப் படத்தில் டி. ஆர். மஹாலிங்கம், வைஜயந்திமாலா, டி. ஆர். ராமச்சந்திரன், அஞ்சலி தேவி முதலியவர்களும், ஹிந்திப் படத்தில் வைஜயந்திமாலா, கரன் திவான், ஓம் பிரகாஷ் ஆகியோரும் பிரதம பாகங்களில் நடிப்பார்கள். இரு படங்களும் எம். வி. ராமன் டைரெக்ஷனில் தயாராகும்.

ஜுபிடர் பிக்சர்ஸாரும், ராயல் டாக்கிஸாரும் சேர்ந்து "ரிக்ஷாக்காரன்" என்ற ஒரு சமூகப் படத்தைத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றனர். ஏ. எஸ். ஏ. சாமி எழுதியுள்ள இக் கதையை அவர்கள் தமிழ்-தெலுங்கு இரு பாஷைகளிலும் தயாரிக்கப் போகிறார்கள். தமிழ் நாட்டின் பிரபல நக்ஷத்திரங்கள் பலர் நடிக்கப்போகும் இப் படத்தின் படப் பிடிப்பு, ஏ. எஸ். ஏ. சாமியின் டைரெக்ஷனில் நெப்டியூன் ஸ்டுடியோவில் சீக்கிரமே ஆரம்பமாகும் என்று தெரிகிறது.

முதல் முறையாக டி. ஆர். ராஜகுமாரி நாகய்யாவுடன் நடிக்கிறார் "என் வீடு" என்ற படத்தில். ரேணுகா பிக்சர்ஸார் "என் வீடு" என்ற சமூகக் கதையைத் தமிழ்-தெலுங்கு இரு பாஷைகளிலும் படங்களாகத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றனர். இப் படத்தின் கதை, வசனங்களை "சுதேசமித்திரன்" உதவி ஆசிரியர் "சாண்டில்யன்" எழுதி வருகிறார். நாகய்யா டைரெக்ட் செய்யும் இந்தப் படத்தில் ராஜகுமாரி மூன்று குழந்தைகளின் தாயாராக வருகிறார். தவிர அவரே தெலுங்குப் படத்திலும் நடிக்கப் போகிறார் என்பது ஒரு விசேஷம். இந்தப் படத்திற்கு நாராயண கம்பெனியாரின் உதவி பரிபூரணமாக இருக்கு மென்று தெரிகிறது.

கிருஷ்ணா பிக்சர்ஸார் அடுத்தபடி ஒரு சமூகக் கதையைத் தமிழ்-தெலுங்கு இரு பாஷைகளிலும் படமாகத் தயாரிக்கப் போவதாக அறிவித்திருக்கின்றனர். பிரஸாத் டைரெக்ஷனில் "மருமகள்" என்ற பெயரில் தமிழ்ப் படமும் "அம்மலக்கலு" என்ற பெயரில் தெலுங்குப் படமும் தயாரிக்கப்படும். வழக்கம் போல இப் படத்திலும் நக்ஷத்திரங்கள் பலர் நடிக்கக்கூடும்.

சேலம் அசோக் பிக்சர்ஸார், என் தங்கைக்கான பூர்வாங்க வேலைகளில் ஈடுபட்டிருக்கிறார்கள். பிரதம பாகங்களில் நடிக்க எம். ஜி. ராமச்சந்திரன், பி. எஸ். கோவிந்தன், மாதுரிதேவி முதலியவர்களை ஒப்பந்தம் செய்து கொண்டுள்ளார்கள். ஸி. எச். நாராயணமூர்த்தியை டைரெக்டராக அமர்த்தி யிருக்கிறார்கள்.

தங்கமணி நடனம்

சித்தூரில் நடைபெற்ற எக்ஸிபிஷனில் சென்ற மாதம் 18-ம் தேதி, குமாரி ஆர். தங்கமணியின் பரதநாட்டியக் கச்சேரி நடைபெற்றது. பல தெலுங்குப் பதங்களுக்கு அன்று அவர் அபிநயம் பிடித்தது குறிப்பிடத் தக்கது. 'வெத்தி தாளுன்னம்மா' என்ற பதம் ரொம்ப சிறப்பாக இருந்ததாம். "நாதர் முடி மேல்" என்ற பாம்பாட்டி நடனத்திற்கும் 'பிளேட்' டான்ஸுக்கும் ரொம்பவும் நல்ல பெயர் கிடைத்ததாம்.

List of Ist Prize Winners of C. No. 49

1. B. C. Vyas, Indore. 2. N. C. Gangayya, Bellary. 3. S. Srinivasa Iyer, Madras and 4. Karamchand Mistry, Darrang. In addition 11 persons are awarded IIIrd prize and 9 persons Vth Prize. Full particulars are published in the Rainbow dated 10—5—51.

ரிஜிஸ்டர் நெ. 249 **ரூ. 25,000 பரிசு** போட்டி நெ. 51

M/S. Premier Bank of India Ltd-ல் சீல் செய்துவைக்கப்பட்டுள்ள சரியான விடை அவர்கள் அங்கீகாரத்தின் பேரில் பிரசுரிக்கப்படும். முற்றிலும் சரியான விடை அனுப்புபவர்களுக்கு முதல் பரிசு ரூ. 12,000. முதல் இரண்டு வரிசை சரியான விடைக்கு இரண்டாம் பரிசு ரூ. 7000. முதல் ஒரு வரிசை சரியான விடைக்கு மூன்றும் பரிசு ரூ. 3000. முதல் மூன்று நம்பர் சரியான விடைக்கு நான்காம் பரிசு ரூ. 2000/. முதல் இரண்டு நம்பர்கள் சரியான விடைக்கு 5-ம் பரிசு ரூ. 1,000-ம் அளிக்கப்படும். எங்கள் ஸீல் வைத்த விடைகள்படி எல்லாம் சரியாக இருக்க வேண்டும்.

RAINBOW COMPETITIONS

KEYS NO. 49 65 TO 80=290

73	68	80	69
71	78	66	75
70	79	67	74
76	65	77	72

We hereby certify that the above is the solution in original deposited with us by Rainbow Competitions No. 49 on 19-3-51 in a sealed cover which was opened in our presence to-day and that a copy of the above solution has been lodged with the Bank.

For The Premier Bank of India Ltd.

முடிவு தேதி 28—5—51. விடை 12—6—51.

பிரவேசக் கட்டணம்: கூபன் 1-க்கு ரூ. 1—0—0. 6 கூபன் கொண்ட ஷெட் 1-க்கு ரூ. 5—0—0

298

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:—67 முதல் 82 வரையுள்ள எண்களைக் கொடுக்கப்பட்டிருக்கும் கட்டங்களில், மேலிருந்து கீழும், இடமிருந்து வலமும், குறுக்காகவும் எப்படிக் கூட்டினாலும் 298 வரும்படியாக அமைக்க வேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும். **விதிகள்:**—தனி வெள்ளைக் காகிதத்தில் தேவையான கட்டத்துடன் எத்தனை கூப்பன்கள் வேண்டுமானாலும் எழுதி அனுப்பலாம். ஒவ்வொரு கூப்பனிலும் பெயர், விலாசம், எண்கள் எல்லாம் ஆங்கிலத்தில் விளக்கமாக எழுதப்பட வேண்டும். பிரவேசக் கட்டணத்தை கிராஸ் செய்த போஸ்டல் ஆர்டர் மூலமாகவோ அல்லது மணியார்டர் மூலமாகவோ அனுப்பலாம். மணியார்டர் செய்த ரசீதை கூபன்களுடன் சேர்த்து அனுப்ப வேண்டும். வசூலுக்குத் தகுந்தபடி, பரிசு பகிர்ந்து அளிக்கப்படும். போட்டி சம்பந்தமாக மானேஜர் தீர்ப்பே முடிவானது; சட்டபூர்வமாய்க் கட்டுப்படுவதுமாகும். போட்டி முடிவு RAINBOW மாதமிருமுறை பத்திரிகையில் பிரசுரிக்கப்படும்; அல்லது 4 அணா ஸ்டாம்பு அனுப்பினால் விடை அனுப்பப்படும்.

கூபன்கள் அனுப்ப வேண்டிய விலாசம்:—

THE RAINBOW COMPETITIONS No. 51, 306 (21) Mint Street, MADRAS-1.

ரிஜிஸ்டர் நெ. 249. **ரூபாய் 25,000 பரிசு** போட்டி நெ. 52

சரியான விடை Premier Bank of India Ltd., Madras-ல் சீல் செய்து வைக்கப்பட்டுள்ளது. (மற்றவை மேலே கூறப்பட்டுள்ளது போல்). முடிவு தேதி 12-6-51. விடை: 27-6-51.

பிரவேசக் கட்டணம் கூபன் 1-க்கு ரூ. 1/- 6 கூபன் கொண்ட ஷெட் 1-க்கு ரூ. 5/-

302

விடைகள் கண்டுபிடிக்கும் விதம்:—68 முதல் 83 வரையுள்ள எண்களை கொடுக்கப்பட்டுள்ள கட்டங்களில் எப்படிக் கூட்டினாலும் 302 வரும்படி அமைக்கவேண்டும். ஒரு எண்ணை ஒரே தடவைதான் உபயோகிக்க வேண்டும். மற்ற விபரங்கள் மேற்கூறியதுபோல்.

The Rainbow Competitions, No. 52,
306. (21) Mint Street, Madras—1.

பிரிய சகோதரிகளே!

நான் ஓர் நர்ஸ் அல்ல. டாக்டரும் அல்ல. எனக்கு வைத்தியமும் தெரியாது. நானோ உங்களைப்போல் ஓர் குடித்தனப்பெண். எனது கல்யாணமான ஒரு வருடத்திற்குப்பின் துர்பாக்கியத்தினால் விகோரியாவும் (வெட்டை) சூதக வியாதியும் எனக்கு ஏற்பட்டு விட்டன. மாதவிடாய் நின்று விட்டது. அவ்வாறு ஏற்பட்டாலும் மிகுந்த வேதனையுடன் சொர்ப்பமாகவே வெளி வந்தது. வெள்ளை நீர் (ஸ்வேதப்ரதர்) அதிகம் வெளிவருவதால் தினம் தினம் மிகவும் பலவீனம் அதிகரித்துக்கொண்டே வந்தது. முகம் வெளுத்துவிட்டது. வீட்டு வேலை செய்யவும் முடியவில்லை. எப்பொழுதும் தலை கிறு கிறுப்பு இருந்து வந்தது. இடுப்பு வலியும் ஏற்பட என் சரீரமே கெட்டுவிட்டது. என் கணவர் நூற்றுக்கணக்கான ரூபாய் செலவு செய்து மருந்து வாங்கிக் கொடுத்தும் பலன் இல்லை. இரண்டு ஆண்டுகள் மிகுந்த துக்கத்துடன் ஓடி மறைந்தன. நல்ல காலமாக ஒருநாள் ஓர் சந்நியாசி பிச்சைக்காக என் வீட்டு வாசலில் நின்று கொண்டிருந்தார். நான் பிச்சைபோட வெளியில் வந்ததும், அவர் என் முகத்தைப் பார்த்து, "அம்மா, உனக்கு என்ன வியாதி? இந்த வயதிலேயே உன் முகம் பஞ்சுபோன்று இருக்கிறதே?" என்றார். நான் முழு விருத்தாந்தங்களையும் கூறினேன். அவர் என் கணவரைக் கூப்பிட்டு, ஓர் மருந்து சொன்னார். அம்மருந்தை 15 தினங்கள் சாப்பிட்டதும் என் முழு வியாதியும் தீர்ந்துவிட்டது. ஆண்டவன் அருளால் இப்பொழுது நான் பல குழந்தைகளுக்குத் தாயாக இருந்து வருகிறேன். இம்மருந்தினால் நூற்றுக்கணக்கான பெண்களுக்கு நன்மை செய்து வருகின்றேன். இந்த அற்புத மருந்தை இக்கொடிய ரோகத்தினால் வாடும் என் சகோதரிகளின் நன்மைக்காகவே அசல் விலைக்குக் கொடுத்து வருகிறேன். ஆண்டவன் எனக்குப் போதிய செல்வம் அளித்திருக்கிறார். இதன் மூலம் நான் லாபம் சம்பாதிக்க விரும்பவில்லை. ஒரு பெண்ணிற்கு 15 தின மருந்தின் அசல் விலை ரூ. 2-14-0 [ரூபாய் இரண்டு அணா பதினான்கு]. தபால் செலவு தனி.

இத்துஷ்ட ரோகத்தினால் பிடிக்கப்பட்டவர்கள் உடனே எழுதுங்கள். என் கையாலேயே மருந்து தயாரித்து, வி. பி. பி. மூலம் அனுப்புகிறேன். தர்மத்தின் பொருட்டு அசல் விலைக்கே மருந்து கொடுக்கப்படுகிறது. அவசியம் கவனிக்க: இந்த ரோகத்திற்குத் தான் என்னிடம் மருந்து உண்டு. மற்ற வியாதியைப் பற்றிய மருந்திற்கு எழுதவேண்டாம்.

BIBI CHARAN PIARI

SANT NAGAR (G.M.), JULLUNDUR CITY.

இது செய்தி

தியேட்டர்காரர் எதிர்ப்பு

தஞ்சை ஜில்லாவில் ஒரு தியேட்டரை நடத்திவரும் ஆர். எம். சேஷாத்திரி என்பவர், சர்க்காரின் 'செய்திப் படங்களைத் திரையிட்டுத்தான் ஆகவேண்டும்' என்ற நிபந்தனையை ரத்து செய்வதற்கு உத்தரவு பிறப்பிக்கும்படி கோரி சென்ற மாதம் 20-ம் தேதி சென்னை ஹைக்கோர்ட்டில் ஒரு மனுவைத் தாக்கல் செய்திருக்கிறார். இப்படி நிபந்தனை செய்வது, தொழிலில் குறுக்கிடுவதுடன், அபிப்பிராயங்களை வெளியிடும் சுதந்திரத்திலும் குறுக்கிடுவதாகும் என்றும், அரசியல் சட்டத்தில் கண்டுள்ள மூலாதார உரிமைக்கு இது விரோதமானது என்றும் அவர் தமது மனுவில் குறிப்பிட்டிருக்கிறார். நீதிபதிகள் மனுவை ஏற்றுக் கொண்டு எதிர்த்தரப்புக்கு நோட்டீஸ் கொடுக்க உத்தரவிட்டுள்ளனர்.

புகை பிடிக்கத் தடை

இம் மாதம் 2ம் தேதி நடைபெற்ற அசெம்பிளி கூட்டத்தில் மந்திரி கனம் மாதவ மேனன் சினிமா, நாடகக் கொட்டகைகளில் புகை பிடிப்போரைத் தண்டிக்கும் ஒரு மசோதாவைப் பிரேரேபித்தார். காட்சிகள் நடைபெறும்போது புகை பிடிப்பவர்களைத் தடை செய்தும், அதை மீறி நடப்பவர்களை வெளியேற்றி, வழக்குத் தொடர்ந்து, ரூ. 50 வரை அபராதம் விதிக்கவும் போலீஸாருக்கு அதிகாரம் அளிக்க வேண்டுமென்பதே இந்த மசோதாவின் கருத்து. மசோதா நிறைவேற்றப்பட்டது. இப்போதுள்ளது போலவே இனியும் மாட்டினிக் காட்சிகளில் மட்டுமே இந்த உத்தரவு அமல் நடத்தப்படும்.

சினிமா ரஸிகர்கள் சங்கம்

சென்ற மாதம் 1ம் தேதி சினிமா ரஸிகர்கள் சங்கத்தின் வருஷாந்திரப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அவ்வமயம் 1951-52-ம் வருஷத்துக்கான நிர்வாகிகளின் தேர்தல் நடைபெற்றது. வி. ஸி. கோபால ரத்னம் தலைவராகவும், ஏ. அருணாசலம், பி. நாராயண குருப், ராஜம்மாள் அனந்தராமன் மூவரும் உபதலைவர்களாகவும், இ. பி. சாமுவேல் காரியதரிசியாகவும், ஏ. கே. லால் கூட்டுக் காரியதரிசியாகவும், ஓ. சைமன் பொக்கிஷதாரராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டனர். இது தவிர எட்டுப் பேர்கள் நிர்வாகக் கமிட்டி அங்கத்தினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டனர்.

சென்ற மாதம் 22ம் தேதி இந்த சங்கத்தின் ஆதரவில் ஒரு பொதுக் கூட்டம் நடைபெற்றது. சென்னைக்கு விஜயம் செய்திருந்த "கிம்" என்ற ஆங்கிலப் படத்தின் டெக்னிகல் அட்வைஸரான மிஸ்டர் ஹெபஸ்ஜி "கிம்" படத் தயாரிப்பு பற்றி பேசினார்.

சங்கத்தின் முப்பது அங்கத்தினர்கள் ஒரு கோஷ்டியாக, சென்ற மாதம் 26ம் தேதி ஏவி. எம். ஸ்டுடியோவுக்குச் சென்று பார்த்தார்களாம். ஸ்டுடியோ சிப்பந்திகள், அவர்களுக்கு எல்லாவற்றையும் விளக்கிக் கூறி, தேநீர் விருந்தும் அளித்து அனுப்பினார்களாம்.

பாராட்டுக் கூட்டம்

ஏவி. எம்.மின் "ஓர் இரவு" படத்தின் நடிகர்கள், நடிகர் டி. எஸ். துரைராஜ் தலைமையில் ஒன்று சேர்ந்து, படத்தின் டைரெக்டர் ப. நீலகண்டனைப் பாராட்ட

திருவல்லிக்கேணி நேஷனல் உயர்தரப் பள்ளியினர் சென்ற மாதம் நடத்திய "துளஸி தாஸ்" நாடகத்தில் பி. எஸ். இந்திரா, பி. எஸ். மாலதி ஆகிய இருவரும் திறம்பட நடித்தனர்.

வெளிவந்துவிட்டன!

"நான் நட்சத்திரம்"

சினிமா நடிகை ராஜம்மா தான் நட்சத்திரமான கதையைத்தானே கூறும் சுவாரஸ்யமான புத்தகம். அழகிய அட்டைப் படம். ஏராளமான படங்கள். விலை 8 அணா.

அஞ்சலியின் ஆசை

அழகி ஒருத்தி அழகனைக் காதலிக்க, கடைசியில் அந்தக் காதல் படுத்தும் பாட்டைப் படித்துப் பாருங்கள். நெஞ்சை அள்ளும் நிகழ்ச்சிகள் நிறைந்தது. விலை 8 அணா.

25% கமிஷன் கழித்து முன்பணம் அனுப்பும் ஏஜண்டுகளுக்கு மட்டுமே பிரதிகள் அனுப்பி வைக்கப்படும்

விவரங்களுக்கு:

டம் டம் பதிப்பகம்,
அரண்மனைக்காரத் தெரு, சென்னை-1.

நமது இலங்கை ஏஜண்டு:

மோகன் & கம்பெனி,
66, 1-ம் குறுக்குத் தெரு, கொழும்பு.
தபால் பெட்டி—964.

சென்ற மாதம் 24ம் தேதி ஒரு கூட்டம் நடத்தினார்கள். இந்தப் பாராட்டுக் கூட்டம் லலிதா-பத்மினியின் பங்களாவில் என். எஸ். கிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது. பல நக்ஷத்திரங்களும் குறிப்பிட்ட ஒரு சில பத்திரிகாசிரியர்களும் கூட்டத்திற்கு வந்திருந்தனர். ப. நீலகண்டனின் திறமையைப் பாராட்டிப் பலர் பேசினார்கள். ப. நீலகண்டனுக்கு பட நடிகர்களின் சார்பில் ஒரு பெரிய வெள்ளிக் கோப்பை பரிசாக அளிக்கப்பட்டது.

பரிசளிப்பு வைபவம்

மதுரை கலாபிமானிகள் சங்கத்தினர், அவர்கள் நடத்திய 1950 வருஷப் படத் தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்குப் பரிசளிக்கும் வைபவத்தை சென்ற மாதம் 29ம் தேதி நடத்தினார்கள். அந்த வைபவம் மதுரை, ரீகல் டாக்கீஸில், மதுரை ஜில்லா ஜட்ஜின் தலைமையில் நடைபெற்றது.

வஸந்தா விடுதலை

சினிமா நடிகை கே. எல். வி. வஸந்தா, சேலத்தில் ஒரு கிழவர்மீது குதிரையை ஏற்றி அவருடைய மரணத்திற்குக் காரணமாக இருந்ததாக அவர்மீது நடைபெற்று வந்த வழக்கில், மாஜிஸ்டிரேட் குற்றம் ருசுவாகவில்லை என்று கூறி நடிகையை விடுதலை செய்து விட்டார்.

மோட்டார் விபத்தில் துரைராஜ்

பிரபல ஹாஸ்ய நடிகர் டி. எஸ். துரைராஜ் ஒரு பலத்த மோட்டார் விபத்திற்குள்ளானார். அவர் சென்னைக்கு தம் சொந்த காரில் வந்து கொண்டிருக்கையில் காஞ்சிவரத்திற்கு அருகில் அவரது மோட்டாரும் எதிராக வந்த இன்னொரு மோட்டாரும் மோதிக் கொண்டன. இரண்டு மோட்டார்களும் படுசேதம் அடைந்து விட்டன. ஆச்சரியப் படத்தக்க வகையில் துரைராஜ் சொற்பக் காயங்களுடன் தப்பிவிட்டார். இப்பொழுது அவர் சிகித்ஸை பெற்றுவருகிறார்.

ஸ்ரீ பார்த்தசாரதி ஸ்வாமி சபா

இந்த சபையினர் சென்ற மாதம் 27ம் தேதி அரியக்குடி ராமானுஜய்யங்காரின் 61-வது பிறந்த தினத்தைக் கொண்டாடினார்கள். ஒரு வரவேற்புப் பத்திரத்தை வாசித்து, அதை ஒரு அழகான தந்தப் பேழையில் வைத்து அவருக்கு அளித்

தார்கள். அன்றைய வைபவம் ஸ்ரீ. வி. வி. ஸ்ரீனிவாஸ அய்யங்காரின் தலைமையில் நடைபெற்றது.

28, 29 தேதிகளில் "திருப்பாவை இன்னிசை நிகழ்ச்சி" நடைபெற்றது. மேற்படி இரு தினங்களிலும் தக்க பக்க வாத்தியங்களுடன் அரியக்குடி ராமானுஜய்யங்கார் திருப்பாவையிலுள்ள முக்கியமான பாசுரங்களை இசை அமைத்து இனிமையாகப் பாடினார். அவருக்கு நீதிபதி டபிள்யு. எஸ். கிருஷ்ணசாமி நாயுடு சங்கத்தின் சார்பில் ஒரு பண முடிப்பை பரிசளித்தார்.

சங்கத்தின் புது வருஷத்திற்கான தேர்தலும் நடைபெற்றது. நமது பத்திரிகை அச்சாகும் கமர்ஷியல் அச்சகத்தின் உதவி மானேஜர் ஸ்ரீ. ஸ்ரீராம், ஸ்ரீ. எம். ஜி. பார்த்தசாரதி ஆகியோர்கள் ஏகமான போட்டிக்கிடையில் பெருவாரியான வோட்டுகள் பெற்று காரியதரிசிகளாகத் தேர்ந்தெடுக்கப் பட்டனர்.

சென்னை மேடையில் சென்ற மாதம்

சென்ற மாதம் 14-ம் தேதி–தமிழ் வருஷப் பிறப்பன்று—சென்னையில் மூன்று நாடகங்கள் நடைபெற்றன. அவைகளில் ஒன்று "கல்கி" பத்திரிகையில் இரண்டு வருஷங்களுக்கு அதிகமாகவே தொடர்ச்சியாக வெளிவந்த "சிவகாமியின் சபதம்" என்ற சரித்திர நாவலாகும். ஸ்ரீ. கல்கியால் எழுதப்பட்ட இந்த சரித்திர சம்பந்தமான நாடகம் அன்று ஸ்ரீ ராமகிருஷ்ண கிருபா அமெச்சூர் கோஷ்டியால் நாடகமாக நடிக்கப்பட்டது. அவ்வளவு பெரிய ஒரு கதையை அன்று நான்கு மணி நேரத்திற்குள் நாடகமாகப் பார்த்த போது வியப்பாகத்தான் இருந்தது. விறுவிறுப்புடன் சுவைகுன்றாது இதை நாடகமாக்கியவர்கள் பாராட்டுதலுக்கு உரியவர்களே. நாகநந்தி அடிகளாக நடித்த டாக்டர் ராமமூர்த்தி, ஆயனச் சிற்பியாக நடித்த ரங்கப்பா, இவர்களது நடிப்பு மிகச் சிறப்பாக இருந்தது. சிரமமும், சிரத்தையும் எடுத்துக்கொண்டு கதையின் காலத்திற்கு ஏற்ற ஆடை, ஆபரணங்களைத் தேர்ந்தெடுத்திருந்தது குறிப்பிடத்தக்கது. அன்றைய நாடகம் முதல் நாடகம்; ஆகவே சிற்சில குறைகள் காணப்பட்டன. சென்னை பிரதம மந்திரி கனம். பி. எஸ். குமாரஸ்வாமி

போன்: 55214 தந்தி: "விமானம்"

ஆசிரியர் வாசவனின் பதிப்புரையுடன்

கடற்கரை மோகினி

"ஜெகசிற்பியன்" எழுதிய உணர்ச்சி மிக்க காதல் நாவல்

அழகிய மூவர்ண அட்டை! வார்னிஷ் பதிப்பு!!

விலை அணா 8 தான்!

எங்கும் ஏஜெண்டுகள் தேவை. 25% கழித்து முன்பணம் அனுப்புக.

மே 25-ல் விற்பனைக்கு வருகிறது!

சக்திவேல் பிரசுரம்

51-A, அரண்மனைக்காரத்தெரு, சென்னை-1.

விற்பனையாகின்றன!

வாசவனின் "பருவதாகம்"

M. S. வனஜாவின் "காலேஜ் காதல்"

ஒவ்வொன்றும் எட்டு அணா

ராஜா கதையின் சிறப்பையும் நடிகர்க ளின் திறமையையும் புகழ்ந்து பேசினர். தலைமையிலும். முன்னிலையிலும் இந்த நாடகம் நடைபெற்றது.

அதே தினம், தமிழ்க்கலை வளர்ச்சி மன்றத்தின் அங்கத்தினர்கள் "ஏழை" என்னும் சமூக நாடகத்தை வி. பி. ஹாலில் நடித்தார்கள்.

"அந்தமான் கைதி" என்ற நாடகம் அதே தினம் சென்னை சௌந்தர்ய மஹா லில் நடைபெற்றது. தேவி நவசக்தி பள் ளிக்கூட கட்டட நிதிக்கு உதவ இந்த நாடகம் நடைபெற்றது. தேவி நவசக்தி மக்கள் மன்றத்தின் அங்கத்தினர்கள் நாடகத்தைத் திறம்பட நடித்தார்கள்.

மயிலை, ரஸிக ரஞ்சனி சபாவில் சென்ற மாதம் 28, 29ம் தேதிகளில் "இன்ஸ் பெக்டர்" நாடகம் நடைபெற்றது. கா. சோமசுந்தரம் எழுதிய இந்த நாட கத்தை இரு தினங்களிலும் டி. கே. எஸ். பிரதர்ஸ் நடிகர்கள் மிகவும் திறம்பட நடித்தார்கள்.

சென்னை, திருவல்லிக்கேணி, ஸ்ரீ சந் தோஷ் கலைக் கழகத்தினர், இம்மாதம் 5-ம் தேதி "ஏழையின் கண்ணீர்" என்ற சமூக நாடகத்தை, சௌந்தர்ய மஹா லில் நடித்தார்கள்.

"ஜீவ பூமி"

திருவல்லிக்கேணி, பைன் ஆர்ட்ஸ் ஸொஸைட்டியினர் "ஜீவ பூமி" என்ற நாடகத்தைஅடுத்தமாதம் சென்னை ரஸிக ரஞ்சனி சபாவில் நடிக்கப் போகிறார்க ளாம். சரித்திர சம்பந்தமான இந்த நாடகத்தின் கதை வசனங்களை 'சுதேச மித்திரன்' உதவி ஆசிரியர் "சாண்டில் யன்" எழுதியிருக்கிறார்.

கவியின் கனவு

ஸ்ரீ சக்தி நாடக சபையார், தற்போது மதுரையில் முகாமிட்டு நாடகங்கள் நடத்திவருகின்றனர். சென்றமாதம் 15ம் தேதி முதல் அவர்கள் "கவியின் கனவு" நாடகத்தை நடித்து வருகின்றனர்.

தமிழ்த் திருவிழா

சென்ற மாதம் 29, 30 தேதிகள் இம் மாதம் முதல் தேதி ஆக மூன்று நாட் கள் நான்காவது தமிழ்த் திருவிழா வெகு சிறப்பாக நடைபெற்றது. இத் திரு விழா இவ்வருஷம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது. சுதேசமித்திரன் ஆசிரி யர் ஸ்ரீ ஸி. ஆர். ஸ்ரீநிவாஸன் தலைமை யில் நடைபெற்ற இந்த விழாவை ஸர். ஆர்.கே. ஷண்முகம் செட்டியார் திறந்து வைத்தார். எம். எல். வசந்தகுமாரியின் இன்னிசையுடன் திருவிழா முடிவு பெற் றது. தென்னிந்தியாவிலிருந்த பல எழுத் தாளர்கள் சென்று இதில் கலந்து கொண் டார்கள்.

மிருதங்க அரங்கேற்றம்

சென்ற மாதம் 14ம் தேதி, சிரஞ்சீவி. எஸ். தரணிபாலனின் மிருதங்க அரங் கேற்றம் கும்பகோணத்தில் நடைபெற் றது.

பம்பாய்த் தமிழ்ச் சங்கம்

பம்பாய்த் தமிழ்ச் சங்கத்தினர், சென்ற மாதம் 29, 30ம் தேதிகளில் கம் பர் திருவிழாவைக் கொண்டாடினர் கள்.

இந்திய மாதர் சங்க ஆண்டு விழா

வட சென்னை, இந்திய மாதர் சங்கத் தின் 3-ம் ஆண்டு நிறைவு விழாக் கொண் டாட்டம் சென்ற மாதம் 15-ம் தேதி நடைபெற்றது. சென்னை பிரதம மந்திரி இந்த விழாவுக்குத் தலைமை வகித்தார். ஆசிரியர் "கல்கி" ஹிந்திப் பரீட்சைப் பத்திரங்களை வழங்கினர்.

தமிழ் நாட்டில் சுரய்யா

இலங்கைப் பிரமுகர் மூஸ், ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் தயாரித்து வரும், பெயரிடப்படாத, தமிழ்-தெலுங் குப் படத்தில் ஒரு காட்சியில் வட நாட்டு நடிகை சுரய்யாவின் நாட்டிய மும் இருக்குமாம். இதற்கான ஏற் பாடுகள் நடைபெற்று வருவதாகத் தெரிகிறது.

வாழ்த்துகிறோம்

எம். எஸ். பிக்சர்ஸ் பாகஸ்தரான ஸ்ரீ ஏ. எல். எஸ். ஸ்ரீனிவாஸன் தம் சகோதரி சௌ. சுவர்ணவல்லியின் திருமணத்தை வெகு சிறப்பாக நடத்தினர். சென்ற மாதம் 22ம் தேதி சிறுகூடல்பட்டியில் நடைபெற்றது இந்த விவாகம். மாப் பிள்ளை சிரஞ்சீவி முத்துக் கருப்பன், ஆத் தங்குடி ஸ்ரீ. ஏ. ஆர். எம். எஸ். சொக்க லிங்கம் செட்டியார் மகன். தம்பதிகளுக்கு சினிமா உலகப் பிரமுகர்களிடமிருந்து ஆசிகளும் வெகுமதிகளும் வந்தன.



ஆலப்புழை கே. அண்ட் சே. புரடக்ஷன்ஸாரின் தயாரிப்பான "ஜீவித நௌகா" மலையாளப் படத்தில் பி. எஸ். சரோஜா மிக திறமையாக நடித்திருக்கிறாராம்.

"தீக்ஷா" செலுங்குப் படத்தில் சேது என்ற இந்தப் பையனுடைய நடிப்பு 'சபாஷ்' பெறக் கூடியதா யிருக்குமாம்.

எம். எஸ். பிக்சர்ஸ்
வெளியீடான "மோ
ஹன சுந்தரம்" தமிழ்ப்
படத்தில் நடிக்கும் டி.
கே. ராமச்சந்திரன்.

ஸ்ரீ ராஜராஜேஸ்வரியின் "சௌதா
மினி" தமிழ்ப் படத்தில் எஸ்.
வரலக்ஷ்மி கதாநாயகியாக நடித்
திருக்கிறார்.

பொதுஜனம் பேசுகிறார்

எச்சரிக்கை

"நீங்கள் சினிமாவில் நடிக்கப் பிரியப்படுகிறீர்களா? அப்படியானால் எங்களுக்குப் பதினைந்து ரூபாய் அனுப்புங்கள்; பத்து ரூபாய் அனுப்புங்கள்." —இது போன்ற விளம்பரங்கள் இப்போது கணக்கு வழக்கின்றி வெளி வருகின்றன. சினிமாவில் நடிக்கப் பிரியமுள்ளவர்கள் புகைப் படங்களோடு, அவர்கள் கேட்கும் பணத்தையும் மேற்படி விளம்பரம் செய்த கம்பெனிகளுக்கு அனுப்பினால், அதன் பிறகு அக்கம்பெனிகளிலிருந்து ஒரு மூக்காலணாக் கார்டுகூட வராது. இப்படிப்பட்ட விளம்பரங்களைப் பார்த்து ரசிகர்கள் ஏமாறாதிருக்கும்படி எச்சரிக்கை செய்கிறேன். சினிமாவில் நடிக்கப் பிரியமுள்ள அன்பர்கள் அந்தந்த ஊரில் இருபது அல்லது முப்பது பேர்களாகச் சேர்ந்துகொண்டு "அமெச்சூர் நாடகக் கழகம்" ஒன்றை ஏற்படுத்தி, அதன் சார்பாக அடிக்கடி நல்ல நாடகங்களை நடத்துங்கள். அந்த நாடகங்களுக்கு ஏவி.எம்., எஸ்.எஸ். வாஸன் போன்ற பிரபல சினிமா டைரெக்டர்களை அழையுங்கள். உங்கள் நாடகங்களைப் பார்க்கவரும் அப்பிரமுகர்கள் திறமையுள்ள புது முகங்களை சினிமாவுக்கெனத் தேர்ந்தெடுத்துக் கொள்ளுவார்கள்.

மூ. வெ. ராஜகோபால்
தவளேஸ்வரம்.

நியாயமா?

திருப்பூரில் அநேக மாதங்களாக ஒரு டூரிங் சினிமா லைசென்ஸ் கிடைக்காமல் சும்மாவே கிடந்து வருகிறது. சர்க்கார் சமீபத்தில் புதிதாக ஒரு சட்டம் பிறப்பித்திருப்பதாகவும், அதன்படி 50,000 ஜனத்தொகைக்கு மேற்பட்ட டவுனில் டூரிங் சினிமாக்களை அனுமதிக்கக்கூடாது என்றும், அதனால் லைசென்ஸ் மறுக்கப்பட்டதென்றும் கூறப்படுகிறது. ஆனால் இந்த டூரிங் சினிமாக்காரர் லைசென்ஸுக்கு விண்ணப்பித்ததோ சென்ற வருஷம் மார்ச்சு பாத ஆரம்பத்தில். இவ்விதம் சட்டம் திடீரென்று போட்டதில், முந்தியே விண்ணப்பித்து லைசென்ஸுக்குக் காத்துக் கிடந்த மேற்படி டூரிங் சினிமாக்காரர் போன்றவர்கள், காலைவாரி விடப்பட்டது போன்ற நிலைமைக்கு வந்துவிட்டனர். இது என்ன நியாயம்? "காருண்யம், நீதி, தர்ம சிந்தனை இவைகளையெல்லாம் நம் ஜனநாயக சர்க்கார் உதறித் தள்ளிவிட்டார்களா!" என்று கூட சிந்திக்க வேண்டியிருக்கிறது.

—ஆர். கே. வேலு
திருப்பூர்.

துண்டுப் பிரசுரங்கள்

ஆங்கிலப் படங்களின் வெற்றிக்கு அப் படங்களுக்கென சம்பந்தப்பட்டவர்கள் அச்சடித்து வினியோகிக்கும் துண்டுப் பிரசுரங்களும் ஒரு முக்கிய காரணமாகும். படத்தின் சுவாரஸ்யமான கட்டங்களில் பலவற்றைப் பொறுக்கி அவைகளைப் பல வர்ணங்களில் அச்சடித்து துண்டுப் பிரசுரங்களாக படம் திரையிடப்படுமுன் வெளியிடுகின்றனர். மேனாட்டுப் பட வினியோகஸ்தர்கள் இதை முக்கிய காரியமாகச் செய்து வருகிறார்கள். இவை அவர்களுக்கு மிகவும் பயன்படுகின்றன. அத் துண்டுப் பிரசுரங்கள், வரப்போகும் அப்படங்களைப் பார்க்கும்படி ரசிகர்களைத் தூண்டுகின்றன.

"ஜீவன்"
கொழும்பு-10.

* பரிசு பெற்றவர்: மூ. வெ. ராஜகோபால், c/o க்ராம்டன் என்ஜினீயரிங் கம்பெனி, தவளேஸ்வரம்.

எது சீர்திருத்தம்?

"பத்திரிகைச் சுதந்திரம்" என்ற சட்ட ஆதாரத்தை வைத்துக் கொண்டு சில பத்திரிகைகள் செய்து வரும் துர்ப்பிரசாரம் வரம்புக்கு மீறிப் போகிறது. குறிப்பிட்ட சில சினிமா நக்ஷத்திரங்களையும், பிரபலஸ்தர்களையும் தாக்கி எழுதி, அவர்களின் அந்தரங்க வாழ்க்கையை அம்பலப் படுத்துவதாக ஜம்பமடித்துக் கொள்கின்றன. இது பத்திரிகை விற்பனையை அதிகப்படுத்திக் கொள்வதற்கு கையாளும் ஒருவகைத் தந்திரமே தவிர, உண்மையில் இதுவா சீர்திருத்தம்? இவ்விதமாக அவமானப் படுத்தப்படும் தனிப்பட்ட நபர்களெல்லாம் நம் போலவே நமது தாயகத்தில் பிறந்த சகோதர சகோதரிகள்தாம் என்பதை மறந்து விடலாமா! அப்படியே தவறு செய்திருந்தாலும் அவர்களைச் சீர்திருத்தும் முறை இதுதானா? இதுபோன்ற பத்திரிகைகளுக்கு ரசிக நண்பர்களும் அரசாங்கமும் ஆதரவளிக்கவே கூடாது.

எம். ஏ. அழகு,
ராயவரம்.

முன்னேற்றம்!

அணங்குகளை அரை நிர்வாணமாக்கி, ஸ்திரீகளின் பொக்கிஷமான அங்க அமைப்பை விகாரப்படுத்தி, அதைப் பல "போஸ்"களில் படமெடுத்துக் காட்டி மனிதனின் உணர்ச்சிகளைத் தூண்டிக் காசுபறிக்கும் கலையில் நம் படத் தயாரிப்பாளர்கள் வெகுவாய் முன்னேறி யிருக்கின்றனர். இதற்கு தயாரிப்பாளரையே முழுவதும் குறை கூறவும் முடியாது. ஆபாசமாக நடிக்க ஒப்புக்கொள்ளும் நடிகைகள் முதலில் ஒழிய வேண்டும். அதற்கு நல்ல படித்த பெண்களும், குடும்பப் பெண்களும் படங்களில் நடிக்க முன்வரவேண்டும். ஆனால், அவர்கள் இப்பொழுதுள்ள அவல நிலையில் ஒருக்காலும் நடிக்க வரமாட்டார்கள். ஆகையால் நம் நடிகர்கள், டைரக்டர்கள், படத் தயாரிப்பாளர்கள் எல்லோரும் 'தங்களுடைய மனைவி, அல்லது சகோதரி, இதுபோல அரை நிர்வாணமாகப் படத்தில் தோன்றினால் தங்கள் மனம் பொறுக்குமா என்பதை எண்ணிப் பார்த்து, நடிகைகளைத் தங்கள் சகோதரிகளாகப் பாவித்து அவர்

"கொலை! கொலை! போலீஸ்! போலீஸ்!" என்று கூச்சல் போடவேண்டிய இந்தக் கட்டத்தை "நிரபராதி" தமிழ்ப் படத்தில் காணலாம். முக்காமாலா, ஜி. வரலக்ஷ்மி.

களை கௌரவமாக நடிக்கச் செய்தால், படித்தவர்கள் சினிமாவில் நடிக்க முன் வருவார்கள்; நம் படக் கலையிலும் முன் னேற்றம் காண முடியும்.

ஜி. தசரதராமன்,
நாகபட்டினம்.

ஏமாற்ற வேண்டாம்!

சமீபகாலமாக சில படக் கம்பெனிகள் ஒரு மாறுதலை ஏற்படுத்த முனைந்தன. அக்கம்பெனிகள், "படத்தில் நடிக்க புது முகங்கள் தேவை" என விளம்பரப் படுத்தின. இதைக் கண்ணுற்ற அநேகர், அக் கம்பெனிகளுக்கு நேரிலும், கடிதம் மூலமாகவும் தம்மை அறிமுகப் படுத்திக் கொண்டனர். விளம்பரப்படுத்திய ஒரு வாரத்திற்குப் பின் விண்ணப்பதாரர்களுக்கு "தேர்தல் முடிந்துவிட்டது; சென்று வரலாம்"—என்ற பதில்தான் கிடைத்தது. உண்மையில் அப்படி நடந்திருப்பின் சந்தோஷப்பட வேண்டியதுதான். ஆனால், அக் கம்பெனிகள் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கும் படங்களில் புது முகங்களே இல்லாமல், நாம் திரும்பத் திரும்பப் பார்த்து சலித்துள்ள பழைய நடிகர் ஜாபிதாவே காணப்படுகிறது. இம்மாதிரி இக் கம்பெனிகள் வஞ்சகம் செய்வதின் நோக்கம்தான் என்ன? புது முகங்களை நம்பிப் படம் தயாரிக்க அவர்களுக்கு தைரியமில்லையா? தயாரித்தால் தோல்விதான் ஏற்படும் என்ற எண்ணமா? அப்படியாயின், "புது முகம் வேண்டும்" என்று விளம்பரப் படுத்துவானேன்? இந்த நாளில் புது முகங்கள் நடித்த படங்கள் வெற்றியையும், பழைய பிரபல நடிகர்கள் நடித்த படங்கள் படுதோல்வியையும் அடைந்துவருவதை நாம் காணவில்லையா? இனியேனும் "புது முகங்கள் தேவை" என்று விளம்பரப்படுத்தி ரஸிகர்களை ஏமாற்ற வேண்டாமெனப் பட முதலாளிகளைக் கேட்டுக் கொள்ளுகிறேன்.

வி. ஆர். சுந்தரராமன்,
மாங்காடு.

கவனிக்க வேண்டுகிறேன்!

தமிழ், தெலுங்குப் படங்கள் நல்ல முறையில் வெளிவருவதற்கு ஊக்கம் அளிக்க வேண்டுமென்ற நல்ல நோக்கத்துடன், வருஷா வருஷம், வெளிவரும் தமிழ், தெலுங்குப் படங்களில் சிறந்தவைகளுக்குப் பரிசளிக்க, நமது சென்னை

சர்க்கார் செய்த ஏற்பாடு மிக மிகப் போற்றத் தக்கதே. சென்ற ஆண்டு பரிசு பெற்ற "நவஜீவன"த்தின் பரிசளிப்பு விழா, சென்னையில் கொண்டாடப்பட்டது. இவ் விழாவுக்கு, சினிமாக் கலைஞர்கள், நடிகர்கள், ரஸிகர்கள் எல்லோரும் விஜயம் செய்திருந்தனராம். இவர்கள் எல்லோரும் அநேகமாக சென்னையில் வசிப்பவர்களே. அயலூரில் இருக்கும் சினிமா ரஸிகர்கள், கலைஞர்கள் முதலியோர் இவ்விழாவில் கலந்து இன்புற முடியாமல் போய்விட்டது. இதுபற்றி சினிமா ரஸிகர்கள் அநேகம் பேர் வருத்தமடைகின்றனர். ஆகவே ஒவ்வொரு வருஷமும், பரிசளிக்கும் படங்களின் பரிசளிப்பு விழாவை, சென்னை மாகாணத்தில் உள்ள ஒவ்வொரு முக்கிய நகரத்திலும் நடத்தினால், எல்லா பாகங்களிலும் உள்ள, கலைஞர்களும், ரஸிகர்களும், விழாவில் கலந்து கொண்டு மகிழ்ச்சி அடையலாம். ரஸிகர்களும், சினிமாக் கலைஞர்களையும், நடிகர்களையும் நேரில் கண்டு ஆனந்த மடைவார்கள். பரிசளிக்க ஏற்பாடு செய்யும் நம் சென்னை சர்க்கார், இவ்விஷயத்தைக் கருணை கூர்ந்து கவனித்து, அடுத்த ஆண்டே இதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமாய் கேட்டுக் கொள்ளுகிறோம்.

ராஜு - நாதன்,
சிங்கநல்லூர்.

புராணப் படங்கள் வேண்டும்!

தமிழ் நாட்டில் இன்று நல்ல புராணப் படங்கள் குறைந்துபோய், வகுப்புத் துவேஷம், பாஷைத் துவேஷம், தெய்வ துவேஷம், முதலியவை நிறைந்த சமூகப் படங்களும், காமவெறியைத் தூண்டும் வசனம் நிறைந்த படங்களும் வெளிவருகின்றன. சிறந்த முறையில் அமைந்த புராணப் படங்கள் வெளிவருதல் வேண்டும். அப்பொழுதுதான் பழந் தமிழ் நாட்டின் நாகரீகத்தைப் பற்றியும், புராணப் படங்களின் நன்மையைப்பற்றியும் மக்கள் அறியக்கூடும். நம் தமிழ் நாட்டு கலாச்சாரமும், புராணங்களும் காப்பாற்றப்படும். நம் தமிழ்நாடு பக்தியும், ஒழுக்கமும் நிறைந்து, சிறந்து விளங்கும்.

மு. சுப்பிரமணியன், கரூர்.

நீங்கள் மிக விரும்பும் புஸ்தகங்கள்

(மணமாகாதவர்கள் எழுதக் கூடாது)

எட்டே ரூபாய்க்கு 8 காம நூல்கள்

1. கொக்கோக சாஸ்திரம் (படங்களுடன்) ரூ. 1-8-0
2. 84 ஆசனங்கள் (படங்களுடன்) 1-8-0
3. நூறுவித முத்தங்கள் (படங்களுடன்) 1-8-0
4. 85 ஆலிங்கனங்கள் (படங்களுடன்) 1-8-0
5. பொன் இரவு (படங்களுடன்) 1-8-0
6. காதல் கடிதங்கள் 2-0-0
7. காதல் போட்டோக்கள் (18 இரவுப் படங்கள்) 2-0-0
8. ஸ்டுடியோவுக்குப் பின் (படங்களுடன்) 1-8-0

எட்டு புஸ்தகங்களும் சேர்ந்தாற்போல் ரூ. 8 தான்.

பாக்கிங், தபால் சார்ஜ் 12 அணா தனி.

கடிதங்களை ஆங்கிலத்தில்தான் எழுதவேண்டும்.

தற்போது கிடைக்கிறது

அமெரிக்க மாடல்
ரோல் பிலிம்
பாக்ஸ்
காமிரா

திருஷ்டி உபகரணத்துடன் உயர்ந்த லென்ஸுகள் பொருத்தப்பட்ட, விலை மலிவான மேன்மையான காமிரா, புதிதாய் கற்றுக் கொள்பவர்களும் எளிதாக உபயோகிக்கலாம். பிலிம் நெ. 120-ல் நீண்ட காலத் திருப்தியளிக்கும் 2¼" 3¼" சைஸ் போட்டோக்கள் எடுக்கலாம். திருப்திக்கு உத்திரவாதம். முழு விவரங்களுடன் விலை ரூ. 10—8—0. பாக்கிங் தபால் செலவு ரூ. 1—8—0 தனி. தோல் கேஸ் ரூ. 3. சரக்குகள் சொல்பமே உள்ளதால் தேவைக்கு உடனே எழுதவும். கடிதங்களை ஆங்கிலத்தில்தான் எழுத வேண்டும்.

Apply to: BENGAL TRADERS, (G.M.M.), P.O. 21, Aligarh, U.P.

எதிரும் புதிரும் [18-ம் பக்கத் தொடர்ச்சி]

"'தேவடியாள் பசப்பு' என்று கேட்டதில்லையா!" "இதில் அதிசயமென்ன?"

"அதில்லே, சார்! ஊருக்குப் புதுசு தானே நீங்கள்?"

"ஏன் அப்படிக் கேட்கிறீர்கள்?"

"அந்த அற்புதக் கதை உங்களுக்குத் தெரியாததால் அப்படி அனுமானிக்கிறேன்..."

"அற்புதக் கதையா!"

"ஆம்மா சார்! அலாவுதீன், அற்புத விளக்கு — அதெல்லாம் இதற்குமுன் வெறும் குப்பை! செத்துப் போனவளுக்கு,அதிகமிருந்தால்முப்பத்தேழு முப்பத்தெட்டு வயசு இருக்கலாம்; அவ்வளவுதான். மகளுக்கு என்ன வயசிருக்குமென்பது நமக்குத் தெரியும். இந்த ஊரு, சுத்துப்புறத்திலே இருக்கிற அத்தனை பணக்காரன்களும் அவளுக்கு ஆயிரக்கணக்கிலே, ஏன் பதினாயிரக் கணக்கிலேகூட காணிக்கை செலுத்திட்டு சுத்திச் சுத்தி வராங்க. ஆனால், அந்த ஆயாவையோ, பெண்ணையோ யாரும் அண்ட முடியவில்லே...!"

கொட்டையாக விழித்தான் அருணாசலம்!

"பார்த்தீங்களா! உங்களுக்கு இப்பப் புரியறதா?"

"புரியலே? சொல்லுங்க, மேலே!"

"கேளுங்க. அவ இந்த ஊருக்கு வந்து வருஷம் ஆருச்சு. ஒளிக் கதிருபோல் ஒரு தேவடியா கோயிலிலும், குளக்கரையிலும் உலாவின, பணமூட்டைகளுக்குத் தினவு எடுக்காமே இருக்குமா? அவ்வளவுதான்; தேர்முட்டி கிட்ட ஒரு சின்ன வீட்டிலே குடியேறியவளுக்கு தாசிப் பித்தர்களுடைய ஆஸ்தி பூராவந்து குவிஞ்சுட்டுது......"

"ஆமாய்யா. அந்த ஜி. என். புரொடக்ஷன்ஸ் முதலாளி தீனபந்துவின் கார் நேத்து அவ வீட்டு வாசலில் வெகுநேரம் நின்னுக்கிட்டுக் கிடந்ததே. நான் சோடாக் கடைக்குப் போனேன். கார் டிரைவரும் சிக்ரெட் பிடிக்க வந்தான்..."

"உம், அவனைத் துப்பு விசாரிச்சையோ?" என்று கண்ணாயிரம் குறுக்கிட்டான்.

"துப்பு ஒண்ணும் விசாரிக்கலே. அவனுகக் கேட்டான்; உங்க லாட்ஜிலே 'மீல்ஸ்' நல்லா இருக்குமான்னு. இருக்கும்னேன்."

"'அப்ப, சாப்பிட வேண்டியதுதான், பதினாயிர ரூபாயோடு வந்திருக்கிறார் எஜமான்! இப்போதைக்கு......'ன்னு அவன் சொல்லி முடியலே. அவரோட எஜமான் வெளியே வந்து ஹார்ன் குடுத்திட்டாரு. தலைதெறிக்க ஓடினான் டிரைவர்......" என்று சொல்லிச் சிரித்தான்.

"பார்த்தீங்களா ஸார்? இதே கதை தான்! நேத்து, இன்னிக்கல்ல; ஆறு வருஷமாக இந்த வியாபாரம் நடக்குது. உயிரு போனாலும் தம்பிடி கிளம்பாத சுக்காஞ் செட்டிகளெல்லாம் ஏமாந்துட்டாங்க, ஸார், அந்தப் பொம்மனாட்டி கிட்ட!"

"ஏன், ஸார்! இதையெல்லாம் நீங்கள் நம்புகிறீர்களா?" என்று கேட்டான் அருணாசலம்.

"ஓ! கஜகரணம் போட்டுப் பார்க்கறாங்க இரண்டு பேர்வழிங்க. மேலே கை வைக்க முடியல்லே?..."

"இனிமேல் கண்டிப்பா முடிஞ்சுடும்! ஆம்பிள்ளைங்களை நம்பக் கூடாதுன்னு மகளைக் குளவி கொட்டறதுபோல, கொட்டிக்கிட்டிருந்தவள் செத்து விழுந்துட்டாளே..."

"அட! இதென்ன இது, புதுப் புதிராய் போடறியே நீ?" என்று கேட்டான் கண்ணாயிரம்.

"ஆமாங்க! ஆத்தா, மகளுக்குள்ளே இது விவகாரமாம்; ஆம்பிள்ளையை நம்பப்படாதுன்னு அவுங்க பணம் மட்டும் தேவலியாங்கராளாம் மகள்!"

"சபாஷ்! அதுக்குக் கொஞ்சம் அறிவு இருக்கும் போலத் தெரியுது!"

"பாவம்! அந்தக் குட்டி பாடு திண்டாட்டமில்லியா இனிமேல்."

"திண்டாட்டமோ, இல்லே கொண்டாட்டமோ! பத்து நாள் போனா அதுவும் தெரிஞ்சு போயிடுது நன்னாலே..."

அந்த வம்பர்கள் இந்த ரீதியில் பேசிக்

இப்பொழுது தமிழ் நாட்டில் வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கும் "சௌதாமினி" தமிழ்ப் படத்தில் டி. ஆர். ராமச்சந்திரனும், நாகேஸ்வர ராவும் தோன்றும் காட்சி இது.

துடன் நடத்தினால் தான் என் மனதில் சாந்தி பிறக்கும். செத்தாலும் நெஞ்சு வேகும். இப்படி எப்பொழுதோ ஒரு சிந்தனை உண்டாகி மறைந்ததே—அது இன்று கிரியாம்சையில் பூர்த்தியடையும் காலமோ!

"என் இதய ராணி! உன் பெயரை உச்சரிக்கக் கூட எனது நாக்குக் கூசுகிறது! நீ எங்கு இருக்கிறாய்! இருக்கிறாயோ, எக்கதியானாயோ! எங்காவது உன்னைக் காண்பேனா என்று தேடுகிறேன். இன்னமும் தேடுவேன். நீ உயிருடனிருந்து, என் கண்ணிலகப்பட்டாலும் உன்னைக் கைவிட்டகிராதகனானஎன்னை நீ திரும்பிக்கூட பார்க்கமாட்டாயே. பின் எப்படி நான் பிராயச்சித்தம் செய்துகொள்வது?

"சரி! இனி இந்த உள்ளக் கொந்தளிப்பைத் தாங்கிக் கொண்டிருக்க என்னால் முடியாது. இதை நாளைக்குத் தீர்த்து விடுகிறேன்......" என்று தீர்மானிந்து, விளக்கைஅணைத்துவிட்டு, கண்களை இறுக மூடிக்கொண்டு, அப்பர் தேவாரத்தை முழங்கத் தொடங்கினான் அருணாசலம்.

கொண்டே போனார்கள். அருணாசலத்திற்கு தலை சுழன்றது. எழுந்து கொண்டு, "உலகம் பலவிதம் ஸார், வரட்டுமா நான். தூக்கம் வருகிறது..." என்றான்.

"செய்யுங்க; குட் நைட்!"

"குட்நைட்!"

அருணாசலம் தன் அறைக்குத் திரும்பி வந்து, கதவை அடைத்துக் கொண்டு படுக்கையில் சாய்ந்தான்.

சிந்தனைச் சுருள்கள் விரிந்தன.

"ஆண் பிள்ளைகளை நம்பக் கூடாதா! ஆமாம், அது மெய்தான்! பாவம், அவள் யாரை நம்பி மோசம் போனாளோ? அவள் தான் கற்ற பாடத்தை மகளுக்குக் கற்பித்திருக்கிறாள்! அதுவரையில் நியாயம்—ஆனால் ஆண்களை அவள் மோசம் செய்து வந்ததின் கருத்து?"

இந்த மனக்குழப்பத்திலிருந்து விடுபட நினைத்து, "சை! யார் எப்படிப் போனால் எனக்கென்ன? என் குழந்தையும், அவளும் எங்கு, எந்த நிலைமையில் திண்டாடுகிறார்களோ. இத்தனை வருஷங்களாக—பதினாறு வருஷங்களாக இல்லாத ஸ்திரீ சிந்தனையும், சபலமும் எனக்கு ஏன் தோன்றுகின்றன!

"எனக்கேற்பட்டிருப்பது ஸ்திரீ சபலமல்ல; ஒருத்திக்கு நான் இழைத்த துரோகத்திற்குப் பிராயச்சித்தமாக—இன்னொருத்தியை மணந்து—அவளை சௌரவத்

* * *

'கலாநிவாஸ்'த்தின் கூடத்து ஊஞ்சல் கமலத்தைத் தாங்கிக் கொண்டு "க்ரீச், கிரீச்"சென்று ஊசலாடிக் கொண்டிருந்தது.

"அம்மா, எதுத்த ஹோட்டல் மாடிலே இருக்கும் ஒருத்தர் வந்திருக்கிறாரு. உள்ளே இட்டாரட்டுங்களா?" என்று வந்து கேட்டான் தர்வான்.

"யாரது? வரச்சொல்லு பார்க்கலாம்" என்றாள் கமலம்.

மறு விநாடி உள்ளே வந்தான் அருணாசலம். ஆஜானுபாஹுவான தோற்றம், வாடியும் வனப்பு உலராத களை பொருந்திய முகம். பரந்த நெற்றி—கண்ணாடியின் பின்னால் குறுகுறுவென சஞ்சரிக்கும் தீக்ஷிண்யமான கண்கள். வெளேரென்ற வேஷ்டி, அங்கவஸ்திரம். இதுதான் அருணாசலம். (தொடரும்)

விரைவில் வெளிவருகிறது



விபரங்களுக்கு:

எனெஸ்கே பிலிம்ஸ்

6, வெங்கட்ராமய்யா தெரு,
தி. நகர், சென்னை—17.

புஸ்தகப் பொழுது

இன்ஸ்பெக்டர்

[நாடகாசிரியர்: நா. சோமசுந்தரன்: விலை ரூ. 1-8-0; கிடைக்குமிடம். இன்பநிலையம்; மயிலாப்பூர், சென்னை 4]

நாடக சம்பவங்களையும், கதாபாத்திரங்களையும் பார்க்கும்போது டி. கே. எஸ். பிரதர்ஸ் நடிகர்களை மனதிற் கொண்டே எழுதப்பட்ட நாடகம் இது என்பது தெளிவாகிறது. இன்ஸ்பெக்டரின் தங்கை கமலா தன் நடனஆசிரியருடன் நட்புக் கொண்டு-கர்ப்பமுறுகிருள். அவரால் அந்த நிலையில் நிராகரிக்கப்படுகிருள். அப்பொழுது இன்ஸ்பெக்டரின் குடும்ப கௌரவத்தைக் காப்பதற்காக, அவரால் வளர்க்கப்பட்ட ஒரு வாலிபன் அந்தப் பழியைத் தான் ஏற்றுக் கொண்டு கமலாவை மணந்து கொள்ள முன்வருகிருன். இச் சம்பவம் நம் தமிழ் நாட்டின் பண்புக்குச் சற்றும் பொருத்தமற்றது. மற்றபடி நாடகம் சுவாரஸ்யமாக இருக்கிறது. கதையின் முடிவு மிகவும் உயர்தரமாக இருக்கிறது. படிக்கவும், நடிக்கவும் ஏற்ற நாடகம் தான் இது.

THE FAIR PLAY

ஸ்ரீ. பி. லோகநாதனை ஆசிரியராகக் கொண்டு மாதமிருமுறை வெளிவரும் ஆங்கிலப் பத்திரிகை. அரசியல் கட்டுரை, சிறு கதைகள், கலைப் பகுதி இவைகளுடன் போட்டிப் பந்தயங்களுக்கான விடை விமர்சனங்களும் இப்பத்திரிகையில் அடங்கியுள்ளது. அட்டை கவர்ச்சியுடன் விளங்குகிறது. தனிப் பிரதி நான்கணு விலையுள்ள இப்பத்திரிகை 3/27, பிராட்வே. சென்னை 1—என்ற விலாஸத்திலிருந்து வெளிவருகிறது.

ஸ்ரீ ராஜ ராஜேஸ்வரி பிக்சர்ஸாரின் "சௌதாமினி"யில் எம். ஆர். சுவாமிநாதன், ராமச்சந்திரன், அங்கமுத்து, நடிக்கும், இந்தப் பயங்கரக் காட்சியைக் காணலாம்.

மைனுவின் பதில்

[ஆசிரியர்: எஸ். எம். சந்தானம். விலை: எட்டு அணு. கிடைக்குமிடம்: மைனு பிரசுரம், பழைய மாம்பலம், சென்னை. 17]

ஆசிரியர், 'ஹநுமான்' பத்திரிகையில் 'மைனுவைக் கேளுங்கள்' என்ற பகுதியில் வெளியிட்டு வந்த சினிமா சம்பந்தமான நேயர்களின் கேள்வி - பதில்களைப் புத்தகமாக வெளியிட்டிருக்கிருர். சில பதில்கள் தமாஷா யிருக்கின்றன.

நாட்டிய மாலா

[கூட்டு ஆசிரியர்: எஸ். சேதுராம சர்மா; விலை 8 அணு.

ராமபாணம்

பத்திரிகை உலகில் அனுபவம் பெற்ற கே. ஸ்ரீனிவாஸனை ஆசிரியராகக் கொண்டு வெளிவந்திருக்கிறது இந்த மாதம்—இருமுறைப் பத்திரிகை. காரசாரமான கட்டுரைகளும், ஜாதக பலனும் கொண்ட இந்தப் பத்திரிகையின் தனிப் பிரதி விலை இரண்டணா. 74, லாயிட்ஸ் ரோடு, சென்னை 14 என்ற விலாஸத்தில் கிடைக்கும்.

கதம்பம்

[விலை: தனிப் பிரதி 4 அணா. கிடைக்குமிடம் : 8, புதுத் தெரு, மைலாப்பூர்.]

எஸ். வி. முனிரத்தினத்தை ஆசிரியராகக் கொண்ட இப்பத்திரிகையில் கதை, கட்டுரை, சினிமாச் செய்தி முதலியவை அடங்கியுள்ளன.

சித்ரபூமி

இது கே. நடராஜனை ஆசிரியராகக் கொண்டு வெளி வந்திருக்கும் சினிமாப் பத்திரிகை. மூன்றணா விலையுள்ள இப்பத்திரிகையில் பட விமர்சனம், சினிமாச் செய்திகள், சிறுகதைகள் முதலியவை அடங்கியுள்ளன.

பஞ்சாங்கங்கள்

அதிக டாம்பீகம் இல்லாமல் தேவையான விஷயங்களுடன் சின்னஞ்சிறு 'கர வருஷ' பஞ்சாங்கம் ஒன்றை, கும்பகோணம், மட்டா சு. வே. ராமகிருஷ்ண செட்டியார், வெளியிட்டிருக்கிறார்.

திருமூர்த்திகளின் அழகான அட்டைப் படம், ஸ்ரீ சங்கராச்சார்ய சுவாமிகளின் முகப்புப் படம், ஆசாரியாரின் ஸ்ரீமுகம் இவைகளுடனும், மிகவும் உபயோகமுள்ள பஞ்சாங்கக் குறிப்புகளுடனும், நேர்த்தியான முறையில் அமைந்திருக்கிறது—சென்னை அருணா பப்ளிஷிங் ஹவுஸ் வெளியிட்டிருக்கும். ஸ்ரீ கர வருஷத்திய "திருமூர்த்தி பஞ்சாங்கம்."

பறக்கும் சாம்பு

சினிமா நடிகர் ரஞ்சன் எழுதிய சிறுவர்களுக்கான கதைப் புத்தகம் இது. புஸ்தகத்தைப் படித்தபின் இது சிறுவர்களுக்கு லாயக்கான கதையில்லை—என்ற எண்ணம்தான் ஏற்படுகிறது. எட்டணா விலையுள்ள இப்புத்தகத்தை, திருவல்லிக்கேணி, ஸ்ரீ வெங்கடரமணா & கம்பெனியார் பிரசுரித்திருக்கின்றனர்.



மலையாள தேசத்தில் சக்கைபோடு போடுகிறதாம் "ஜீவிதநௌகா" மலையாளப் படம். அதில் திக்குருச்சி சுகுமாரன் நாயர் பிரதம பாகத்தில் நடித்திருக்கிறார்

கெட்டிக்கார பட்டாபி

பட்டாபி என்ற ஒரு சிறுவனின் சாமர்த்தியங்களை ஆசிரியர் 'ஆயன்' சிறுவர்கள் ரஸிக்கும்படி எழுதியிருக்கிறார்.

கமலாவின் கருணை

கமலா—ஆனந்தன் இருவரும் உள்ளன்புடன் நேசிக்கின்றனர். இடையில் ஏற்படும் நெருக்கடியையும் சமாளித்து, இருவரும் மணந்து கொள்கின்றனர்.

ஒவ்வொன்றும் இரண்டணா விலையுள்ள மேற்படி புத்தகங்களை, சென்னை பெரம்பூர் பாரக்ஸ், படவட்டம்மன் கோவில் தெருவிலுள்ள "கொக்கரக்கோ பதிப்பகத்தார்" நேர்த்தியாக வெளியிட்டிருக்கின்றனர்.

வனசுந்தரி

சங்கர் பதிப்பகத்தார் சிறுவர்களை மகிழ்விக்க வெளியிட்டிருக்கும் புஸ்தகம் இது. ஒரு அணா விலையில் சென்னை (1)லிருந்து சங்கர் பதிப்பகத்தார் வெளியிட்டிருக்கின்றனர் இந்தப் புத்தகத்தை.

இது நிஜமா!

அதிகப் படங்களில் நடனம் ஆடி யுள்ளவர்கள் லலிதா—பத்மினி

எஸ். எஸ். கொக்கோவின் உண்மைப் பெயர் பசுபுலேட்டி ஸ்ரீராமுலு நாயுடு. அவர் பிரபல கண்ணாம்பாவுக்கு உறவினர்.

தமிழ் நாட்டிலேயே முதன் முதலாக ஸ்தாபிக்கப் பட்ட ஸ்டுடியோ "ஸௌண்ட் ஸிடி"—இன்றில்லை! அது தயாரித்த முதல் படம் "ஸ்ரீனிவாஸ கல்யாணம்"

இலங்கை
ரொம்பவும்
வி. என். ஜா

நடனம் தெரியாமலே "அசோக் குமாரி"ல் ஆடி, மிகப் புகழ் பெற்று விட்டார் கண்ணாம்பா!

நாராயண ராவுக்கு ———— சுண்டல் மாலை போடப் பட்டது!

[illegible] சகோதரர்கள் சங்கீத
[illegible] கோதரர்கள் மட்டுமல்ல; [illegible]
[illegible] இவர்களது தாயாரின்

இப்பொழுது ஒரு படம் தயாராவதற்கு நான்கைந்து வருஷங்கள் கூட ஆகின்றன. ஆனால் "விராட பர்வம்" என்ற படத்தை ஏ. நாராயணன் பனிரண்டே

பல படங்களில் நடித்த வி. ஏ. செ
நா[illegible]களில் [illegible]

நாகய்யா "ஐஸ் க்ரீம்"
ருசி பார்த்தது சமீப
காலத்தில் தான்!
நாடக மேடையில் பேசிப் புலியாக
விளங்கிய வேலு நாயரின் இல்லத்தின்
பெயர் "மௌன மந்திரம்" அவர் நடித்
தது ஒரே படத்தில் (சகுந்தலா) தான்
"மௌன மந்திரம்"
முன்பு சென்னையில்
தயாரான மௌனப்
படங்களுக்கு சுமார் 25—
ஆயிரம் ரூபாய் தான் செல
வாகுமாம். ஆனால் ஜி.பி.ஸி.
யின் "லீலா" வுக்கு மட்டும்
ரூ. 45,000 செலவு
ஆயிற்றும்.
ப் பழம்
பிடிக்கும்
ளகிக்கு!
குமாரி ருக்மணி, குமாரி கமலா,
ஹிந்திப் படங்களிலும்
நடித்திருக்கின்றனர்.
பிடில்
ராஜமாணிக்கம்
பிள்ளையிடம் வாய்ப்
பாட்டு கற்றவர் எம். எம்
தண்டபாணி தேசிகர்!
ஒரே புராணக் கதை
பல முறை படமாக
வருவது ஆச்சரிய
மல்ல; ஆனால் முதல்
தடவையாக ஒரு
சமூகக் கதை
(ராஜாம்பாள்)
இரண்டாந்தடவை
யாக படமாய் வரப்
போவது ஆச்சரிய
மல்லவா!
"எம். எஸ். ஸைப்
போல் யாரும்
பாட முடியாது!
தியாகராஜ
பாகவதர்.
கதா நாயகனை
ல்வப்பார்வை கடைசி
லேலம் தான்

இந்திய சென்ஸார் கதை

இந்தியாவில், 1918-ம் வருஷத்துக்கு முன்பு சென்ஸார் போர்டு என்று ஒன்றுமே கிடையாது. 1918-ம் வருஷம் நிருவப்பட்ட 'சினிமோட்டகிராபி சட்டம்' மாஹாணங்களுக்கு சென்ஸார் போர்டுகளை ஸ்தாபித்துக் கொள்ள அதிகாரம் அளித்தது. 1947-ம் ஆண்டு வரை இந்த போர்டு போலீஸ் இலாகாவின் அதிகாரத்திலேயே இருந்து வந்தது. அக்கால போர்டின் நோக்கம்: அப்பொழுதிருந்த அன்னிய ஆட்சிக்கு விரோதமான காட்சிகளைத் தடை செய்வது மட்டுமே. மற்றபடி படங்களில் ஒழுக்கம் முதலியவைகளைப் பற்றி அவர்களுக்குக் கவலையேயில்லை.

இந்த இடைக் காலத்தில் 1927-ம் ஆண்டு, சினிமாத் தொழில் பற்றி விசாரணை நடத்திய 'ரங்காச்சாரி கமிட்டி', மத்திய தணிக்கை போர்டு ஒன்றை நிருவ வேண்டுமென யோசனை தெரிவித்தது. ஆனால், அப்பொழுது ஆட்சி புரிந்து வந்த அந்நிய அரசாங்கத்தினர் இது விஷயத்தில் அக்கறை எடுத்துக் கொள்ளவில்லை. ஆனால், அதற்கு இருபது ஆண்டுகளுக்குப் பின், 1947ம் ஆண்டு, தேசிய சர்க்கார் நியமிக்கப்பட்ட சமயத்தில் மத்திய தணிக்கை போர்டு ஏற்படுத்துவதெனத் தீர்மானித்தார்கள். என்றாலும் 'சினிமோட்டகிராபி சட்ட'த்தில் அதற்கு அவசியமான திருத்தங்கள் பார்லிமெண்ட் சபையில் 1949-ம் வருஷம் டிஸம்பர் மாதத்தில்தான் நிறைவேற்றப்பட்டன. அதன்படிதான் இவ்வருஷம் ஜனவரி மாதம் 15-ம் தேதி முதல், மத்திய தணிக்கை போர்டு அமைக்கப்பட்டு வேலை செய்து வருகிறது.

ஸ்ரீ ஸரஸ்வதி கான நிலையம்

திருவல்லிக்கேணியிலுள்ள ஸ்ரீஸரஸ்வதி கான நிலயத்தினர் சென்ற மாதம் 25-ம் தேதி முதல் இம் மாதம் 4-ம் தேதி வரை ஸ்ரீ தியாகராஜ ஸ்வாமி உத்சவத்தைக் கொண்டாடினார்கள். தியாகராஜ பாகவதர், எம். எம். தண்டபாணி தேசிகர், வி. வி. சடகோபன் போன்ற பலரின் இன்னிசைக் கச்சேரிகள் நடைபெற்றன. ஜவந்தரை ஊர்வலத்துடன் இவ் விழா இனிது முடிவுற்றது.

எண்ணத்தில் அடங்காத
வண்ணப் பொற் சேலைகள்
எத்தனை எத்தனை நிறத்தினிலோ
அவை அத்தனையும் கிடைக்குமிடம்
குறைந்த விலையில்
சிறந்த ஜவுளிகளுக்கு
நம்பிக்கையான இடம்

நவ நாகரீக பார்டர்களில் பலவிதமான பட்டு, மில் புடவைகளும், மற்றும் எல்லா ஜவுளி தினுசுகளும் நியாயமான விலையில் எம்மிடம் கிடைக்கும்

•

ஜெயின் சில்க் ஸ்டோர்ஸ்

(பட்டு & ஜவுளி வியாபாரம்)
காந்தி நகருக்கு அருகில்
62 C, அடையார் பிரிட்ஜ் ரோடு,
அடையாறு :: மதராஸ்-20.

பாரத மங்களுக்கு விசேஷப் பரிசு

வீட்டில் உட்கார்ந்துகொண்டே 14 பாஷைகள் கற்றுக் கொள்ளுங்கள். எந்த பாஷையையும், கொஞ்சம் தெரிந்தாலும், எங்களுடைய '14 பாஷைகள்' என்ற புத்தகம் படித்து ஹிந்தி, வங்காளி, இங்கிலீஷ், சைனா, ஜப்பான் முதலிய 14 பாஷைகளை வீட்டில் உட்கார்ந்துகொண்டே கற்றுக் கொள்ளலாம். புத்தகத்தின் விலை ரூ. 4. தபால் செலவு 12 அணா.

தையல் மிஷின்

துணிகளின் மேல், வித விதமான கொடிகளும், பூக்களும், இலைகளும் தைக்கும் ஊசியுள்ள விதேசி யந்திரம். விலை ரூ. 4. தபால் செலவு 1-4-0. எல்லாவிதமான தையல் வேலைகளையும் கற்றுக்கொள்ளும் டிசைனுள்ள புத்தகம் விலை ரூ. 3. த. செ. அ. 12 தனி. ஆர்டர்கள் வி.பி. மூலம் அனுப்ப இயலாது. சடிதப் போக்குவரத்து ஆங்கிலத்தில் இருக்கவும்.

BENGAL TRADERS
(112 G) P. O. 21, ALIGARH, U. P.

பி. கே. சரஸ்வதி

ஜே. ஆர். ரங்கராஜு எழுதிய "ராஜாம்பாள்" நாவலை அருணா பிலிம்ஸார் படமாகத் தயாரிக்கிறார்கள். அதில் பி. கே. சரஸ்வதி ஒரு முக்கிய பாகத்தில் நடித்து வருகிறார்.

வி. எஸ். சுசீலா

இதய கீதத்தில் நடித்த வி. எஸ். சுசீலா
எம். எஸ். பிக்சர்ஸ் வெளியீடான மோஹன
சுந்தரத்தில் தற்போது நடித்துவருகிருர்

நுனிப்புல்

[22-ம் பக்கத் தொடர்ச்சி]

கவனிக்க வேண்டும். "காமதேனு" படத்தில் ஹோட்டல் காட்சியில் 'ஸர்வ்' பண்ணின அனுபவம் பெற்ற ஜி. சுப்புலக்ஷ்மி இந்தப் பிரச்னையைத் தீர்க்க முன்வரலாம். தமக்கு உதவியாக 'ஸ்ட்ராங்' காப்பி கொடுக்க புதுக்கோட்டை சீனுவைக்கூட அழைத்துக் கொள்ளலாம். எல். நாராயண ராவ் தமக்கு "சிந்தாமணி" படத்தில் கிடைத்த அனுபவத்தை வைத்துக் கொண்டு, 'சுண்டல், கடலை' முதலியன விற்கலாம். ஆனால் ஒரு விஷயம்; இந்த நாராயண ராவுக்கு இந்த நிகழ்ச்சி சம்பந்தமாக வரவு செலவு கணக்கு எழுதும் வேலையை மட்டும் கொடுத்து விடக்கூடாது. அவர் 'யானைக்கு அல்வா வாங்கிப் போட்டதாக பொய்க் கணக்கு எழுதும் 'கணக்குப் பிள்ளை' அல்லவா? "வேலைக்காரி" எம். வி. ராஜம்மா பழம் விற்றால், புளித்த பழமானாலும் நல்ல விற்பனையாகும்! இந்த விற்பனை இலாகாவின் மானேஜ்மென்டை நடிகர் குளத்து மணியிடம் விட்டுவிட்டோமானால் அவர் ஜமாய்த்து விடமாட்டாரா? ஆனால் தப்பித் தவறி 'பொட்டை' கிருஷ்ணமூர்த்தியிடம் கொடுத்தாலோ (மாலினியில் சம்பத்திடம் ஏமாந்ததுபோல) கடன் வியாபாரத்தில்தான் நடக்கும்.

• • •

நிகழ்ச்சியில் சில, சில ரசிகர்களுக்குத் தலைவலியை உண்டுபண்ணக் கூடும். ஆகவே, எம். எஸ். சுந்தரிபாய்க்கும் வேலை கிடைத்துவிடுகிறது. "தலைவலிக்கு ஒரு மாத்திரை" என்று பாடிக்கொண்டு எம். எஸ். சுந்தரிபாய் தலைவலி மாத்திரையை விற்கவந்தால், தலைவலி இல்லாதவர்கள்கூட மாத்திரை வாங்குவார்கள்! தலைவலி மாத்திரையின் பெருமை நன்ருகத் தெரிந்தவரல்லவா அவர்!

• • •

நிகழ்ச்சியின் கடைசி 'ஐட்டம்' ஆக ஒரு 'இன்னிசை'க் கச்சேரியை வைத்துக் கொள்ளலாம். டி. ஆர். ராமச்சந்திரன் - மிருதங்கம்; கே. சாரங்கபாணி - பிடில்; ஜி. பட்டு ஐயர் - ஆர்மோனியம்—இவைகளைப் பக்க வாத்தியமாகக் கொண்டு, பி. ஆர். மங்களமும், கே. எஸ். அங்கமுத்துவும் 'இன்னிசைக்' கச்சேரி செய்ய ஆரம்பித்தால், கூட்டம் கலைந்துவிட்டது என்று சொல்ல 'அனௌன்ஸர்' அவசியமே யிராது!

• • •

இந்த நிகழ்ச்சிக்கு 'டிக்கெட்' விற்கும் வேலையை எம். வி. மணியிடம் தான் கொடுக்க வேண்டும். ஏனெனில், அவர் தான் கைராசிக்காரர். நாடக மேடையில் அவர் நடித்துவந்த அந்த நாட்களில், அவர் முதல் டிக்கெட்டை விற்றுவிட்டுப் பிறகுதான் மேக்கப் போட்டுக் கொள்ளுவது வழக்கம்.

கடைசியாக, 'கேட் கீப்பர்'களாக இருந்து நடிகர்களாக வந்தவர்களான கே. ஆர். ராம் சிங்குக்கும், எம். ஏ. கணபதிபட்டுக்கும் இங்கேயும் அதே வேலையைக் கொடுத்தால் அவர்கள் அதைத் திறம்படச் செய்வார்கள் என்பதில் சந்தேகமில்லை.

சினிமா நடிகர்

நீங்கள் சினிமாவில் நடித்து மாதம் ரூ. 100/- முதல் 1500 வரை சம்பாதிக்கவிரும்பினால் இன்றே எழுதுங்கள். உங்களுக்கு அதிகப் படிப்பு இல்லாவிட்டாலும்பாதகமில்லை.

Director:

ANAND - FILM - SERVICE

Near Sitlatemple (Sec. 201/14)

AMRITSAR.

டி. ஆர். ரஜனி

(14-ம் பக்கத் தொடர்ச்சி)

பெறவில்லை. திறமையுடன் நடித்திருந்தும் ரஜனியின் திறமை வியாபகம் அடையவில்லை. இந்த துரதிருஷ்டத்திற்கு, பாவம், ரஜனி என்ன செய்யக் கூடும்!

மதனமாலாவில் நடித்ததுமுதல் ரஜனி தொடர்ந்து கதாநாயகியாகவேதோன்றுவார் என்றுதான் ரஸிகர்கள் எதிர்பார்த்தனர். ஆனால், ஆநந்தன் கனவு படத்தில் அவர் ஒரு சாதாரண உப பாத்திரத்தை ஏற்றுக் கொண்டு நடித்ததும் ரஸிகர்கள் மிகுந்த ஏமாற்றம் அடைந்தனர். அவர் மதனமாலாவில் பெற்ற புகழை பக்ஷி ராஜாவின் பவளக்கொடி மேலும் ஒரு படி கீழிறக்கிவிட்டது. இந்த சமயத்தில் மைசூரில் தயாரான நாக கன்னிகா கன்னட தமிழ்ப் படங்களில் ரஜனி நடனம் மட்டும் ஆடிவிட்டு வந்தார்.

ரஜனி கடைசியாக நடித்திருக்கும் சௌதாமினி தமிழ்ப் படம் சமீபத்தில் வெளி வந்திருக்கிறது. தெலுங்கு பாஷையிலும் தயாரிக்கப்பட்டுள்ள இப்படத்தில், ரஜனி, ரஸிகர்கள் திருப்தியடையக் கூடிய வகையில் நடித்திருக்கிறார்.

சொஸைட்டி பிலிம்ஸ் என்ற புதுக் கம்பெனியார் ஸ்டார் கம்பைன்ஸ் ஸ்டுடியோவில் ஒரு தமிழ்ப் படத்தைத் தயாரித்துக்கொண்டிருக்கின்றனர். பெயர் நிர்ணயிக்கப்படாத இந்தத் தமிழ்ப் படத்தில் தான் ரஜனி தற்போது நடித்துக் கொண்டிருக்கிறார்.

சினிமா உலகில் இப்பொழுது பிரசித்தி பெற்றிருக்கும் "ரஜனி" என்ற அழகான பெயர் அவரது சொந்தப் பெயர் அல்ல. பத்து வருஷங்களுக்கு முன்பெல்லாம் ராஜபாலா என்ற பெயருடன் சினிமாப் படங்களில் தோன்றி வந்தார் ரஜனி. ஆனால் அதுகூட அவரது உண்மைப் பெயரல்ல. "கோவிந்தம்மா!" என்று இப்பொழுது யாராவது அழைத்தால், ரஜனி மின்சாரம் தாக்கப்பட்டவர்போல் திரும்பிப் பார்ப்பார். ஏனென்றால், அந்தப் பெயர்தான் அவருடைய மறைந்து போன—அசல் பெயர்!

ரஜனிக்கு தற்போது 24 வயதாகிறது அவர் 1928-ம் வருஷம் பிப்ரவரி மாஸம், 6-ம் தேதியன்று பிறந்தவர். ரஜனியுடன் கூடப் பிறந்தவர் ஒரே ஒரு தங்கை மட்டும்தான். ராணிபாலா என்ற புனைபெயருடன்—தங்கை பத்மாவதி பல படங்களில் நடனம் ஆடியிருக்கிறார். முதன் முதலாக உதயசங்கரின் கல்பனா படத்தில் கொஞ்சம் ஆடும் பாக்கியம் ராணிக்குக் கிடைத்தது. பிறகு கோகுலதாஸி, துரோகி (தெலுங்கு), மோஹினி, சொப்பன சுந்தரி, சௌதாமினி ஆகிய படங்களில் அவர் நடனம் ஆடியுள்ளார். ஆனால், பரத நாட்டியத்தை சாஸ்திரோக்தமான முறையில் கற்றுக் கொண்டு, மேடைமீது ஆடிப் புகழ் பெறவேண்டும் என்பதே ராணியின் அவா. அதற்கிணங்க அவர் படங்களில் ஆடுவதை நிறுத்திக் கொண்டு, காஞ்சிவரம் எல்லப்ப நட்டுவனாரிடம் இப்பொழுது பரத நாட்டிய சிக்ஷை பெற்றுவருகிறார்.

ரஜனியின் தங்கை ராணிபாலா

ராணிபாலாவுக்கு இன்னும் விவாஹம் ஆகவில்லை. ஆனால் ரஜனிக்கு விவாஹம் ஆகிவிட்டது. அவர் ராமச்சந்திரன் என்பவரை (செஞ்சுலக்ஷ்மி படத்தில் நடித்து வந்தபோது) குலாசாரப்படி திருமணம்

செய்து கொண்டிருக்கிறார். இவர்களுக்கு ஏழு வயதில் நளினி என்ற பெயருடைய ஒரு பெண் குழந்தை உள்ளது.

ராமச்சந்திரன் சென்ற யுத்தகாலத்தில் துருப்புகளின் பொழுது போக்குக்கு ஏற்பாடு செய்யும் பொறுப்பை ஏற்றுக் கொண்டிருந்தார்.

ரஜனியும், குழந்தை நளினியும்

அது சம்பந்தமாகவே ரஜனிக்கும் ராமச்சந்திரனுக்கும் பரிச்சியம் ஏற்பட்டது. துருப்புகளுக்கு களிப்பூட்டுவதற்காக ரஜனியின் நடன விருந்தை ராமச்சந்திரன் பலமுறை ஏற்பாடு செய்திருக்கிறார். நாளடைவில், துருப்புகளுக்கு களிப்பூட்டிவந்த ரஜனியை அவர் தமக்கே களிப்பூட்டும்படியும் திருப்பிவிட்டார்! ஆம்; ராமச்சந்திரன் ரஜனியைத் தம் மனைவியாக்கிக் கொண்ட விஷயத்தைத்தான் குறிப்பிடுகிறேன்.

ஆண்-பெண் நடன ஜோடிகள் புதிது புதிதாய் தோன்றிக் கொண்டிருந்த காலம் அது. எனவே ராமச்சந்திரனுக்கும் நடனம் ஆடக் கற்றுக் கொண்டு தம் மனைவியுடன் ஜோடியாய் ஆட வேண்டும் என்ற ஆசை ஏற்பட்டது. அதற்கிணங்க ரஜனியும் ராமச்சந்திரனும் ஜி. கே. சேஷகிரி நடத்திவந்த "ரினைஸான்ஸ் தியேட்டர்" என்ற நடனப் பள்ளியில் சேர்ந்தனர். சிறிது காலப் பயிற்சிக்குப் பின்னர் தம்பதிகளிருவரும் ரினைஸான்ஸ் கோஷ்டியுடன் சேர்ந்தாற் போலவே பல ஊர்களுக்குச் சென்று, பொதுஜனங்கள் முன்னிலையிலும், துருப்புகளின் பொ[illegible]து போக்கிற்குமாக நடனம் ஆடிவிட்டு வந்தனர்.

இந்த சமயத்தில்தான் விஸ்வாமித்ரா தமிழ் படத்தில் ஆடுவதற்காக கோலாப்பூருக்குச் சென்ற ரஜனிக்கு வால்மீகி ஹிந்திப் படத்தில் ஆடும் பாக்கியம் கிடைத்தது. வலுக்கட்டாயமாக, ராமச்சந்திரன் ரஜனியுடன் வால்மீகி படத்தில் நடனம் ஆடியதைப் பற்றித்தான் முன்பே கூறியிருக்கிறேன்.

ராமச்சந்திரனுக்கு படங்களில் நடனம் ஆடவேண்டும் என்ற ஆசையே கிடையாது. ஆதலால், வால்மீகி படத்துக்குப்பின் வெறுமனே நடனம் ஆடுவதைக் கூட அவர் நிறுத்திவிட்டார்.

இயற்கை அழகும், புன்னகை தவழும் சுந்தரமான முகமும், ரோஜாப் பூ போன்ற செந்நிறமும், குறுகுறுப்பான கண்களும், பருமனில்லாத துவளும் தேகக் கட்டும், சுமார் ஐந்தடி உயரமும் கூடியவர் ரஜனி. அவரது இயற்கை அழகு செயற்கைத் தொழிலான சினிமாவிலும் நன்கு சோபிக்கக் கூடியதாயிருக்கிறது.

ரஜனிக்கு தமிழ், தெலுங்கு, ஹிந்தி ஆகிய பாஷைகள் தெரியும். தம்முடைய உடல் பருமனைக் கட்டுப் படுத்துவதற்காக ஓடுவது, ஆடுவது, நீந்துவது முதலியவைகளைச் செய்து வருகிறார். சுமாராய் பேசி, நன்கு நடிக்கக் கூடிய திறமை தமக்கு உண்டு என்பதை மதனமாலை படத்தின் மூலம் ரஜனி நிரூபித்திருக்கிறார். ஆனால் ஆட்டம், பாட்டு, நடிப்பு, அழகு ஆகிய எல்லாமே ஒன்று சேர்ந்து உருவெடுத்துள்ள ரஜனியை நம் பட முதலாளிகள் இன்னமும் ஏனோ சரிவரப் பயன்படுத்திக் கொள்ளவில்லை. ரஜனியைப் பொறுத்த வரையில், எதிர்காலத்தில் அவர் ஒரு முன்னணி நக்ஷத்திரமாய் விளங்க விரும்பினால், இனிமேலாவது கண்ட கண்ட உப பாத்திரங்களில் தோன்றுவதை முதலில் நிறுத்தவேண்டும். கூடியவரையில் கதாநாயகி வேஷங்களைப் பெறுவதற்கான தீவிர முயற்சிகளைச் செய்ய வேண்டும். இதில் அவர் வெற்றி பெறுவார் என்றே நம்புகிறேன்.

பிரம்மலோகம்

ஔவையார்

ஜெமினியின் ஔவையார் படத் தயாரிப்பு விஷயமாக ஸ்ரீ. எஸ். எஸ். வாஸன் முனைந்து விட்டிருக்கிறாராம். இதுவரை தயாராகியது போக மிகுதியாக உள்ள காக்ஷிகள் யாவும் அவரது மேற்பார்வையில் தயாராகி வருகின்றன. சமீபத்தில் கள்ளிக் கோட்டைக்கு அருகில் சில வெளிப்புறக் காட்சிகள் படமாக்கப்பட்டன.

பாதாள பைரவி

விஜயா ப்ரொடக்ஷன்ஸின் பாதாள பைரவி தமிழ்ப் படத்தின் 'எடிட்டிங்' வேலைகள் மும்மரமாக நடைபெற்று வருகின்றன. இப் படம் நிச்சயம் இம்மாதத்தில் திக்விஜயத்திற்குக் கிளம்பிவிடும். கே. வி. ரெட்டியின் டைரெக்ஷனில், நாகி ரெட்டியின் மேற்பார்வையில் தயாராகியுள்ள இப்படத்தில் கே. மாலதி, என். டி. ராமாராவ், ரேலங்கி, லக்ஷ்மிகாந்தம் ஆகியோர் நடித்திருக்கின்றனர்.

பராசக்தி

நேஷனல் பிக்சர்ஸ்—ஏவி. எம். கூட்டுத் தயாரிப்பான பராசக்தியும் இடை யிடையே படமாகி வருகிறது. கணேசன் என்ற புது நடிகரும், ஜூனியர் லக்ஷ்மி ராஜ்யமும் பிரதம பாகங்களில் நடிக்கும் இப் படத்தை கிருஷ்ணன்-பஞ்சு டைரெக்ட் செய்து வருகிறார்கள்.

சந்திரஹாரம்

விஜயாவின் மூன்றாவது தயாரிப்பான சந்திரஹாரம் காமேஸ்வர ராவ் டைரெக்ஷனில் வேகமாகப் படமாகி வருகிறது. இப்படம் தெலுங்கு — தமிழ் இரு பாஷைகளிலும் தயாராகி வருகிறது. என். டி. ராமராவும், ஸ்ரீ ரஞ்சனி ஜூனியரும் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர் இந்தப் படத்தில்.

நண்பன்

முற்றும் புதிய நடிகர். நடிகைகளே நடிக்கும் ஸி, ஸி. ப்ரொடக்ஷன்ஸின் நண்பன் மலையாளப் படம் கோவை சென்ட்ரல் ஸ்டுடியோஸில் படமாகி வருகிறது.

மோகன சுந்தரம்

எம். எஸ். பிக்சர்ஸின் வெளியீடான மோகன சுந்தரம் படப் பிடிப்பு முடிவடையும் நிலையில் இருக்கிறது. டி. ஆர். மஹாலிங்கம் நாம் இருவருக்குப்பின் நடிக்கும் முதல் சமூகப் படம் இது. ஜே. ஆர். ரங்கராஜுவின் மிகவும் சுவாரஸ்யமான நாவல்களில் இதுவும் ஒன்று. எஸ். வரலக்ஷ்மி, பி. ஆர். பந்துலு, கே. சாரங்கபாணி, வி. எஸ். சுசிலா, மற்றும் பலர் நடிக்கும் இப் படத்தை ஏ. டி. கிருஷ்ணஸ்வாமி டைரக்ட் செய்து வருகிறார். இப் படத்தின் நெகட்டிவ் உரிமைகளை எம். எஸ். பிக்சர்ஸார் வாங்கி யிருக்கின்றனர். இப்படம் அடுத்த மாதத்தில் திரையிடப் படலாமென்று தெரிகிறது.

தேவகி

சீக்கிரமே திரைக்கு வரக் கூடிய படங்களில் கணபதி பிக்சர்ஸின் தேவகியும் ஒன்றாக இருக்கும். ஆர். எஸ். மணியின் டைரெக்ஷனில் மாடர்ன் தியேட்டர்ஸ் ஸ்டுடியோவில் இப்படம் பூர்த்தி அடைந்து வருகிறது. மாதுரிதேவி, வி. என். ஜானகி, பாலச்சந்தர், பிரதம பாகங்களில் நடிக்கின்றனர். இப்படத்தைத் தெலுங்கிலும் தயாரிப்பதற்கான முயற்சிகள் நடைபெற்று வருகின்றனவாம்.

மணமகள்

என்னெஸ்கே பில்ம்ஸ் மணமகள் டைரெக்ஷன் பொறுப்பை என். எஸ். கிருஷ்ணனே மேற்கொண்டு விட்டார். படப்பிடிப்பு அநேகமாக முடிவடைந்துவிட்டது ஜூன் மாதத்தில் படம் திரைக்கு வரக் கூடுமென்று தெரிகிறது. டி. எஸ். பாலையாவும்—லலிதாவும் இப்படத்தில் காதல் ஜோடிகளாக கன குஷியாக நடித்திருக்கிறார்களாம். மற்றும், கிருஷ்ணன்—மதுரம், சஹஸ்ரநாமம் ஆகியோர் இப் படத்தின் முக்கிய பாகங்களில் நடிக்கின்றனர்.

தீக்ஷா

பிரகாஷ் புரொடக்ஷன்ஸின் தீக்ஷா தெலுங்கு ஜூன் மாத வெளியீடாக இருக்குமாம். ஜி. வரலக்ஷ்மி, சேது, பிரதம பாகங்களில் நடிக்கும் இப்படத்தின் படப் பிடிப்பு வேலைகள் முற்றுப் பெற்று 'எடிட்டிங்' வேலைகள் நடந்து வருகின்றனவாம்.

அமர கவி

நாகூரின் மேற்பார்வையில் அமரகவி படப்பிடிப்பு நியூடோனில் ஜரூராக ஆரம்பமாகிவிட்டது. பாகவதர்-ராஜகுமாரி தோன்றும் காட்சிகள் இப்பொழுது தயாரிக்கப்பட்டு வருகின்றன.

ராணி

ஜூபிடரின் ராணி படப் பிடிப்பு மும்மரமாக ஏ. எஸ். ஏ. சாமியின் டைரெக்ஷனில் நடைபெற்று வருகிறது. உடனுக்குடன் இதே படம் சம்கீ என்ற பெயரில் ஹிந்திப் படமாகவும் தயாராகி வருகிறது. பானுமதி, பாலசந்தர், எம். எஸ். எஸ். பாக்கியம் பிரதம பாகங்களில் நடிக்கும்படம் இது. சமீபத்தில் பானுமதி, எம். எஸ். எஸ். பாக்கியம் இருவரும் சம்பந்தப்பட்ட பெரிய காக்ஷி ஒன்று காமிராவிற்குள் புகுந்ததாம்.

சிங்காரி

சீக்கிரமே திரையிடப் பெற விருக்கும் படங்களில் சிங்காரியும் ஒன்றாக இருக்கும். சமீபத்தில் கதையின் இறுதிக் காட்சி படமாகியது. லலிதா-பத்மினி, டி. ஆர். ராமச்சந்திரன், சஹஸ்ரநாமம், எம். எஸ். எஸ். பாக்கியம், ஆகபலர் அக் காட்சியில் பங்கெடுத்துக் கொண்டார்கள்.

ராஜாம்பாள்

டெக்னிஷ்யன்கள் பலரின் கூட்டுக் கம்பெனியான அருணா பில்ம்ஸின் ராஜாம்பாள் துரிதமாய் படமாகி வருகிறது. மனோஹர் என்ற புதிய முகத்தை இப் படத்தில் கதாநாயகனாகப் போட்டிருக்கிறார்கள். மற்றும் மாதுரிதேவி, பி. கே. சரஸ்வதி, கே. சாரங்கபாணி, வி. ஆர். ராஜகுமாரி, பாலசந்தர், டி. வி. சேதுராமன் முதலியோரும் நடிக்கும் இப் படத்தை ஆர். எம். கிருஷ்ணஸ்வாமி டைரெக்ட் செய்து வருகிறார்.

ஜீவித நௌகா

கே. கே. ப்ரொடக்ஷன்ஸாரின் ஜீவித நௌகா மலையாளப் படம் சென்ற மாதம் 14-ம்தேதி கேரளாவில் திரையிடப்பட்டு விட்டது. அவர்கள் தமிழ்ப் படத்தை உருவாக்குவதில் கவனம் செலுத்தி வருகின்றனர். வேம்புவின் டைரெக்ஷனில் ஆலப்புழை உதயா ஸ்டுடியோவில் இதற்கான வேலைகள் ஜரூராக நடைபெற்று வருகின்றன. தீக்குறிச்சி சுகுமாரன் நாயரும் — பி. எஸ். சரோஜாவும் இப் படத்தின் பிரதம பாகங்களில் நடிக்கின்றனர்.

மாதவிடாய் நின்றுபோனதா?

நிகரற்ற மருந்து (தேவி பில்ஸ்) Regd. by the Central Drugs Laboratory of Govt. of India. Under No. CDL/688

எக்காரணத்தினாலும் எத்தனை மாதமானாலும் நின்றுபோன மாதவிடாய் அதிசுலபமாகவும் அதிசீக்கிரமாகவும் தவறாமல் உடனே வெளியாகும். அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம் உத்திரவாதமுள்ளது. போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். விலை ரூ. 8-8-0 சாதாரண கேஸ்களுக்கு (Ordinary) ரூ. 10-8-0 மாதங்களான கேஸ்களுக்கு (Special) (தபால் செலவு தனி)

கர்ப்பத்தடை

நிகரற்ற மருந்து (ஸ்பெக் பில்ஸ்)

Government Registered No. 266.

12 நாட்கள் சாப்பிட்டால் ... க்கிற்கு சாஸ்வதமாக கருவைத்தடுக்கும். மாதவிடாய் தவறாது. அநேக நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்ற திவ்ய ஔஷதம். போலி மருந்துகளை வாங்கி ஏமாறாதீர்கள். (ஸ்பெக் ஜெல்லி) உபயோகித்தால் டெம்பரவரியாக கருவை தடுக்கும். பில்ஸ் விலை ரூ. 12-0-0 ஜெல்லி விலை ரூ. 6-8-0 (த. செ. தனி)

M/grs: SEENU & CO., Post Box, 1638, (R) MADRAS-1.

பிராஞ்ச்: 134 SERANGOON ROAD. சிங்கப்பூர்.

சிலோன் ஏஜண்ட் NEW COLOMBO MEDICAL STORES, 82. MAIN ST., கொழும்பு-11

நடனம் ஆடினர்

கிராம்மிய நடனங்களில் ஒவ்வொன்றாக இப்போது மேடை நடனங்களின் நிகழ்ச்சிகளில் இடம் பெற ஆரம்பித்திருக்கின்றன. கோலாட்டம், பின்னலாட்டம் முதலியவைகள் ஏற்கெனவே மேடைக்கு வந்துவிட்டன. இவைகளிலாவது சில நுட்பங்களும் லாகவமான அசைவுகளும் ரஸிக்கும்படியாக உள்ளன. ஆனால் நடனம் முழுவதும் அநேகமாக கிராம்மிய பாணியிலேயே இருந்தால் எதிர்பார்த்துச் செல்லும் அளவுக்கு ரஸனை ஏற்படுவதில்லை. சென்ற மாதம் 8ம் தேதியன்று செயின்ட் மேரீஸ் மண்டபத்தில் ஸ்ரீ. கச்சாலேஸ்வரர் கான சபாவின் ஆதரவில் நடைபெற்ற ரமணி கோபால் கோஷ்டியினரின் நடனக் கச்சேரி ஏறக்குறைய இந்த முறையிலேயே காணப்பட்டது.

கதக்களிப் பாணியில் தாமோதரன் ஆடிய மயில் நடனம், வேடன் நடனம், இந்த இரண்டும் மிகத் தெளிவான பாவங்களுடனும் கலாரஸனையுடனும் விளங்கின. ரமணி கோபால், தாமோதரர் முதலியோர் பங்கெடுத்துக் கொண்ட பஞ்சாபி, ஜிப்ஸி நடனம், காற்றுடி நடனம் முதலியவைகளில் சுவாரஸ்யம் உள்ள அம்சம் எதையுமே காணோம். ரமணி ஆடிய மார்வாரி நடனத்தில், அடிக்கடி சுற்றிச் சுற்றி வந்துகொண்டிருந்ததைக் கொஞ்சம் குறைத்துக்கொண்டிருக்கலாம். ரமணியின் பாம்பாட்டி நடனம் சுமாராகக் காணப்பட்டது. ஆனால், அதிலும் இன்னும் பயிற்சி செய்யவேண்டிய நெளிவான அசைவுகள் நிறைய உள்ளன. "கவாலி நடனம்" என்ற அம்சம் நிகழ்ச்சியில் இடம் பெற்றிருந்தது. அதுவும் எதிர்பார்த்ததற்கு மாறாக ஒரு ஹிந்தி மெட்டின் பாட்டுக்கு ஆட்டமாக அமைந்திருந்தது. இரு மனைவி–புருஷன் என்ற சிறு நடன நாடகக் காட்சி ஹாஸ்யம் பொருந்தியிருந்தது. இரு மனைவிகளோடு கஷ்டப்படும் கணவனின் நிலையைச் சித்தரிக்கும் அந்தக் கற்பனையை, நாட்டியத்தில் உபயோகிக்காமல் சாதாரண நாடகம் ஒன்றில் ஹாஸ்ய நடிகர்கள் உபயோகித்திருந்தால் பொருந்தியிருக்கும். அதில் பங்கெடுத்துக் கொண்ட ராஜம், சந்திரா, கோபால் எல்லோருக்குமே 'அமித நடிப்பு' என்றுதான் சொல்லவேண்டும்.

அன்றையக் கச்சேரியில் அநேகமாக ஆஹார்யமும், வாசிகமும் வடநாட்டுப் பாணியில் அமைக்கப் பட்டிருந்தன. உடையலங்காரத்தை மட்டும் "கதக்" பாணியில் அமைத்திருந்தனரே தவிர "கதக்"கிலுள்ள வேகமான ஜதிகளை மறந்துவிட்டனர். எந்த வகை நடனத்திலும் கவர்ச்சிகரமான அம்சங்கள் நிறைய உள்ளன. அவைகளை மட்டும் ஒன்று சேர்த்து காலப் போக்கிற்கு ஏற்ற கருத்துகளமைத்து ஆடினால் இணையற்றிருக்கும். அன்றையக் கச்சேரி கிராம்மிய மக்கள் தங்கள் சொந்த மனோ சந்துஷ்டிக்காக ஆடும் நடனங்களைப் பார்ப்பது போலவே இருந்தது. அநேக செயற்கை இயற்கை செளகரியங்கள் அமைந்துள்ள "ரமணி கோபால்" கோஷ்டியினர் கலை நோக்கத்தோடு நடனத்தை விருத்தி செய்தால், மற்ற நோக்கங்கள் தாமாகவே பூர்த்தியாவதுடன், நல்ல பிரகாசமான எதிர்காலமும் அவர்களுக்குக் காத்திருக்கிறது என்று சொல்லலாம்.

சென்னை ரஸிக ரஞ்சனி சபையில் கடந்த மாதம் 15ம் தேதியன்று நடந்த செள. இந்திராணியின் நடனம் சாஸ்திரிய மணத்துடன் நன்றாக அமைந்திருந்தது. வர்ணத்தின் இடையிடையே வந்த சொற்கட்டுகளுக்கு ஜதிகளாடும் பொழுது மட்டும் சற்று லாகவம் குறைந்திருந்தது. ஆங்கிகமும், அசைவுகளும் சுத்தமாக இருந்தும், தாளத்துடன் இழைந்து வருவதைப் போன்ற உணர்ச்சி சில சமயங்களில் ஏற்படவில்லை. வர்ணத்தின் நடுவே சிரம பரிகாரத்திற்காக சற்று உள்ளே சென்று வந்தது போன்ற

வைகள் ரஸனையைத் துண்டித்து விடுவது போல இருந்தன. நர்த்தகியின் உடல் நிலைக்கு ஏற்றபடி நீளமுள்ள வர்ணத்தை, சிறியதாக இருந்தாலும் தொடர்ந்து ஆடினல் அதுவே போதும். நீண்ட வர்ணததை வெகு சிரமத்துடன் வேர்த்து வியர்த்து ஆடும்பொழுது ரஸிகர்களுக்கு ஒரு பரிதாப உணர்ச்சிதான் தோன்றுகிறது.

பதங்களில் சில நன்ருக அமைந்திருந்தன. "காலைத் தூக்கி நின்ருடும்" என்ற பதத்தை ஆடியபோது ரஸபாவங்கள் நன்ருக அமையவில்லை. "குடிசை வைத்து" என்ற பாட்டுக்கு ஆட்டம் நல்ல வகையில் குறிப்பிடும்படி அமைந்திருந்தது. "அடாணு" ராகத்தில் அமைக்கப்பட்டிருந்த "தில்லானு"வும் நன்ருகவே ஆடப்பட்டது. நிகழ்ச்சியின் கடைசி அங்கமான "கிருஷ்ண கர்ணாம்ருதம்" என்ற ராகமாலிகை விருத்தத்தை ஆடியபோது லாகவம் கொஞ்சமுமின்றி ரஸனை குறைந்திருந்தது.

எழும்பூர் 'இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆப் பைன ஆர்ட்ஸை'ச் சேர்ந்த பந்த நல்லூர் சொக்கலிங்கம் பிள்ளை செள. இந்திராணிக்கு பயிற்சியளித்திருக்கிறுர். இவர்கள் கச்சேரிக்கு இனிமையான குரலுடையவர்களைக்கொண்டு இசை பாடச்செய்தால் கச்சேரி இன்னும் நன்ருக சோபிக்கும். பின்னணியும் பாட்டும் அபிநயத்தின் ஒரு அங்கமாகவே விளங்குகின்றன. நர்த்தகியின் பாவங்களை சபையினர் நன்ருக ரஸிப்பதற்கு நல்ல பின்னணி கீதம் உதவி புரியும்.

—"நந்தி"

நடன அரங்கேற்றம்

சென்ற மாதம் 30ம் தேதி குமாரி வஸந்தாவின் பரத நாட்டிய அரங்கேற்றம் நடைபெற்றது. அன்றை அரங்கேற்றத்திற்கு ஸ்ரீ. எச். டி. ராஜா தலைமை வகித்தார்.

பால கான நாட்டிய நி[illegible]ம்

தியாகராயநகரிலுள்ள இந்த நிலையத்தினர் இவ் வருஷமும் கோடைகால பரத நாட்டிய வகுப்பை இம் மாதம் 2ந் தேதி முதல் ஆரம்பித்து, தினசரி நடத்தி வருகிறுர்கள்.

இரவில் தனியாக இருக்கும்போது தான் பார்த்துக்கொள்ள வேண்டும்

KOKSHASTRA
(Private)

கொக் சாஸ்திரம்
(இரகசியமானது)

284 படங்களுடன்

விளம்பரத்தில் சரிவரக் கூற முடியாத விஷயங்கள் இதில் அடங்கியுள்ளன.

படிக்கிறவர்கள் நன்ருகவும், தெளிவாகவும், விஷயங்களைப் புரிந்து கொள்ளுவார்கள். நல்ல விதமான 284 படங்கள் இருப்பதால் மார்க்கெட்டில் எம்முடைய கோக் சாஸ்திரம் தான் வெகு நன்ருயிருக்கிறது எனக் கூறப்படுகிறது.

விலை ரூ. 0—12—0

BED ROOM PHOTOS
படுக்கை அறைப் படங்கள்

உங்களுக்கு படுக்கை அறைக் காக்ஷிகளையும், அழகு, வேறு உற்சாகமளிக்கும் காரியங்களையும் தெரிந்து கொள்ள விருப்பமிருந்தால் இன்றே 50 படங்கள் கொண்ட ஒரு செட்டுக்கு ரூ. 2-4-0 அனுப்பிப் பெற்றுக் கொள்ளுங்கள். 25 படங்கள் கொண்ட ஒரு சாம்பிள் செட்டின் விலை ரூ. 1-4-0.

கடிதப் போக்குவரத்து ஆங்கிலத்திலேயே இருக்க வேண்டும்.

INDIA BOOK STORES
(G.M.) Halka No. 22, Amritsar.

சினிமா டைரி

மார்ச்
ஏப்ரல்
1951

3. டூரிங் சினிமா சொந்தக்காரர்களின் தூதுகோஷ்டி பிரதம மந்திரியை பேட்டி கண்டது.
4. நிர்தோஷி தெலுங்குப் படத்தின் பத்திரிகைக் காட்சி சென்னை பாரகனில் நடைபெற்றது.
6. ரோஹிணியின் நிரபராதி தமிழ்ப் படம் சென்னையில் மூன்று தியேட்டர்களில் வெளியாகியது.
11. தூத்துக்குடி கலை ரஸிகர் கழகத்தினர் எம். கே. தியாகராஜ பாகவதருக்கு 'தமிழிசைத் தென்றல்' என்ற பட்டமளித்தனர்.
12. குமாரி (பேபி) கமலா தமது சொந்த பங்களாவான 'கமல் பாக்'கின் கிரஹப்பிரவேசத்தை நடத்தினார்.
14. ஜீவித நௌகா மலையாளப் படம் கேரளத்தில் திரையிடப்பட்டது.
15. விஜயாவின் பாதாள பைரவி தெலுங்குப் படம் ஆந்திராவில் திரையிடப் பட்டது.
17. ஏவி. எம். ஸ்டுடியோவில் மந்திரி கனம் கோபால் ரெட்டிக்கு நாடகக் கழகத்தினர், நாடகங்களுக்கு தமாஷா வரியை நீக்கியதற்காக தங்கள் நன்றியைத் தெரிவித்துக் கொள்ள ஒரு விருந்து நடத்தினர்.
அகில இந்திய கலைஞர்கள் மகாநாடு புது டில்லியில் ஆரம்பமாயிற்று.
21. நக்ஷத்திரங்களின் கிரிக்கெட் ஆட்டப் போட்டி பம்பாயில் நடைபெற்றது.
23. கோவையில் "மனோஹரா" தமிழ்-ஹிந்திப் படங்களின் ஆரம்ப பூஜை விழா நடைபெற்றது.

ஏப்ரல், 1951

1. **சினிமா ரஸிகர்கள் சங்கத்தின்** புது வருஷ நிர்வாகிகள் தேர்தல் நடை பெற்றது.
2. தியேட்டர்களில் புகை பிடிப்பதைத் தடை செய்யும் மசோதா அசெம்பிளியில் நிறைவேறியது.
3. எம். எம். தண்டபாணி தேசிகருக்கு மந்திரி கனம் பக்தவத்ஸலம் 'சங்கீத சாகித்ய சிரோமணி' என்ற பட்டமளித்தார்.
4. "அக்னி பரீட்சை" தெலுங்குப் படத்தின் பத்திரிகைக் காட்சி நடைபெற்றது,
6. தமிழாக்கப்பட்ட "மாயா மாலை" சென்னை நகரில் திரையிடப் பெற்றது.
11. ஏவி. எம். "ஓர் இரவு" படம் வெளியூர்களில் வெளி வந்தது.
நடிகர் முக்கமாலாவின் சொந்தப் பட ஆரம்ப பூஜை நெப்டியூன் ஸ்டுடியோவில் நடைபெற்றது
13. "நவலோகம்" மலையாளப் படம் கேரளாவில் வெளிவந்தது.
14. 'கல்கி'யின் "சிவகாமியின் சபதம்" நாடகம் அரங்கேறியது.
"சௌதாமினி" தமிழ்ப் படம் சென்னை நகரிலும் தமிழ் நாட்டிலும் திரையிடப் பெற்றது.
தெலுங்குப் படம் ஆந்திராவில் திரையிடப் பெற்றது.
20. "கிம்" என்ற ஆங்கிலப் படத்தின் டெக்னிகல் அட்வைஸர் பத்திரிகாசிரியர்களுக்கு அப்படத் தயாரிப்பு பற்றி விளக்கினர்.
22. சென்னை சினிமா ரஸிகர்கள் சங்கத்தில் "கிம்" படத்தின் 'டெக்னிகல் அட்வைஸர்' ஹாபிஸ்ஜி பேசினர்.
24. "ஓர் இரவு" பட டைரெக்டர் ப. நீலகண்டனுக்கு பட நடிகர்கள் ஒரு பாராட்டுக் கூட்டம் நடத்தி பரிசுகள் வழங்கினர்.
29. மதுரை கலாபிமானிகள் சங்கத்தினர் தாங்கள் நடத்திய படத் தேர்தலில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசளித்தனர்.

13414

ரூ. 1000 ரொக்க இனாம்!

நீங்கள் நாடியதெல்லாம் கைகூடும்

எல்லாவிதமான பிரயத்தனம் புரிந்து நீங்கள் மனம் சோர்ந்திருந்தாலும் சரி, இந்த மாய ஜால மோதிரத்தை வாங்கி அணிந்து கொள்ளுங்கள். இதை அணிந்தவுடனே நீங்கள் விரும்பிய நபர் ஆணாயிருந்தாலும், பெண்ணாயிருந்தாலும் தக்ஷணமே வசியமாகி விடுவார். அன்னவர் எவ்வளவு கல்லைப் போன்ற மனம் உடையவராய் இருந்தாலும், ஏழு சமுத்திரங்களுக்கு அப்பால் இருந்தாலும், எல்லாத் தடைகளையும் கடந்து வந்து உங்கள் பேச்சை கேட்டு நடப்பார். இஷ்டப்பட்டவரை நீங்கள் மணப்பீர்கள். இதனால் மலட்டு ஸ்திரீக்கும் புத்திர சந்தானம் உண்டாகும். இறந்தவர்களின் ஆத்மாவோடுபேசலாம். பூமியில் இருக்கும் புதையல் உங்கள் கனவில் தோன்றும், லாடடரி, ஆட்டப்பந்தயம், சூதாட்டம், வழக்கு இவற்றில் ஜெயம் உண்டாகி வெற்றி பெறுவீர்கள், பரீக்ஷையில் தேறுவீர்கள். வியாபாரத்தில் லாபம் உண்டாகும். துஷ்ட கிரகம் சாந்தம் அடையும். தரித்திரம் விலகும். நல்லதிர்ஷ்டம் உண்டாகும். ஜீவிய காலம் சுகமாகவும் சந்தோஷமாகவும் கழியும்.

மாந்திரீக மோதிரம் விலை ரூ. 1-15-0. ஸ்பெஷல் மோதிரம் ரூ. 3-0-0. ஸ்பெஷல் சக்தி மிகுந்தது ரூ. 3-15-0. மின்சார சக்தியைப்போல் உடனே இது பலன் தரும். இந்த மாய மோதிரம் கிரஹணம் போன்ற சமயங்களில் தயார் செய்யப்படுகிறது. சூரியன் தவறுதலாய் மேற்கில் உதித்தாலும், இம் மோதிரத்தின் சக்தி தவறமாட்டாது. அப்படிப் பலன் இல்லையென்றால் இரட்டிப்பு சார்ஜ் வாபஸுக்கு காரண்டி. பலனில்லை என்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 1000 இனாம்! ஒருமுறை பரீக்ஷித்துப் பாருங்கள்.

விவரங்களுக்கு எழுதவும்:

Principal,

The Bengal Mesmerism House (G.M.)

JULLUNDUR CITY.

Printed by P. ARUNACHALAM at Commercial Printing & Publishing House 46, Armenian Street, Madras-1. Edited and Published by P. R. S. GOPAL (Gundoosi), at 25, Godown Street, Madras-1. Telephone: 4316

GUNDOOSI May 1951 Regd. No. M. 4924

விஜயாவின்

பாதாளபைரவி

Directed by **K.V.REDDI**
B.Sc.(HONS)

Produced by....NAGIREDDI & CHAKRAPANI